

கல்கி
KALKI 18.4.1971 40 காசு


she is the bearer of tradition...
IN
CENTURY SAREES
THE
CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.
Century — For 100% cotton textiles
Adroit[CM] 43





கோத்ரேஜின் புதிய வானிஷிங் கிரீம் ஸிந்தெல், உங்கள் வதனத்திற்கு புத்தம்புது ரோஜா மலரின் மெருகேற்றி, எழிலோங்கச் செய்கிறது. சருமத்தில் போட்டதே தெரியாமல் கரைந்து மறைந்து, பட்டுப் போன்ற பளபளப்பை மட்டும் ஒளிவிடச் செய்கிறது ஸிந்தெல்.

ஸிந்தெல், சருமத்தின் இயற்கையான ஈரத்தன்மையை நிலை நிறுத்தி, நாள் முழுவதும் கலியாத புதுமைச் சிலிர்ப்பினை அளிக்கிறது. அழகுப் படிமானமாகவோ, அப்படியேவோ உபயோகிக்கும்போது, ஸிந்தெல் தரும் தூய ரோஜா சுகந்தம் உங்களைக் கவர்ச்சிக் கன்னியாகக் கனியவைக்கிறது.

கொஞ்சிடும் அழகு மிஞ்சிட—ஸிந்தெல்
கோத்ரேஜின் புதிய வானிஷிங் கிரீம். Godrej

ULKA-GSC-2 TAM


நீங்கள்
வழங்கும் தேநீர்
உங்கள் விருப்பத்தை
பிரதிபலிக்கச்
செய்யட்டும்!
Brooke Bond
Super
Dust
Tea
Super
Dust
ப்ரூக் பாண்ட்
சூப்பர் டஸ்ட்
செழுமையான டிகாக்ஷன்
மென்மையான சுவை
ப்ரூக் பாண்ட் சூப்பர் டஸ்ட் — மிக நேர்த்தியான ம

கல்கி

பொருளடக்கம்

விரோதிக்ருது, சித்திரை 5 :: ஏப்ரல் 18, 1971

சந்தா விவரம்:	ஒரு வருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00


பொங்கும்
உவகையில்
குளித்
ததுண்டோ?
fanta
ஃபண்டா ஆரஞ்சு
சுவை இனிதே...
பருகிடவே
எடுக்காதோ தாகம்!
ஃபண்டா கோகா-கோலா
கம்பெனியின் தயாரிப்பு
CMCF-1-152 TAM



மலர் 30
இதழ் 38

இப்போது நாம் தலையிடலாமா?

'கிழக்குப் பாகிஸ்தானில் போராட்டத்தை நிறுத்தி அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும்' என்று ருஷிய ஜனாதிபதி பாகிஸ்தான் ஜனாதிபதிக்குச் செய்தி அனுப்பியிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். இவ்விஷயத்தில் ருஷியா ஒன்றே தலையிட முடியும் என்று நான் பத்திரிகைகளுக்கு எழுதியபின் ருஷிய ஜனாதிபதியின் அறிக்கை வந்துள்ளது.

ருஷியாதான் இச்சமயத்தில் மத்தியஸ்தம் வகிக்கக்கூடிய ஒரே வல்லரசு என்பது என் கருத்து. அமெரிக்கா பிற நாடுகளின் விவகாரங்களிலிருந்து விலகித் தனித்துப்போவதில் முனைந்து விட்டபடியால், அதனால் மற்ற நாடுகளின் விவகாரங்களில் புகுவதற்கு இயலாது. பிரிட்டன் அதிஜாக்கிரதையாக நடந்துகொள்வதற்கும் அவசரப்படாததற்கும் காரணமுண்டு. அது மத்தியஸ்தம் ஏற்க முன்வராது. அதன் மத்தியஸ்தத்தைப் பாகிஸ்தானின் இருதரப்பினரில் எவருமே ஒப்பவும் மாட்டார்கள்.

அண்டை நாட்டு அரசாங்கத்துக்குக் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டால் இந்தியாவுக்கு நன்மை என யாரேனும் எண்ணினால் அது மடமையே ஆகும். சுற்றுப்புற நாடுகள் சுபிட்சமாகவும் ஒழுங்காகவும் இருந்தால்தான் இந்தியாவுக்கு நல்லது.

குழம்பிய எண்ணங்களோடு எதையும் தெளிவாகக் காண முடியாது. உணர்ச்சி வேகத்துக்கு இடம் தந்துவிட்டால் விவேகம் கலங்கி விடுகிறது. மேற்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த தமது சக பிரஜைகளே தம் மீது யதேச்சாதிகாரம் செலுத்துவதை எதிர்த்து விடுதலை உரிமை கோருகின்ற வங்காளி முஸ்லீம்களிடம் நமக்கு அநுதாபம் இருப்பது நியாயமே. ஆயினும் இவ்விஷயத்தில் உணர்ச்சி வேகங்களைப் பின்தொடர்ந்து நம் தேசத்துக்கு நஷ்டம் தரும்படியான முறைகளைப் பின்பற்றலாகாது. இந்தக் கிளர்ச்சியின் இறுதி விளைவாகப் பாகிஸ்தான் இரண்டாகப் பிளந்து போவதாகவே வைத்துக் கொண்டாலும், அதற்குப் பின்னரும் பாகிஸ்தான் என்கிற ஒரு தேசம் இருக்கவே செய்யும். அப்போது நம்மிடம் மாளாத கசப்புக் கொண்ட நாடாக பாகிஸ்தானை இப்போதே நாம் ஆக்கிக் கொள்ளலாகாது.

''பங்களா தேஷ்'' என்பதை அங்கீகரிக்கும் விஷயத்தில் இந்தியா மற்ற வல்லரசுகளின் ஸ்தானத்தில் இல்லை. வல்லரசுகளும் மற்ற நாடுகளும், 'பங்களா தேஷை' அங்கீகரிப்பது பாகிஸ்தான் பேரில் போர் நடத்துவதாகக் கருதப்படாது. அது வல்லரசுகளின் உரிமை மாத்திரம் ஆகும். ஆனால் இந்தியா அப்படிச் செய்தால் பாகிஸ்தான் சர்க்காருக்கு எதிராக பங்களா தேஷின் முயற்சியில் இந்தியா கூட்டாளியாகச் சேர்ந்து விட்டது என்றே கருதப்படும்.

பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யா கான் அவர்கள் கிழக்குப் பாகிஸ்தானியரிடம் சரணாகதி அடையாத வரையில், அல்லது தாம் தோற்றுப் போனதாக ஒப்புக் கொள்ளாத வரையில், பங்களா தேஷை இந்தியா அங்கீகரிக்குமாயின், அது பங்களா தேஷுடன் பாரதம் பிணைப்புக் கொண்டு பாகிஸ்தானை எதிர்த்து யுத்தப் பிரகடனம் செய்வதற்குச் சமானமே என்று கருதப்படும். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உடனடியாகப் போர் மூள வேண்டும் என்று நாம் விரும்பினாலொழிய இவ்விதம் முடிவு செய்வது தேசத்துக்கு நன்மையாகாது. சுதந்திர பங்களா தேஷ் என்று அங்கீகரிப்பதற்கும் அங்கீகரிக்காததற்கும் வல்லரசுகள் வழி காட்ட வேண்டும். இந்தியா முதல் அடி வைக்கலாகாது. பங்களா தேஷை அங்கீகரித்தால் ஹிந்துக்களுக்கும் நமது முஸ்லீம் மக்களுக்கும் இடையே தற்போதுள்ள ஒற்றுமைக் குறைவு மேலும் அதிகமாகும். டில்லி சர்க்கார் பங்களா தேஷைச் சுதந்திர தேசமாக இது வரையில் அங்கீகாரம் செய்யவில்லை என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

நமது ஏராளமான மக்கட் தொகைக்கு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வேலைகளைத் தேடிக் கொடுப்பது; வரியாக வசூலிக்கும் நிதியளைத்தையும் கபளீகரம் செய்யுமளவுக்குப் பெருகி வரும் உற்பத்திக்கு உதவாத ஊழியர் பட்டாளத்தை ஒழுங்கு செய்வது; அண்டை நாட்டாரிடம் நட்பு இல்லாததால் அவர்களுக்குப் பயந்து நாம் மிகையாக ராணுவச் செலவு செய்யும் நிலைமையைச் சீர்படுத்துவது; மகத்தான சுமையாக ஏறிவிட்ட அந்நியக் கடன்களுக்காக நாம் தரவேண்டியுள்ள பெருத்த தவணைப் பணத்தைச் சமாளிப்பது; வரிப் பணத்தை மக்களுக்கான திட்டங்களுக்கு மட்டும் பயன்படுத்தாமல் அதைச் சர்க்கார் தொழில்களில் முதலீடு செய்து விரயங்களை உண்டாக்குவதைத் தவிர்ப்பது — இவையே இன்று நம் பிரச்னைகளைத் தீர்க்க உதவும் கொள்கைகள். இன்றைய சர்க்காரின் கொள்கைகளை மாற்றியமைத்தாக வேண்டும். விஷயஞானமற்ற மக்களிடம் எப்படி வோட்டுப் பெறலாம் என்ற சிந்தனையே சர்க்காரைப் பேயாகப் பிடித்து ஆட்டுகிறது. அந்தப் போராட்டத்திலிருந்து விடுபட்டுச் சர்க்கார் இப்போது செய்ய வேண்டியது, இவ்விதம் கொள்கைகளை மாற்றிக் கொள்வதே.

★

ஸ்ரீ மஸானி தந்துள்ள கணக்கை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. வாக்காளர்களில் இருபத்தைந்து சதவிகிதத்தினரே ஸ்ரீமதி இந்திராவின் கட்சிக்கு வோட்டுப் போட்டிருப்பதாக அவர் எடுத்துக் காட்டுகிறார். இந்த இருபத்தைந்து சதவிகிதத்திலும் விஷய ஞானமுள்ளவர் எவ்வளவு, இல்லாதவர் எவ்வளவு என்ற கணக்கில் நாம் இறங்கத் தேவையில்லை. இந்த இருபத்தைந்து சதவிகிதத்தைப் பெற என்னென்ன உபாயங்கள் கடைப்பிடிக்கப்பட்டன என்பதையும் ஆராய வேண்டியதில்லை.

மக்களின் தீர்ப்புப் பெற்று விட்டதாகப் பிரதமர் சொல்கிறார். முக்கால்வாசிக்கு மேல் எழுத்தறிவற்ற இருபத்தைந்து சத வாக்காளரின் ஆதரவான தீர்ப்பை ஸ்ரீமதி இந்திரா பெற்று விட்டார் என்று ஒரு நிருபர் எழுதியுள்ளார். ஆயினும், ஸ்ரீமதி இந்திரா காந்தியின் ஆட்சிக்கு ஆதரவு வெள்ளமாகப் பிரவகித்திருப்பது போல் தோன்றுகிறது

என்ன சேதி?

டைரக்டர் சுப்பிரமணியம்

தேசபக்தரும், பிரபல சினிமா டைரக்டரும், படத் தயாரிப்பாளரும், நடிகருமான ஸ்ரீ கே. சுப்பிரமணியம் காலமானது குறித்துப் பெரிதும் வருந்துகிறோம்.

ஸ்ரீ கே. சுப்பிரமணியம் மௌனப் படம் வெளியாகிக் கொண்டிருந்த காலத்திலிருந்தே தமிழ்ப் படத் துறையில் புகுந்து சேவை செய்யலானார். பல புதிய முகங்களை வெள்ளித்திரையில் அறிமுகம் செய்து வைத்தவர் அவர். இவர்களில் பலர் திரை உலகில் பெரும் புகழ் அடைந்தார்கள். தேசபக்தி மிகுந்த அவர் அந்நாளைய பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் பேராசிரியர் கல்கி அவர்களின் பிரசித்தி பெற்ற "தியாக பூமி"யைப் படமாக்கிப் பெருமை யுற்றார்.



திரு கே. சுப்பிரமணியம்

சேவாசதனம், அனந்தசயனம், விகடயோகி போன்ற வெற்றிப் படங்களைத் தயாரித்தவர் அவர். முதன்முதலில் குழந்தை நட்சத்திரத்தைத் தமிழ்த் திரை உலகில் அறிமுகப்படுத்தியவர் என்பதுடன் தென்னிந்தியாவில் முதன் முதலில் ஹிந்திப் படத்தைத் தயாரித்து டைரக்ட் செய்தவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய பல மொழிப் படங்களையும் டைரக்ட் செய்திருக்கிறார். புனா நகரில் சினிமாத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் தொடங்கப்படப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்.

தென்னிந்தியா பிலிம் வர்த்தக சபையின் தலைவராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டிருக்கிறார். தமிழகத்தின் கலைச் செல்வத்தை அயல் நாட்டினரும் அறியும் வண்ணம் பலமுறை அயல் நாடுகளுக்குக் கலைக் குழுக்களுடன் சென்று அரும் பணியாற்றியவர் ஸ்ரீ கே. சுப்பிரமணியம். அவருக்குக் கலையுலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. அவரது பிரிவினால் வருந்தும் குடும்பத்தினருக்கு நம் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காவஸ்கர் காப்பாற்றினர்!

பம்பாய் ஆட்டக்காரர் இருபத்தொரு வயதே நிரம்பிய சுனில் காவஸ்கர் முதன்முதலில் மேற்கிந்தியத் தீவில் நடைபெற்ற கிரிக்கெட் இரண்டாம் டெஸ்டில் 'டெஸ்ட் பிரவேசம்' செய்தார். முதல் பிரவேசத்திலே இரண்டு இன்னிங்ஸிலும் 65, 67 நாட் அவுட் எடுத்தது 'பேபி' காவஸ்கரின் புகழை உயர்த்தியது. மூன்றும் டெஸ்டில் சதத்துக்கு மேலே எடுத்து இன்னும் ஒரு படி கிரிக்கெட் புகழேணியில் ஏறினார். நான்காம் டெஸ்டில் சுனில் காவஸ்கரின் 117 நாட் அவுட் மேற்கிந்தியத் தீவு கோஷ்டி

யின் வெற்றியைப் பகற் கன வாக்கியது.

மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் டெஸ்ட் பந்தயங்களில் சர்தேசாய் மூன்று டெஸ்ட்களில் சதத்தைத் தாண்டி உயர்தர பாட்ஸ்மன் என்ற புகழைப் பெற்றிருக்கிறார். நான்காம் டெஸ்ட்டில் சர்தேசாய் - சோல்கர் ஏழாவது விக்கெட் பார்ட்னர்ஷிப் ஒரு ரிகார்ட். இந்தியா-மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் பந்தயங்களில் இந்தத் தடவை தனி விசேஷம் உண்டு. இந்தியாவுக்கு 'ரப்பர்' கிடைக்கிறதோ இல்லையோ 'ரப்பரை'க் கோட்டைவிட மாட்டார்கள் இந்தியர்கள் என்பது நிச்சயமாகி விட்டது. அதுவே ஒரு 'ரிக்கார்ட்'!




சோபர்ஸ்

மேற்கிந்தியத் தீவில் நடைபெற்ற நான்காவது டெஸ்டை வெற்றியாக்கிக் கொள்ள மேற்கிந்தியத்தீவு கோஷ்டி காப்டன் சோபர்ஸ் படாத பாடு பட்டார். மூன்றாவது டெஸ்டில் காப்டன் சோபர்ஸ் டெஸ்ட் பந்தயங்களில் 7,000 ரன்களைக் கடந்தும் டெஸ்ட் பந்தயங்களில் இருபத்திரண்டாவது சதத்தைப் பெற்றும் ஒரு ரிகார்டு கண்டார். இந்த நான்காவது டெஸ்டில் காப்டன் சோபர்ஸ் 178 நாட் அவுட். இப்படி யிருந்தும் இந்திய கோஷ்டியினர் ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தது மிகப் பெரிய சாதனை.

நான்காவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவு பாஸ்ட் பௌலர் டூவி வீசிய வேகமான பந்தில் மன்காட் வலது கையில் அடிபட்டுச் சரியாக ஆட முடியாத நிலையிலும் நாற்பது நிமிஷங்கள் மைதானத்தை விட்டு விலகாமல் இருந்ததை மெச்சத்தான் வேண்டும். அவரது முயற்சியும் ஆட்டத்தை 'டிரா'வுக்குக் கொண்டு சென்றதல்லவா?

ரமண கேந்திரம்

பரம ஞான மூர்த்தியான ஸ்ரீ ரமண மகரிஷிகள் விதேக கைவல்யம் பெற்று இந்தக் தமிழ் வருடப் பிறப்புடன் இருபத்தியொரு ஆண்டுகள் ஆயின. அந்த மகா புருஷரின் நினைவைப் போற்றிப் பரப்பும் வகையில் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்களைத் தலைவராகவும், பேராசிரியர் கே. ஸ்வாமிநாதன் அவர்களைக் காரியதரிசியாகவும் கொண்டு டில்லியில் ரமண கேந்திரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சத்சங்கக் கூட்டங்கள் ஆத்மிக விவாதங்கள், தியானம் ஆகியவற்றுக்கு வசதி செய்து தருவதுடன், ஒரு நூல் நிலையம் நடத்தவும், போதனைக் கேந்திரம் எழுப்பவும், சேவா சமிதி நடத்தவும் ரமண கேந்திரம் உத்தேசித்துள்ளது. ஆத்ம ஞானத்தில் ஈடுபாடு கொண்டவர்களும், ஸ்ரீ ரமண பகவானின் பக்தகோடிகளும் கேந்திரத்துக்குத் தம்மாலியன்ற பொருளுதவி வழங்கக் கோருகிறோம். நன்கொடைகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. முகவரி: காரியதரிசி, ரமண கேந்திரம், எம்-9, நேதாஜி நகர், புது தில்லி — 23.



விபூதியின் மகிமை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள் அருளுரை

"விறகுக் கட்டையை அக்னியானது பஸ்மமாக்குவதுபோல், ஞானம் என்கிற அக்னி எல்லாக் கருமங்களையும் பஸ்மமாக்குகிறது" என்று பகவத் கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். பஸ்மமாகிய விபூதி, இவ்விதம் கர்மங்களை எரித்தபின் நிற்கும் ஞானத்துக்கே அடையாளமாகும். 'விபூதிர் பூதிரைஸ்வர்யம்' என்று அமர கோசத்தில் உள்ளது. அதாவது, விபூதி என்பதும், ஐச்வர்யம் என்பதும் ஒரே பொருள் தரும்.

எந்தப் பொருளையும் தீயிலிட்டால் முதலில் அது கறுப்பாக ஆகும். பிறகு இன்னும் அக்கினிப் புடம் போட்டால் நீற்றுப் போகும்; சுத்த வெளுப்பாக ஆகிவிடும். இப்படி நீற்றுப் போனதே திருநீறு. நீறு பஸ்மம் எனப்படும். ஈச்வரன் மகா பஸ்மம். பஸ்மமாக நீற்றுப் போவதற்கு முந்திய மாறுதல் கறுப்பு. அதுதான் கரி. நிலக்கரி இவ்வுலக ஐச்வர்யத்தில் இக்காலத்தில் முதலிடம் பெற்றுள்ளது. இந்தக் கரியாக மாறிய பொருளைவிட மிகவும் உயர்ந்தது நீற்றுப் போன திருநீறு. திருநீற்றுக்கு மேலான பொருளே கிடையாது.

பல வர்ணங்களைக் கொண்ட பொருள்களைக் காண்கிறோம். ஆனால் இந்த வர்ணங்களெல்லாம் எரித்த பின் மாறிவிடுகின்றன. எல்லாம் கடைசியில் வெளுத்துப் போய்விடும். அப்போது நாம் 'சாயம் வெளுத்துப் போய் விட்டது' என்கிறோம். ஆகையால் எஞ்சி நிற்பது வெண்மை ஒன்றுதான். மற்றவை எல்லாம் பொய். வெண்மையே உண்மை.

திருத்தொண்டர் புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் "முழுநீறு பூசிடும் முனிவருக்கும் அடியேன்" என்று பாடினார்.

விபூதியைத் தேகம் முழுவதும் பூசிக்கொள்ள வேண்டும். விபூதியைத் தரித்துக்கொள்வதனால் ஸகல ஐச்வர்யங்களையும் அடையலாம். பெரும்பாலான மக்கள் விபூதியை அணிவார்கள். திருநீறு என்பதே சாதாரண மக்களால் 'துன்னூறு, துன்னூறு' எனப்படுகிறது. கோயிலுக்குப் போனாலும், ஏதாவது பீடாபரிகாரமாக வேண்டுமானாலும் "துன்னூறு கொடுங்கள்" என்று மக்கள் கேட்பதை நாம் அறிவோம். சிலர் திருமண் இடுவார்கள். பஸ்மம் இல்லாவிட்டால் மண்ணை இட்டுக் கொள்ள வேண்டும். அதிலும் துளசிச் செடியின் அடியில் உள்ள மண்ணை இடுவர்.

மண்ணை இட்டுக் கொள்வதும், திருநீற்றை இட்டுக் கொள்வதும் நமக்குத் தத்துவத்தை விளக்குகின்றன. மன்னனும் மாசறக் கற்றோனும் பிடி சாம்பலாகி விடுகிறார்கள். நாம் கடைசியில் சாம்பலாகத்தான் போகிறோம். இந்த வாழ்க்கை மாயமானது என்பதை விபூதி உணர்த்துகிறது. மண்ணிலே பிறந்த நாம் மண்ணிலேதான் மடியப் போகிறோம். இதை ஞாபகப்படுத்திக் கொள்ளவே நம்மில் சிலர் திருமண் அணிகிறோம். ஸ்ரீரங்கத்தில் ம்ருத் ஸங்க்ரஹணம் செய்யும்போது வில்வ விருக்ஷ மண்ணை எடுக்கிறார்கள். விபூதி, பசுவின் சாணத்தை அக்னியிட்டுப் பஸ்மமாக்குவதிலிருந்து ஏற்படுகிறது. பசுவின் சாணம் எல்லாத் துர்நாற்றங்களையும் போக்க உதவுகிறது. மண்ணெண்ணெயைக் காட்டிலும் அதிகத் துர்நாற்றம் உள்ள வஸ்து இல்லை எனலாம். அந்தத் துர்க்கந்தத்தைப் போக்கக்கூட பசுவின் சாணத்தை உபயோகிக்கிறோம்.

நமது உடல் பல துர்க்கந்தங்களை உடையது. இந்த உடலைச் சுத்தப்படுத்தி, இதனுள் உள்ள ஆத்மாவையும் பரிசுத்தப்படுத்த வல்லது பஸ்மமாகிய திருநீறு. மகா பஸ்மமான பரமாத்மாவும் விபூதி என்னும் பஸ்மமும் ஒன்றானபடியால் விபூதியை அணிவதனால் ஈச்வர சாக்ஷாத்காரம் ஏற்படும். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் திருநீற்றையோ திருமண்ணையோ இட வேண்டும்.

ஞானம் என்னும் தீ மூண்டபின் காரியங்கள் எல்லாம் பஸ்மமாகி விடும் என்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா உபதேசித்ததில், 'பஸ்மமாகிவிடும்' என்றால் கர்மாக்கள் அழிந்து விடும் என்று அர்த்தமல்ல. விறகுக் கட்டைகள் தீயில் எரிந்து போனபின் எல்லாமே சூனியமாகி விடவில்லை; அப்போதும் எஞ்சி நிற்பது நீறு. அவ்வாறே ஞானம் என்னும் தீயில் கர்மாக்கள் யாவும் எரிந்து போனபின் ஒன்று எஞ்சி நிற்கும். அப்படி மிகுந்து நிற்பதே 'மகா பஸ்ம'மான பரமாத்மா.

திருநீறு, திருமண் இவற்றைத் தரிப்பது பரமாத்ம ஸ்வரூபத்தின் உண்மையையும், உலகில் உள்ள பொருள்களின் அநித்தியமான நிலையையும் நினைவூட்டுகிறது.



அமரர் **கல்கி**

இரண்டாம் அத்தியாயம்

பெண் குரல்

திறந்த வீட்டுக்குள் நுழைந்த வாலிபன், கிழவனுக்குத் தெரியாமல் மறைந்து கொள்ளும் நோக்கத்துடன், சுற்றுமுற்றும் பார்த்தான். அந்த வீட்டு நடையின் ஒரு பக்கத்தில் மரப் பலகையினாலான குறுகிய மச்சுப்படி காணப்பட்டது. மச்சுப் படியின் ஓரத்தில், கரியடைந்த அரிக்கன் விளக்கு மிக மங்கலான ஒளியைத் தந்து கொண்டிருந்தது. மச்சுப் படிக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள முடியுமோ என்று பார்ப்பதற்காக வாலிபன் அங்கே போவதற்குள், கிழவன் உள்ளே நுழைந்து விட்டான்.

''யாரடா அவன்?'' என்று கிழவன் கேட்ட குரலில், வியப்பும், திகைப்பும், கோபமும் கலந்திருந்தன.

ஆனால், அந்தக் குரலைக் கேட்ட வாலிபன், பளிச்சென்று திரும்பிப் பார்த்த போது, அவனுடைய முகத்தில் வியப்புடன் மகிழ்ச்சியும்காணப்பட்டது.

'' பாட்டா !'' என்று சொல்லி, அவன் கிழவனை ஏறிட்டுப் பார்த்தபடி நின்றான்.

''யார் ? மகுடபதியா ?'' என்று கிழவன் கேட்டான். அவனுடைய குரலில் இப்போது கோபத்துக்குப் பதிலாகக் கனிவு தோன்றியது.

''ஆமாம், பாட்டா !''

''இதென்ன அதிசயம், தம்பி! நீ எப்போது இங்கே வந்தே? எபபடி வந்தே? வாசற்கதவு பூட்டியிருந்ததே?''

'' நீ பூட்டைத் திறந்துவிட்டு, தடியை எடுக்கக் குனிந்தாயல்லவா, பாட்டா? அப்போது நுழைந்தேன். ஆனால், நுழையும்போது நீதான் என்று தெரியாது. உன்னிடம் அகப்பட்டுக் கொள்ளாமலிருக்க, இந்த மச்சுப் படிக்குப் பின்னால் ஒளியப் பார்த்தேன். என்ன வேடிக்கை, பார்!'' என்று கூறி, மகுடபதி சிரிக்க முயன்றான்.

ஆனால், அச்சமயம் கிழவன் முகத்தில் காணப்பட்ட தயக்கத்தையும் பயத்தையும் பார்த்த போது, சிரிப்பு வாய்க்குள்ளேயே அடங்கி விட்டது.

''நீ விளையாடுகிறாயோ, என்னமோ தெரியவில்லை, தம்பி! ஆனால், அதெல்லாம் அப்புறம் பேசிக் கொள்ளலாம். நீ

இந்த வீட்டில் இருக்கக் கூடாது. ஒரு விநாடிகூட இருக்கக் கூடாது. உடனே போய்விடு....'' என்று கிழவன் பரபரப்புடன் சொன்னான்.

மருடபதி, அப்போது பாதி விளையாட்டுக் குரலில், ''அதெல்லாம் முடியாது, பெரியண்ணக் கவுண்டரே! நான் இந்த வீட்டை விட்டு இன்று ராத்திரி கிளம்ப முடியாது. அப்படி என்னத்துக்காக என்னைக் கண்டு பயப்படுகிறாய்? இந்த வீட்டில் நீ களவாட, கிளவாட வரவில்லையே? உன் கையில் இருப்பது தடிதானே? கன்னக்கோல் இல்லையே?....'' என்று சொல்லி வந்தவன் சட்டென்று பேசுவதை நிறுத்தி, வாசல் பக்கம் கவனமாகக் காது கொடுத்துக் கேட்டான்.

வீதியில் காலடிச் சத்தம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. மனிதர்கள் பேசுகிற குரலும் கேட்டது.


பெரியண்ணன் ஏதோ கேட்க வாயெடுத்த போது, மருடபதி தன் வாயின் மேல் விரலை வைத்துப் பேசாமல் இருக்கும்படி சமிக்ஞை செய்தான். ஏற்கனவே மங்கலாக எரிந்த அரிக்கன் லாந்தரின் திரியை இன்னும் கொஞ்சம் சின்னதாகப் பண்ணி, அதை மச்சுப் படிக்குப் பின்னால் வைத்தான்.

வீட்டை நெருங்கிய காலடிச் சத்தமும், பேச்சுக் குரலும் வீதியோடு சென்று சிறிது நேரத்துக்கெல்லாம் மறைந்தன.

மருடபதி, பெரியண்ணன் கையைப் பிடித்து ஜன்னலண்டை அழைத்துக் கொண்டு போய், வெளியே சுட்டிக் காட்டினான். தூரத்தில் இரண்டு தடியர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.


''நீ கதவைத் தாழ்ப்பாளிட்டது நல்லதாய்ப் போயிற்று'' என்றான் மருடபதி, மெல்லிய குரலில்.

''என்ன தம்பி, சமாசாரம்? யார் அவர்கள்? எதற்காக நீ அவர்



களைக் கண்டு பயப்படுகிறாய்?'' என்று பெரியண்ணனும் மெதுவான குரலில் கேட்டான்.

''பாட்டா! அவர்கள் இருவரும் என்னை இன்றைக்குக் கொன்று போட்டுவிடுவதென்று வந்திருக்கிறார்கள். இன்று ராத்திரி என்னை வெளியே அனுப்பினாயானால் அப்புறம் என்னை உயிரோடே பார்க்க மாட்டாய். மறு உலகத்தில்தான் பார்ப்பாய்'' என்று மகுடபதி சொன்ன போது, கிழவன் முகத்தில் கோபம் கொதித்தது.




''என்ன சொல்லுகிறாய், தம்பி! இவன்களுக்குப் பயந்து கொண்டா நீ இந்த வீட்டில் ஒளிந்தாய்? எந்தக் களவாணிப்பயல் உன் மேல் கையை வைக்கிறான், பார்க்கலாம்! யாருக்கு அவ்வளவு நெஞ்சுத் தைரியம் பார்த்துவிடுகிறேன். வா! இப்போதே வெளியே போகலாம்'' என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறக்கப் போன பெரியண்ணன், எதையோ நினைத்துக் கொண்டவன் போல், திடீரென்று தயங்கி நின்றான். மச்சுப் படிகளுக்கு மேலே ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தான். பிறகு, மகுடபதியை நோக்கிச் சொன்னான்: ''தம்பி! ரொம்பத் தர்ம சங்கடமாய்ப் போச்சு. இந்தச் சமயத்திலா உனக்கு இந்த மாதிரி ஆபத்து வரவேணும்? இன்னொரு சமயமாயிருந்தால், உன் மேல் கையை வைக்கத் துணிகிறவனின் கையை ஒடித்துக் கழுத்தையும் ஒரே நெரியாய் நெரித்து விட்டு மறு காரியம் பார்ப்பேன். ஆனால் இந்தச் சமயம் சரியாயில்லை. நான் வேறு காரியமாய் இங்கே வந்திருக்கிறேன், தம்பி!....''

கிழவன் மச்சுப் படிக்கு மேலே அடிக்கடி அண்ணாந்து பார்த்தது மகுடபதிக்கு நினைவு வந்தது. அவனுக்கு ஒரு சந்தேகம் உதித்தது. ''இந்த வீட்டில் வேறு யாராவது இருக்கிறார்களா, என்ன பாட்டா! ஆனால், வீடு வெளியில் பூட்டியல்லவா இருந்தது? நீ வந்துதானே கதவைத் திறந்தாய்?'' என்றான்.

கிழவன் பரபரப்புடன், ''ஆமாம், தம்பி, ஆமாம், இந்த வீட்டில் யாரும் இல்லை. நான் வந்துதான் கதவைத் திறந்தேன். ஆனால், ஒரு முக்கியமான காரணத்தினால், இப்போது இந்த வீட்டை விட்டு நான் வெளியே வர முடியாது. நீ இங்கு இருக்கவும் கூடாது. போய்விடு'' என்றான்.

''பெரிய மூடுமந்திரமாய்ப் பேசுகிறாயே, பாட்டா! இங்கே நான் இன்றைக்கு ராத்திரி இருந்தால் உனக்கு என்ன நஷ்டம்? இந்த வேளையில் என்னை எங்கே போகச் சொல்லுகிறாய்? கொலைகாரர்களிடம் நீயே என்னைக் காட்டிக் கொடுத்து விடுவாய் போல் இருக்கிறதே?''

''சீச்சீ! என்ன வார்த்தை சொல்கிறாய், தம்பி! முக்கியமான காரணம் இல்லாவிட்டால் சொல்வேனா? ஆனால், நீ இப்படிப் பயப்பட்டுப் பதுங்குவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஐம்பது குடிகாரர்கள் சேர்ந்தாற்போல் உன்மேல் பாய்ந்த போதுகூட மனங் கலங்காமல் நின்றாயே? அப்படிப்பட்ட நீ, இரண்டு களவாணிப் பயல்களுக்குப் பயப்படுகிறாயே!''



கடமையை உணர்த்தும்; கனிவும் காட்டும்!

வாரத்தில் நாலைந்து நாட்கள் அதிகாலையில் ஐந்து அல்லது ஆறு மணிக்கு எழுந்திருப்போம். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பிற விடுமுறை நாட்களிலும் சீக்கிரம் எழுந்திருக்கப் பிடிக்காது.

இந்த இயல்பைக் கருத்தில் கொண்டு அமெரிக்காவில் ஜெனரல் எலெக்ட்ரிக் ஸ்தாபனம் இந்த நூதன அலாரம் கடிகாரத்தை உற்பத்தி செய்கிறது. மின்விசையால் இயங்கும் இந்தக் கடிகாரத்தில் தினம் அதிகாலையில் எத்தனை மணிக்கு அலாரம் அடிக்க வேண்டும் என்று 'செட்' பண்ணி விடலாம். பின்னர் வலதுபுறம் உள்ள ஏழு நாட்களைக் குறிக்கும் ஏழு பித்தான்களில் ஒன்றையோ இரண்டையோ நம் வசதிக்கேற்ப இழுத்து விட்டுவிட்டால் குறிப்பிட்ட அந்த நாட்களில் அலாரம் அடிக்காது! அன்று நீர ஆனந்தமாய்த் தூங்கலாம்; தூங்கிக் கொண்டே இருக்கலாம்!

- பாலி

"இதைக் கேள், பாட்டா! நமது தமிழ் நாட்டில் திருவள்ளுவர் என்று ஒரு பெரியவர் இருந்தார்...."

"இப்போது அந்தக் கதையெல்லாம் பேசச் சமயமில்லை தம்பி!" என்று கிழவன் தடுத்ததைப் பொருட்படுத்தாமல் மருடபதி மேலும் சொன்னான்: "அந்தத் திருவள்ளுவர் என்ன சொன்னார் என்றால்,

'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்'

என்றார். அதாவது, பயப்பட வேண்டிய காரியத்துக்குப் பயப்பட வேண்டும், அசட்டுத் தைரியம் உதவாது என்று பெரியவர் சொல்லியிருக்கிறார். சத்தியாக்கிரகத் தொண்டர் படையில் சேர்ந்து போய், போலீஸ் குண்டாந் தடியால் அடிபட்டுச் செத்தால் பிரயோசனமுண்டு. சாகும்போது தேசத்துக்காக உயிரை விடுகிறோம் என்ற திருப்தியுடன் சாகலாம்...."

கிழவன் மிகுந்த ஆர்வத்துடன், "தம்பி! இன்றைக்கு என்ன நடந்தது? ரொம்பக் கலாட்டாவாமே? போலீஸ்காரர்கள் ரொம்ப அக்கிரமம் பண்ணி விட்டார்களாமே? ஊரெல்லாம் கொல்லென்று போய்க் கிடக்கிறதே! காங்கிரஸ் தொண்டர்கள் செத்துப் போனது வாஸ்தவந்தானா?" என்றான்.

"இதுவரையில் ஒருவரும் சாகவில்லை, பாட்டா! ஆனால், அந்தக் கண்காட்சியை நீ பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே? காந்தி மகாத்மாவினுடைய ஆன்ம சக்தியை இன்றைக்குத் தான் நான் நேரில் பார்த்தேன். கொஞ்சங்கூட ஈவு இரக்கம் பச்சாத்தாபம் இல்லாமல், போலீஸார் என்ன அடி அடித்தார்கள்? ஆனால், காங்கிரஸ் தொண்டர்கள் கொஞ்சமாவது மனங் கலங்க வேண்டுமே? ஓட வேண்டுமே? ஒரு தொண்டர் முப்பது அடி அடிக்கிற வரையில் 'வந்தே மாதரம்' 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்று கோஷித்துக் கொண்டிருந்தார். அப்புறம் கீழே விழுந்து மூர்ச்சையானார்...."

"ஐயையோ! கேட்பதற்குச் சகிக்கவில்லையே? அப்படியா அடித்தார்கள் பாவிகள்? நல்ல வேளை; நீயாவது தப்பி வந்தாயே?"

"என்ன அப்படிச் சொல்கிறாய், பாட்டா! என்னை என்னவென்று நினைத்தாய்? நானும் சீக்கிரத்தில் ஒரு நாள் தொண்டர் படையில் சேர்ந்து போகத்தான் போகிறேன். அதற்காகத் தான் இன்றைக்கு என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இவ்வளவு பிரயத்தனப்படுகிறேன்."

"ஓகோ! அப்படியானால், இன்றைக்கு நீ சத்தியாக்கிரகத்தில் சேரவில்லையா, தம்பி! பின்னே எதற்காக இன்றைக்குக் கோயமுத்தூருக்கு வந்தாய்?"

"இங்கே நடக்கிறதைப் பார்த்து விட்டு, மேலே செய்ய வேண்டியதைப் பற்றித் தலைவர்களிடம் யோசனை கேட்டுக் கொண்டு போகலாம் என்று வந்தேன். எங்கள் தாலூக்காவிலேயே என்னைச் சத்தியாக்கிரகம் செய்யும்படி சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் திரும்பி மேட்டுப்பாளையம் போகிறதற்குள் கார்க்கோடகவுண்டரின் ஆட்கள் என்னை வேலை தீர்த்துவிடுவார்கள் போலிருக்கிறது."

கிழவன் இப்போது ரொம்பவும் திடுக்கிட்டான். அவன் முகத்தில் பீதியின் அறிகுறியே காணப்பட்டது. முன் போல் மறுபடியும் மச்சுப்படியின்

உச்சியை ஏறிட்டு நோக்கினான். பிறகு, மருடபதியைப் பார்த்து, "கொஞ்சம் மெதுவாய்ப் பேசு, தம்பி! யார், கள்ளிப்பட்டிக் கார்க்கோடக் கவுண்டரா? அவருக்கு என்ன உன்பேரில்...?" என்று இரகசியம் பேசும் குரலில் கேட்டான்.

"என்ன, ஒன்றும் தெரியாதவனைப் போல் கேட்கிறாயே, பெரியண்ணா! அவருக்கு இரண்டு லட்சம் ரூபாய் கள்ளுக்கடை வருமானம் என்னால் போய்விட்டதோ, இல்லையோ? முக்கியமாக அந்த ஆக்ரோஷந்தான். இன்றைக்கு இங்கே போலீஸ் அமுல் பலமாயிருக்குமென்று அவருக்கு முன்னாலேயே தெரியும் போலிருக்கிறது. இந்தச் சமயத்தில் காந்திக் குல்லா போட்டவனை அடித்துக் கொன்றுவிட்டால், கேள்வி முறையே இராது என்று அவருக்கு எண்ணம். பழி போலீஸார் மேல் போய்விடு மல்லவா?"

"எனக்கு நம்பிக்கைப்படவில்லை, தம்பி! இப்படிப்பட்ட அக்கிரமமும் உண்டா? உனக்கு யார் சொன்னார்கள்?" என்று பெரியண்ணன் கேட்டான்.

இந்தச் சமயத்தில் மேலேயிருந்து, தேனினும் இனியதான ஒரு பெண் குரல், "பாட்டா! யார் அந்த மனுஷர்? எத்தனை நேரம் பேசிக் கொண்டேயிருப்பாய்? நான் இங்கே இருக்கிறேன் என்பதையே மறந்துவிட்டாயா?" என்று கேட்டது. (தொடரும்)

எழுதுவது எப்படி?

எழுத்தாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பல்கிப் பெருகி வரும் இந்நாளில், 'எழுதாமல் இருப்பது எப்படி?' என்றுகூட ஒரு நூல் எழுதலாமோ என்று தோன்றும். ஆனால் பெரிய மனசு பண்ணி "எழுதுவது எப்படி?" என்ற கேள்வியையே எழுத்தாளர் மகரம் பலரைக் கேட்டு ஏறக்குறைய ஐந்நூறு பக்கங்கள் கொண்ட நூலைத் தொகுத்துவிட்டார்.

இக்கருத்தரங்கில் ஐம்பத்தாறு ஆசிரியர்கள் பங்கு கொண்டுள்ளார்கள். இன்றைய எனரும் இலக்கியத்தைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு அந்தந்தத் துறையிலே சிறந்து விளங்குகிறவர்களெல்லாம் இந்நூல் உருவாக ஒத்துழைத்துள்ளார்கள். பெரும்பாலரும் 'எழுதுவது எப்படி?' என்று தங்களுக்குத் தாங்களே கேட்டுக் கொண்டு தான் தொடங்கியுள்ளார்கள். அதோடு 'சொல்லித் தெரிவதில்லை.... கலை'யையும் கக—ரேமப் பிரசவத்தையும் உதாரணம் காட்டியே கட்டுரையை ஓட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள்!

எழுத்துத் தொழிலைக் கற்பிக்க இதுபோல் பல நூல்கள் எழுதப்படலாம். கல்லூரிகள் கூடத் தோன்றலாம். ஆனால் படைப்பு இலக்கியத்தைப் பொறுத்தவரை அவை பயன் படாது என்பதை இந்நூலைப் படிப்பவர்கள் கட்டாயம் உணர்வார்கள். இயல்பாகவே எழுத்துத் துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இது ஒரு வழிகாட்டியாக அமையும் என்பது உண்மையே. ஆனால் படைப்பிலக்கியம் சொல்லித் தருவதால் மட்டும் வருவதில்லை.

'கல்கி'யின் வெள்ளிவிழாவுக்குக் கூடியிருந்த பலதரப்பட்ட ஆசிரியர்களையும் கண்ட பொழுதுதான் இப்படி ஒரு தொகுப்பு நூல் தயாரிக்கலாம் என்ற எண்ணம் உதயமாயிற்று என்று மகரம் முகவுரையில் குறிப்பிடுகிறார்!

இலக்கியத்தின் எல்லாத் துறைகளையும் தொட்டுச் சிறுடனும் கீர்த்தியுடனும் விளங்கிய அமரர் 'கல்கி' அவர்கள் வளைய வந்த இடத்திலே உருவான ஒரு கேள்விக்கு இந்நூலில் பங்குகொண்ட ஆசிரியர்கள் அனைவரும் இலக்கியத்தின் ஒன்பது சுவைகளும் தோன்றும்படியாகத் தங்கள் பதில்களைச் சொல்லியுள்ளார்கள்.

'எழுதுவது எப்படி?' என்னும் இந்த நூலைப் 'பெறுவது எப்படி?' என்று கேட்பவர்களுக்குப் 'பழனியப்பாவை அணுகுவது எப்படி?' என்பதற்கு இதோ தருகிறோம் முகவரி: பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை–14, விலை: ரூ. 10-00.



படித்துப் பாருங்கள்

மிருதங்கக் கலை (ஆங்கிலம்)

நமது சங்கீதக் கலையில் மேல் நாட்டினரின் கவனத்தை எடுத்த எடுப்பிலேயே ஈர்த்தது மிருதங்கம். தமிழ் அறிவில்லாதவர்களுக்கும், ஆங்கிலத்தின் மூலம் மிருதங்கக் கலையை அப்பியாசம் செய்யும் வாய்ப்பை ஆசிரியர் ஹரிஹர சர்மா இப் புத்தகத்தின் மூலம் உண்டாக்கித் தந்திருக்கிறார். இதில் கையாளப்பட்டிருக்கும் சொல்கட்டுகளும் தத்தகாரங்களும் தஞ்சாவூர் பத்ததி என்று நம்மிடையே வந்துள்ள சம்பிரதாயத்தைத் தழுவியவை. ஜெய கணேச தாளவாத்திய வித்யாலயாவை நடத்தி நூற்றுக்கணக்கான சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் மிருதங்கம், கடம், கஞ்சிரா ஆகிய தாள வாத்தியங்களை மிகுந்த அன்புடனும் உற்சாகத்துடனும் கற்பித்து வரும் ஸ்ரீ டி. ஆர். ஹரிஹர சர்மா, தமது அனுபவத்தின் வாயிலாக மாணவர்களுக்கு எப்படிச் சொன்னால் அப்பியாசத்துக்கு லாகவமாக இருக்குமோ அவ்விதத்தில் பாடங்களைக் கிரமப்படுத்தி இந்த நூலில் தந்திருக்கிறார். விக்னேச்வர பாடத்திலிருந்து, சப்த தாள விந்யாச மோராக்கள் வரையில் படிப்படியாகப் பாடங்கள் உயர்ந்து கொண்டே போகின்றன. படங்களின் உதவியால் விரல்களை வைத்துக்கொள்ளும் இடங்கள் விளக்கப்பட்டிருப்பது மாணவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

கிடைக்குமிடம்: ஸ்ரீ ஜெய் கணேச தாள வாத்திய வித்யாலயா, சென்னை-5. விலை ரூ. 5-00.

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

72

பிறர் நன்மைக்காகச் சேவை செய்யும் பக்தனுடைய இதயமே ஆண்டவன் பிரியப்படும் கோயில். அவனே தேடி வருவான். ''அபூபென் ஆதம்'' அத்தகைய ஒரு பக்தன். அவன் ஆடம்பரமின்றி ஏழைகளுக்குப் பணி செய்து வந்தான். அதனால் தேவலோகத்தில் வைத்திருந்த பட்டியலில் முதல் ஸ்தானம் பெற்றான்.

துன்பமும் துயரமும் அடைந்து கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவ வேண்டும். ஏழைகளுக்கும் முன்னேற வசதி யில்லாதவர்களுக்கும் உதவ வேண்டும். உடலையும் உள்ளத்தையும் செலுத்தி எல்லா விதத்திலும் உதவினால்தான் ஒருவன் பக்தனாவான். ஏழைகளுக்கென்று நூல் நூற்கவும் கூட இஷ்டமில்லாமல் சமாதானங்கள் சொல்லிச் சும்மா யிருப்பவனுக்குச் சேவை என்பதன் பொருள் தெரியாது. தானும் நூற்று, ஏழைகளுக்கு வழிகாட்டி, அவர்களையும் நூற்கச் செய்கிறவன் தெய்வத்துக்குப் பணி செய்கிறவனாவான். 'புஷ்பம் பழம் இலை எதையேனும் பக்தியுடன் எனக்குத் தந்தால் போதும். அவன் எனக்கு மிகப் பிரியமானவன்' என்று கண்ணன் கீதையில் சொல்லி யிருக்கிறான். நீசர்கள் என்று கருதப்படுகிறவர்கள் இருக்கும் சேரியே ஆண்டவனுக்குப் பிரியமான க்ஷேத்திரம். அத்தகைய சேரியிலிருப்பவர்களுக்காக நூல் நூற்றோமானால் அதுவே பெரிய ஜபமும் பூஜையும் வேள்வியுமாகும். - யங் இந்தியா, 24-9-25

''பூஜையில் செலவழிக்கும் காலத்தை ஏழைகளின் பணியில் செலவிடுவது நலமல்லவா? சமூகத்துக்கு உண்மையில் சேவை செய்கிறவனுக்குப் பூஜையும் தெய்வ வழிபாடும் வேண்டியதில்லை அல்லவா?'' என்று ஒருவர் கேட்டார்.

நான் சொன்ன விடை: இந்தக் கேள்விகளுக்குக் காரணம் நாஸ்திகமும் சோம்பேறித்தனமும் என்று எண்ணுகிறேன். எந்தச் சிறந்த கர்ம யோகியும் பூஜையையும் பக்தி செலுத்துவதையும் விடுவதில்லை. பிறருக்குச் சேவை செய்வதே பூஜையாகும். அவர்கள் பாடல்களைப் பாடவேண்டிய அவசியமில்லை என்பது உண்மை. ஆயினும் பஜனைக் கூட்டம், பூஜை முதலியவை சேவைக்கு உதவுகின்றன. உள்ளத்தில் ஆண்டவனுடைய நினைவை நிறுத்தப் பயன்படுகின்றன. - ஹரிஜன், 13-10-46

ஆண்டவனை நினைவில் வைத்து அவனுக்கென்று அர்ப்பணம் செய்யப்பட்ட எந்தச் சிறிய பணியும் பெரிய பணியேயாகும். அந்த முறையில் செய்யப்பட்ட தொழில்கள் எல்லாம் சம மேன்மை பெறும். மலத்தையும் அசுத்தத்தையும் கூட்டிப் பெருக்குகிறவனுடைய, ஜனங்களால் பெரிதாக மதிக்கப்படாத பணியும், ஒரு அரசன் பகவானை எண்ணித் தன்னுடைய செல்வத்தை ஈசனுக்குச் சேர்ந்த செல்வமாக எண்ணி நியாயமாக வழங்கினால் அந்தப் பணியும் சமமே யாகும். ஒன்றுக்கொன்று குறைந்ததல்ல. - யங் இந்தியா, 25-11-26

தினமும் ஒரு மணி நேரம் ஏழைக் கூலிகள் செய்ய வேண்டிய வேலையை நாம் செய்தோமானால் அதைவிட மேன்மையான தேசத் தொண்டு இல்லை என்பேன். அத்தகைய பணியினால் நம் நாட்டிலுள்ள ஏழைகளோடு நாமும் ஒன்றுபட்டு, அவர்கள் மூலம் உலக சமுதாயத்துடன் ஐக்கியப்படுவோம். ஏழைகள் செய்யும் கூலி வேலையை ஆண்டவனுக்கென்று நாம் செய்தோமானால் அதைவிடச் சிறந்த பூஜை வேறில்லை. யங் இந்தியா, 20-10-21

உடல் உழைப்பின் சிறப்பைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் போதாது. உழைத்து அனைவருக்கும் வழி காட்ட வேண்டும். கீதையில் கண்ணபிரான் சொல்லியிருக்கிறதையே நான் சொல்லுகிறேன். ''ஒரு நிமிடமும் நான் சும்மா இருப்பதில்லை. சும்மா இருந்தேனானால் என்னைக் கண்டு பிறரும் சோம்பேறிகள் ஆவார்கள்'' என்றான். - ஹரிஜன் 2-11-35

வேலை செய்யக்கூடிய ஆணோ பெண்ணோ யாருக்கேனும் தொழில் செய்ய வசதி யில்லாமல் பசியால் வருந்தினால் அது நம் எல்லோருக்கும் மானக்கேடாகும். அவர்கள் பசியால் வருந்தும் போது நாம் உண்பது பாவமாகும். - யங் இந்தியா, 6-10-27

உழைக்காமல் சமூகத்தில் வாழ எவனுக்கும் உரிமை கிடையாது. உடல் உழைப்பு வேள்வியே யாகும்.

- யங் இந்தியா: 10-9-28



"கூடலைக் கடைந்துதான் அமுதம் திரட்டினார்கள். மனத்தை ஏதாவது ஒரு விஷயம் அலைத்தால்தான் கவிதை திரண்டு வரும். 1945-ஆம் ஆண்டு இங்கே நிலவிய யுத்த கால நிலவரம் தினமும் என் மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது" என்று கூறும் கவிஞர் கரபி (ஜே. தங்கவேலு). அப்போது மக்கள் பட்ட சங்கடங்களெல்லாம் சரம் சரமாகத் தம் மனத்தில் கோத்திருந்தன என்கிறார். அதன் விளைவாக எழுகிறது நகைச்சுவைப் பாடல். வெறும் நகைச்சுவை மட்டுமல்ல, வேதனையும் கலந்த பாடலாயிற்றே அது:

"காலையிலே எழுந்திருந்தா
    கட்டையோடே அழுகணும்
கருமம் புடிச்ச அடுப்புமோட்டெக்
    கண்ணீராலே மொழுகணும்
நாலு நவலே வெந்நீராய்ச்ச
    நாலு ஜாமம் ஊதணும்
நாளைக் கெல்லாம் ஊதி ஊதி
    நாக்கு வரந்து சாகணும்!"

என்று அலுப்பும் சலிப்புமாய்த் தொடங்கும் அந்தப் பாட்டு, "என் மனைவியைப் போலவே வீடுதோறும் அவதிப்பட்ட







பெண்களின் அங்கலாய்ப்பைத்தான் படம் பிடித்தது" என்கிறார் கவிஞர்.

அதே ஆண்டில் கிரிக்கெட் குழு ஒன்று தமிழகத்துக்கு வந்திருந்தது. தொட்டில் குழந்தை முதல் துவண்ட கிழம்வரை எல்லோருக்குமே கிரிக்கெட் பித்துப் பிடித்திருந்ததாம். ஆனால் கவிஞர் மட்டும் பெர்னட்ஷா கட்சியாம்! (பெர்னார்ட் ஷாவுக்குக் கிரிக்கெட் பிடிக்காது) ஆகவே இந்தக் கிறுக்குத்தனத்தைப் பற்றிக் கிண்டல் பண்ணத் தொடங்கினார் 'காத்தான்' என்ற கிராமத்தான் மூலமாகக் கவிஞர் கரபி. கவிஞர் ஒரு டெஸ்ட் கூடப் பார்த்ததில்லை. மைதானக் காட்சிகளை மனக் கண்ணால் பார்த்துத்தான் எழுதினார்:

"மட்டையைப் புடிச்சிக்கிட்டு
    மாஞ்சி மாஞ்சி அடிக்கிறாங்க
    மாருதூரம் போவலேடா கடவுளே!"

என்று கிண்டலாகத் தொடங்கும் இந்தப் பாடல், வெற்றி பெற்ற பாரத வீரர்களுக்குப் பாமாலையாக முடிகிறது:

"ஆஸ்திரேலிய நாட்டாராம் அசகாய சூரர்களாம்
    அத்தனையுந் தோத்துப்புட்டாங்க கடவுளே — மோடி
  ஒத்தனுக்கு ஈடு இல்லே கடவுளே — ரொம்ப
    ஒண்டர்புல் லாக்குதடா கடவுளே!"

இவர் ஒரு நாய்க் குட்டியை மிக்க அன்புடன் வளர்த்து வந்தார். அது ஒரு நாள் இறந்து விட்டது. அதன் நினைவு அடிக்கடி வந்து ஏக்கத்தைக் கொடுத்து வந்தது. அந்த ஏக்கமே ஒரு பாடலாக, இரங்கற் பாவாக வெளிவந்தது. 'ஜூ ஜூ' என்பது அந்தப் பாடலின் தலைப்பு.

அந்தப் பாட்டு ஏதோ ஒரு பத்திரிகையில் வெளிவந்தது. ரசிகமணி டி. கே. சி. அவர்களிடம் நெருங்கிப் பழகும் காலத்தில் இந்தப் பாட்டை அவர் பத்திரப்படுத்தி வைத்திருந்ததைக் கண்டார் கரபி.

"இது என் பாட்டல்லவா? உங்களுக்கு இது எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டார் கவிஞர். அதற்கு ரசிகமணி, "இந்தப் பாட்டு மிக நன்றாக இருக்கிறது. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை போன்றவர்களோடு பழகியவர்களால் தான் இது போன்று எழுத முடியும் என்று கருதினேன். பாட்டைப் பத்திரப்படுத்தி வைத்தேன்" என்றார். அந்தப் பாட்டின் சில வரிகளைப் படித்தால், கவிஞர் அந்த நாயின் மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்பது புலப்படும்:

"குட்டியாக வந்தநந்த
    ஜூஜூ — வெறு
  குட்டையல்ல நெட்டையல்ல
    குலம் நல்ல ஜூஜூ"

"எழிலுடன் திகழ்ந்தது
    ஜூஜூ — ஆனால்
  ஏமாற்றிச் சென்றதையோ
    ஜூஜூ!"

ஒரு பத்திரிகாசிரியர் தீபாவளி மலருக்குக் கவிதை கேட்டார். கவிஞர் அதற்கு,

"தீவளிக்கும் பாட்டு ஒன்று
    சீக்கிரமாத் தாரும் என்று
  திண்ணையிலே பார்த்துப்புட்டுக்
    கேக்கறே — இது
  செட்டிக் கடைச் சரக்கு இன்னு
    பாக்கிறே!"

என்று கவிதை பாடியே பதில் சொல்லிவிட்டார். இந்தப் பாட்டை அந்த ஆசிரியர் எவ்வளவு ரசித்தார் என்பது, இன்னமும் கவிஞரைச் சந்திக்கும்போதெல்லாம் அவர் வாய் முணு முணுப்பதிலிருந்து தெரிகிறது! —பேட்டி: பி. வி. கிரி

"மோடி
ஒத்தனுக்கு
ஈடு
இல்லே!"



ராமாயணம்

ராஜாஜி

ராவணன் முன்னிலையில் இறங்கிய அங்கதன், ராமன் சொன்னவண்ணம் கம்பீரமாக, ''வாலி யார் என்பது உமக்குத் தெரிந்திருக்கலாம். நான் வாலியின் புத்திரன்; ராமனுடைய தூதனாக வந்திருக்கிறேன். உம்முடைய பாபங்களுக்கு விமோசன காலம் நெருங்கிவிட்டது. யுத்தம் செய்து வீர சுவர்க்கம் அடைவீர். ராமனும் வானர சேனையும் கோட்டை வாயிலில் காத்திருக்கிறார்கள். செய்த பாபங்களையெல்லாம் தீர்த்துக் கழுவிக் கொள்ளலாம். அப்படியில்லை, உயிரின் மேல் ஆசையிருந்தால் ராமனிடம் சரணாகதி அடைவீர். இல்லையேல் யுத்தத்துக்கு எழுந்து செல்வீர். யமனிடம் போய்ச் சேரத் தயாராகப் புறப்படுவீர். பந்துக்களிடம் விடை பெற்று உத்தரக்கிரியைகளையும் முடித்துக் கொள்வீராக. குலத்தோடு அழிந்து போகும் காலம் நெருங்கி விட்டது. லங்கையைக் கண்ணால் பார்த்து அநுபவித்துத் திருப்தி அடைவீர்!'' என்றான்.

ராவணனுக்கு நெருப்பைப் போல் பொங்கியது கோபம். ''பிடி! கொல், துஷ்டனை!'' என்றான்.

உடனே இரண்டு ராக்ஷசர்கள் அங்கதனை இரு பக்கத்திலும் பிடித்துக் கொண்டார்கள். அவன் அந்த இரண்டு பெரும் பூதாகாரமான அரக்கர்களுடன் உயரக் கிளம்பி, இருவரையும் உதறித் தள்ளி, அதற்கு மேலே கிளம்பி மாளிகையின் விமானத்தை ஓர் உதை உதைத்து உடைத்துவிட்டு, ராமன் இருந்த இடத்தை ஒரே தாவாகத் தாவி வந்தடைந்தான்.

அங்கதனுடைய காரியத்தைக் கண்டு ராக்ஷசக் கூட்டத்துக்குப் பெருந் திகில் உண்டாயிற்று. ஆனால், தங்களுடைய பயத்தை மறைத்துக் கொண்டார்கள். விமானம் உடைந்ததைக் கண்டு ராவணன் பெருமூச்சு விட்டான். அதை ஒரு துர்நிமித்தமாகக் கண்டான்.

அங்கதன் திரும்பி வந்ததும் ராமசந்திரன் சேனைக்கு உத்தரவு கொடுத்து விட்டான். யுத்தம் ஆரம்பித்தது.

85. சீதை மகிழ்ந்தாள்

பயங்கர வானர சேனை லங்கைக்கரையில் பூமி அதிர இறங்கிவிட்டது. ஒரு



பெரிய வனத்தில் சுகமாகத் தங்கிற்று. யுத்த ஆயத்தமான லங்கா நகரத்திலிருந்தும் ராக்ஷசர்களுடைய கோஷம் கிளம்பிற்று. சங்கம், பேரிகை, துந்துபி





முதலிய யுத்த வாத்தியங்களின் நாதம் கேட்டதும் வானரர்களுடைய உற்சாகம் இன்னும் அதிகமாயிற்று. ராமசந்திரன் சேனையை அணிவகுத்து யார் யார் எந்த எந்த ஸ்தானத்தில் இருக்க வேண்டும் என்று நிர்ணயித்துச் சொன்னபடி சேனை அணிவகுக்கப்பட்டு நின்றது.

லங்கையைப் பார்த்து, ''ஆஹா! லக்ஷ்மணா! இந்த நகரத்தின் அழகைப் பார்த்தாயா?'' என்றான் ராமன்.

லங்கையைக் கண்டதும் ராமனுடைய உள்ளம் சீதையிருந்த இடம் சென்றது. தானும் படையும் வந்தது இப்போது அவளுக்குத் தெரிந்திருக்கும் அல்லவா, தைரியம் அடைந்திருப்பாளல்லவா என்றெல்லாம் எண்ணினான். ஆயினும் அதைப் பற்றி ஒன்றும் பேசாமல் சேனையை அணிவகுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தான்.

* * *

சுகன் என்ற ஒரு ராக்ஷஸ சாரன் ராவணனிடம் திரும்பிச் சென்று, ''தாங்கள் சொல்லியனுப்பியபடி என் காரியத்தைச் செய்தேன். ஆனால், ஒன்றும் பயனில்லாமல் போய்விட்டது. என்னைத் துன்பப்படுத்தித் திருப்பி அனுப்பி விட்டார்கள். விராதன், கபந்தன், கரன் முதலியவர்களை விளையாட்டாகக் கொன்ற ராமன், சுக்ரீவனுடைய சேனையுடன் சீதையைச் சிறை வைத்திருக்கும் இடத்தை அறிந்து கொண்டு லங்கையை அடைந்துவிட்டான். கரடிகளும் வானரங்களும் கடலைத் தாண்டி வந்து யுத்தத்துக்குத் தயாராய் லங்கைக்கு முன் நிற்கிறார்கள். தரை காணாமல்

சேனை நின்று விட்டது. இனி பேச்சில் ஒன்றும் பிரயோஜனமில்லை. அவர்களுக்கு நம் பேரில் உண்டாகி யிருக்கும் துவேஷம் யுத்தத்தினால்தான் தீர வேண்டும். வேறு வழியில்லை. மன்னனே ! யோசனை செய்து என்ன செய்ய வேண்டியதோ அதைச் செய்வீராக.''

இவ்வாறு சொல்லிவிட்டு முடிவில் மெதுவாக, ''சீதையைத் திருப்பித் தந்துவிட்டால் பிழைக்கலாம்'' என்று சொன்னான்!

ராவணனுக்குக் கோபம் பொங்கிற்று. ''என்ன சொன்னாய்? சீதையைத் திருப்பித் தருவது என்கிற பேச்சு யாரும் என்னிடம் பேச வேண்டாம். என்னுடைய சக்தியை அறியாமல் இந்தப் பேச்சுப் பேசுகிறீர்கள். தேவ தானவ கந்தர்வ யக்ஷர்கள் யார் வந்தாலும் என்னால் வதம் செய்யப்படுவார்கள். இந்திரனே வந்தாலும் சரி, எமனே வந்தாலும் சரி, என் பாணங்களால் எரிக்கப்படுவார்கள். பார், இந்த அற்ப ராமனும் அவனுடைய சேனையும் எப்படித் துவம்சம் ஆகப் போகிறார்கள்!'' என்றான்.

ராவணன் உண்மையில் அவ்வாறே நம்பினான். தன்னுடைய பூர்வ சரித்திரத்தை எண்ணி எண்ணி அடைந்திருந்த கர்வத்தினால் புத்தி இழந்து மூர்க்கனாகப் போய் விட்டான்.

பிறகு இரண்டு அமைச்சர்களை அழைத்து வரச் சொல்லி அவர்களுக்கு உத்தரவிட்டான்: ''லங்கைக்குச் சேது கட்டிவிட்டுப் பெருஞ் சேனை வந்து இறங்கியதாகச் சாரர்கள் சொல்லுகிறார்கள். இது ஆச்சரியமாக இருக்கிறது. ஆயினும் காரியம் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நீங்கள் சென்று சத்துரு சைன்யத்தை நன்றாகப் பார்த்து எனக்கு அவர்கள் பலத்தின் விவரத்தைச் சொல்ல வேண்டும்!'' என்று சொல்லி அனுப்பினான்.

அப்படியே அவர்களும் வானர வடிவம் தரித்து வானர சைன்யத்துக்குள் பிரவேசித்துச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். விபீஷணன் இவர்களுடைய மாறுவேஷத்தைக் கண்டு கொண்டு அவர்களைப் பிடித்து ராமன் முன் கொண்டு போய் நிறுத்தினான்.

''சுவாமி, நாங்கள் தூதர்கள். எங்களுடைய அரசனால் அனுப்பப்பட்டோம். எங்களை விட்டு விடுங்கள்'' என்றார்கள்.

ராமன் சொன்னான்: ''இவர்களுக்கு நம்முடைய சேனையைக் காட்டி எல்லாம் பார்த்துப் போகச் சொல்லுங்கள். இவர்களை விட்டு விடுங்கள்! ஏ, ராக்ஷச தூதர்களே! நீங்கள் திரும்பிச் சென்று ராவணனுக்குச் சொல்லுங்கள். 'எந்தப் பலத்தை நம்பி நீ சீதையைத் தூக்கி வந்தாயோ, அந்தப் பலம் இன்று சோதனைக்கு உள்ளாகும். உன்னுடைய கோட்டையும், நகரமும், சேனையும் நாளையே அழிவதைப் பார்ப்பாய் ! நாளைக் காலையில் ராமனுடைய பாணங்கள் உன் மேல் பாயும்.' இப்படி உங்கள் அரசனுக்குச் சொல்வீர்களாக!''

ராமன் சொன்னதைக் கேட்ட ராக்ஷச தூதர்களும், ''அப்படியே !'' என்றார்கள். ''உமக்கு ஜெயமாகுக!'' என்று தங்களையும் அறியாமல் அவர்களின் வாயினின்று எப்படியோ வழக்கத்தின் வசமாக வெளிவந்தது. இது ஒரு நல்ல நிமித்தமாக எல்லாரும் கருதினார்கள்.

ராவணனிடம் அவர்கள் சென்று, ''சுவாமி! விபீஷணனால் நாங்கள் கண்டுபிடிக்கப்பட்டோம். ஆனால், ராமன் எங்களைக் கொல்லாமல் விட்டுவிட்டான். அரசனே ! நம்முடைய பகைவர்கள் ஒரே உறுதியாக இருக்கிறார்கள். ராமனும் லக்ஷ்மணனும் வாலி தம்பியாகிய வானர ராஜனும் விபீஷணனும் ஒரே மனமாக இருக்கிறார்கள். இவர்களால் நடத்தப்பட்ட இந்தச் சேனையை நாம் ஜெயிப்பது கஷ்டம். தசரதன் மகன் ராமனைப் பார்த்தோம். அவன் ஒருவனே போதும், நம்முடைய நகரத்தையும் சேனையையும் அழிக்க. இவ்வாறு எங்களுக்குத் தோன்றுகிறது. வானர சேனையின் வீரத்தையும் யுத்தத்துக்கு அவர்கள் ஆத்திரம் கொண்டிருப்பதையும் கண்டோம். அவர்களை விரோதிப்பது நல்லதல்ல. உடனே சீதையை ராமனிடம் ஒப்புவித்துவிடுவது நல்லதாகும். யோசியுங்கள்!'' என்றார்கள்.

தங்களுடைய அரசனின் க்ஷேம நலத்தை உத்தேசித்துத் தூது சென்ற மந்திரிகள் இப்படிச் சொன்னார்கள். ராவணனுக்கோ இப்போது கோபம் தாங்க முடியாமற் போயிற்று.

''உலகமெல்லாம் எனக்கு விரோதமாக நின்றாலும் அதற்காக நான் பயப்படமாட்டேன். தேவ கந்தர்வ தானவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வந்து என்னை எதிர்த்தாலும் நான் சீதையைத் திருப்பித் தரமாட்டேன். தூது சென்ற நீங்கள் பகைவர்களால் அடிபட்டுப் பயந்து போய் இப்படிச் சொல்கிறீர்கள். கோழைகாள், யார் வந்து என்னை எதிர்த்து நிற்க முடியும்? எந்தப் பகைவன் என்னை ஜெயிக்க முடியும்?'' என்றான்.

(தொடரும்)

ஆயிரத்தைக் கண்டவர்



சிற்பி பக்கிரிசாமி

உடல் தளர்ந்தாலும், உள்ளத்தில் கலையுள்ளம் இளமையோடு ஒளி விடுகிறது. தீட்சண்யம் மிகுந்த கண்கள். வயது, எழுபத்தைந்தையும் நெருங்கிவிட்டது.

இவர்தான் சிற்பி பக்கிரிசாமி. அறுபது ஆண்டுகளாக உளியும் சுத்தியலும் பிடித்து வந்து இன்றும் அவற்றுக்கு ஓய்வு தர விரும்பாதவர்! ஆயிரக்கணக்கில் படிமங்கள் செய்து குவித்துள்ளவர்.

இன்று இவர் பாபநாசத்தில் ஒதுங்கி இருந்தாலும் — ரிஷபம், குதிரை, அன்னம், புலி, மூஞ்சூறு முதலிய உருவங்களில் இவர் உருவாக்கிய வாகனங்களும், வெள்ளி ரதங்களும், சிறிய தேர்களும் — விழாக் காலங்களில் பெரிய நகரங்களிலும் கிராமங்களிலும் பவனி வருகின்றன!

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் உள்ள வெள்ளி ரதத்தை 40 ஆண்டுகளுக்கு முன், ஐம்பது மணு வெள்ளியும், நான்கு டன் தேக்கும் கொண்டு சிருஷ்டித்தவர், இப் பாபநாசம் சிற்பி பக்கிரிசாமிதான்!

''சிற்பக் கலையை எங்கே கற்றுக் கொண்டீர்கள்? உங்கள் குரு யார்?''

''இந்தச் சிற்ப வேலையை என் பெரிய பாட்டனார் நாராயண ஸ்தபதியிடம் கும்பகோணத்தில் கற்றுக் கொண்டேன். திருவாரூர் தேரை உருவாக்கியதில் அவருக்குப் பெரும்பங்கு உண்டு.''

இப்படி அவர் கூறியதுமே நான் ஆர்வத்துடன் ''தமிழ் நாட்டிலேயே திருவாரூர் தேர் அழகானது என்பார்களே! இருபது ஆண்டுகளுக்குப் பிறகு சென்ற வருடம் ஓடியதே!'' என்றேன்.

''ஆமாங்க. அந்தத் தேரின் சிற்பங்களையெல்லாம் என் பெரிய பாட்டனார்களான வையாபுரி ஆசாரியும், நாராயண ஸ்தபதியும் சேர்ந்து, இருபது உதவியாட்களுடன் மூன்று வருடங்கள் இடைவிடாமல் பணி புரிந்து உருவாக்கினார்கள். எங்கள் பாட்டனார்கள், வாலிபப் பிராயமாக இருக்கும்போது, செய்தது. நூறு வருடங்களுக்கு முன்னாலே நடந்த வேலைங்க அது. கும்பகோணம் சாரங்கபாணி கோயில் சித்திரைத் தேரையும் அவங்கதான் பன்னிரண்டு வருடங்களில் செய்து முடிச்சவங்க. திருவாரூர் தேராவது சென்ற வருடம் இழுக்கப்பட்டது. இந்தக் கும்பகோணம் சித்திரைத் தேர் முப்பது வருஷங்களுக்கு மேலாச்சு, இன்னும் இழுக்கப்படவில்லை!''

''நீங்களே செய்த பெரிய சிற்ப வேலை என்னென்ன?''

''என் தந்தை வீரமுத்து ஆசாரியார். அவரும் நானும் சேர்ந்து கிவளூர் அச்சூட்டு அம்மனுக்குத் தேர் செய்து கொடுத்தோம். அந்தக் கோயிலில் சின்னத் தேர் ஒன்று உண்டு. அதை நான்மட்டுமே செய்தேன். அதைப் பதினெட்டாம் பெருக்கன்று முதன் முதலில் இழுத்தார்கள். அதைச் செய்து முடித்த போது ஊர் முழுதும் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அந்தச் சின்னத் தேர் செய்து முடித்ததும் திருஷ்டிப் பட்டது போல் வலது கையில் கட்டி ஏற்பட்டு, பிழைக்க முடியாதுன்னு சொல்லும் கட்டம் வந்து, தெய்வானுகூலமாகப் பிழைத்தேன்! திருநெல்வேலி நெல்லையப்பர் வெள்ளி ரதம், திருச்சானூர் தெப்பம் ஆகியவை நான் உருவாக்கினவை. வெளிநாட்டுக்குக்கூட மரச் சிற்பங்களுடன் கூடிய தேர் அனுப்பியிருக்கிறேன்.''

''எந்த நாட்டுக்கு?''

''கானடா நாட்டில் இருக்கும் இந்திய சமூகத்தினர் விரும்பினாங்க. 12 அடி உயரம். பதினெட்டாயிரம் செலவு. கப்பல் மூலம் அனுப்பினோம்.''

''இப்போது என்ன செய்கிறீர்கள்?''

''இப்போது வீட்டிலிருந்த படியே வெள்ளெருக்கு வேர்களிலிருந்து பூஜையில் வைக்கும் படிவங்களைச் செய்து வருகிறேன்.''

திரு பக்கிரிசாமியின் மூத்த மகனும் ஒரு சிற்பி. இலங்கையிலே கோயில் சிற்பங்களை உருவாக்க அழைக்கப்பட்டு, அங்கே சென்றிருக்கிறார்.

கலைமகளின் பரிபூரண கடாட்சம் பெற்றிருக்கும் இந்தச் சிற்பி, திருமகளின் கடாட்சத்தை அதிகம் அடையவில்லை. அந்தக் குறை சிற்பியிடம் காணவில்லை. ஆனால் அவரது குடும்பத்தாரிடம் இருக்கிறது!

பேட்டி: ஏ. சுவாமிநாதன்



தேர் செய்வதில் தேர்ந்தவர்!

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

இருபத்தேழாம் அத்தியாயம்

"நில் இங்கே!"

பாதாளச் சிறையைப் பற்றிக் கூறியதும் சின்னப் பழுவேட்டரையருக்குப் பழைய நினைவுகள் வந்தன. சம்பிரதாய மரியாதைப் பேச்சை மறந்துவிட்டுக் கூறினார்: "ஆமாம்; நீ ஒரு தடவை பாதாளச் சிறைக்குப் போயிருக்கிறாய். இளையபிராட்டியுடன் சென்றாய். உளவு அறிய வந்து தப்பி ஓடிவிட்ட ஒற்றன் ஒருவனைப் பற்றித் தகவல் தெரிந்து கொள்ளப் போனீர்கள், இல்லையா?"

"இல்லை, ஐயா! தாங்கள் சொல்வது சரியல்ல. நாங்கள் அன்று பாதாளச் சிறைக்குப் போனது ஒற்றனைப் பற்றி அறிந்துகொள்வதற்காக அல்ல. பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் ஓலையுடன் அனுப்பியிருந்த தூதரைப் பற்றித் தெரிந்துகொள்ளப்போனோம்."

"அப்படி நீங்கள் எண்ணிக் கொண்டு போனீர்கள். அவன் ஒற்றனா, தூதனா என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? நீ ஏதும் அறியாத சிறு பெண். உன்னோடு அதைப் பற்றி விவாதித்துப் பயனில்லை. நீங்கள் போனதுதான் போனீர்களே! அவனைப் பற்றி ஏதாவது தெரிந்து கொண்டீர்களா?"

"இல்லை. நாங்கள் எவனைப் பார்க்கப் போனோமோ, அவன் உங்களுக்குக் கூடத் தெரியாமல் விடுதலையாகிப் போய் விட்டான். பழுவூர் இளைய ராணி நந்தினி தேவியின் கட்டளை எங்களை முந்திக் கொண்டு விட்டது. பாவம்! நீங்கள்தான் என்ன செய்வீர்கள்?"

சின்னப் பழுவேட்டரையர் உதடுகளைக் கடித்துக் கொண்டார். தமது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் தம் தமையனார் இளைய ராணிக்கு அதிக



இடம் கொடுத்து வந்தது இத்தகைய இளம் பெண்களுக்குக்கூட அல்லவா ஏச்சாகப் போய் விட்டது? இவ்விதம் தமது உள்ளத்தில் தோன்றிய அவமான உணர்ச்சியை வெளியில் காட்டிக் கொள்ளாமல், ''உங்கள் பங்குக்கு நீங்களும் ஓர் அரைப் பைத்தியக்காரனை விடுதலை செய்தீர்கள்!'' என்றார்.

''ஐயா! அரைப் பைத்தியம் என்று புஷ்ப சேவை செய்து வரும் சேந்தன் அமுதனைத் தானே சொல்கிறீர்கள்? அவரை அன்று விடுதலை செய்ததினால் இந்தச் சோழ நாடு எவ்வளவு பெரிய நன்மை அடைந்தது என்பதை அறிந்தால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்!''

''பெண்ணே! எனக்கு ஆச்சரியம் இனி ஒன்றிலுமே ஏற்படப் போவதில்லை. இந்தச் சோழ ராஜ்யம் யார் யாருக்கெல்லாம் நன்றிக் கடன்பட்டிருக்கிறது என்பதை நினைத்து ஆச்சரியப்பட்டுப் பட்டு எனக்கு அலுத்துப் போய் விட்டது. நீகூட இப்போது ஏதோ ஒரு முக்கியமான நன்மையைச் சோழ நாட்டுக்குச் செய்வதற்காகத்தான் வந்திருக்கிறாய் அல்லவா?''

''ஆம், ஐயா! முக்கியமான காரியம் இல்லாவிட்டால் தங்கள் தமையனார் அனுப்பியிருப்பாரா? அதிலும் ஒன்றும் அறியாத அபலைப் பெண்ணாகிய என்னை அனுப்பியிருப்பாரா?''



''என் தமையனுருக்குப் புத்திசாலித் தனம் அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது. உன்னை அனுப்பியதிலிருந்தே அது தெரிகிறது. நீ கொண்டு வந்த செய்தியைச் சீக்கிரம் சொல்லிவிடு!''

''பாண்டிய நாட்டுச் சதிகாரர்களைப் பற்றி அலட்சியமா யிருந்தது தவறு என்று தங்களிடம் கூறும்படி சொன்னுர். வீரபாண்டியனுடைய ஆபத்துதவிகள் சிலர் உண்மையாகவே பயங்கரச் சதி செய்து வருகிறுர்கள்; சோழ குலத்தைப் பழி வாங்க இன்று கெடு வைத்திருக்கிறுர்கள்; சக்கரவர்த்தியைப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும் என்று எச்சரிக்கும்படி கூறினுர்....''

இதைக் கேட்ட காலாந்தக கண்டர் நகைத்தார். ''இந்தப் பிரமாதமான செய்தியைத்தானு சொல்லி அனுப்பினுர்? ஒருவேளை உன் பெரிய தகப்பனுர் படை எடுத்துவரப் போவதைப் பற்றித் தான் தகவல் தெரிந்து சொல்லி அனுப்பினுரோ என்று பார்த்தேன். அவர் வெளியிலிருந்து கொடும்பாளுர் சைன்யத்தைப் பார்த்துக்கொண்டால், நான் கோட்டைக்குள்ளே சக்கரவர்த்திக்கு ஏதும் நேராமல் பார்த்துக் கொள்கிறேன். அதைப் பற்றி அவரும், நீயும், இளைய பிராட்டியும்கூடக் கவலைப்பட வேண்டியதில்லை!'' என்றுர்.

''ஐயா! தாங்கள் இப்படி அலட்சியமாகக் கருதுவீர்கள் என்று தெரிந்து மேலும் ஒரு விஷயம் சொல்லி அனுப்பியிருக்கிறுர். பழுவூர் இளையராணியின் அரண்மனைக்கு அடிக்கடி யாரோ மந்திரவாதி ஒருவன் வந்து போனது பற்றித் தாங்கள் எச்சரிக்கை செய்தீர்களாம். அதற்கு அவர் செவிகொடாமல், தங்களைக் கோபித்துக் கொண்டாராம். 'தம்பி! பெருங் குற்றம் செய்து விட்டேன். அந்த மந்திரவாதி ரவிதாஸன் என்பவன்தான் பாண்டிய சதிகாரன். வீர பாண்டியனுடைய ஆபத்துதவிகளின் தலைவன். சோழ குலத்தை வேரோடு கருவறுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவன். அவனுடைய ஆள் ஒருவன் இன்றைக்குச் சக்கரவர்த்தியின் மீது பழி வாங்க முயலுவான். அலட்சியம் வேண்டாம். சர்வ ஜாக்கிரதையுடன் இருக்கவும்'— இதுவே பெரிய பழுவேட்டரையர் தங்களுக்கு அனுப்பிய செய்தி! என் கடமையை நான் செய்து விட்டேன்.....''

காலாந்தக கண்டர் சிறிது திகைத்துத்தான் போய் விட்டார். இம்மாதிரி செய்தியைப் பெரியவரைத் தவிர வேறு யாரும் அனுப்பியிருக்க முடியாது.

''பெண்ணே! இது உண்மையானுல் அவர் ஏன் இங்கு உடனே வரவில்லை? உன்னை எதற்காக அனுப்பினுர்?....''

''என்னை அவர் அனுப்பவில்லை. அவர் இளைய பிராட்டியிடம் கூறினுர். இளைய பிராட்டி என்னை அனுப்பி வைத்தார். ஆதித்த கரிகாலருக்கும் இன்றைக்கே ஆபத்து வரவிருக்கிறது. ஆகையால் அவரைக் காப்பாற்ற அவர் திரும்பிப் போயிருக்கிறுர்.''

''எங்கே யிருந்து? அவர் உங்களை எங்கே பார்த்தார்?''

''குடந்தையில் ஜோதிடர் வீட்டில் பார்த்தார். இன்னும் தங்களுக்குச் சந்தேகம் தெளியவில்லையானுல் இதையும் கேளுங்கள். தங்கள் அண்ணன் படகில் கொள்ளிடத்தைத் தாண்டி வந்தபோது புயல் அடித்துப் படகு கவிழ்ந்து விட்டது. தப்பிப் பிழைத்துக் கரையேறிப் பள்ளிப் படையில் படுத்திருந்த போது சதிகாரர்கள் பேசியதைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். ஐயா! இன்னமும் இங்கேயே நின்று பேசிக் கொண்டிருக்க வேண்டுமா? அல்லது அரண்மனைக்குப் போகலாமா?''

''பெண்ணே! நீ சொன்னதெல்லாம் உண்மையாகவே இருக்கட்டும். எப்பேர்ப்பட்ட சதிகாரனு யிருந்தாலும், கோட்டைக் காவலைக் கடந்து வர முடியாது. நீ பெண்ணுயிருப்பதனுல் தான் உள்ளே வரவிட்டேன்....''

''வெளியே யிருந்து வரவேணுமென்பது என்ன? சதிகாரர்கள் கோட்டைக்குள்ளேயே இருந்துவிட்டால்....''

''ஒருநாளும் முடியாத காரியம்....''

''சரி; அது தங்கள் பொறுப்பு. என் கடமையை....''

''நிறைவேற்றி விட்டாய். இனி நீ திரும்பிப் போகலாம்.''

''இல்லை, ஐயா! என் கடமையில் ஒரு பாதியைத்தான் நிறைவேற்றியிருக்கிறேன். சக்கரவர்த்தியைப் பார்த்து இளையபிராட்டியின் செய்தியைச் சொல்லி விட்டால் முழுதும் நிறைவேறியதாகும்.....''

''அந்தச் செய்தியையும் என்னிடமே சொல்லி விடலாம்.''

''முடியாத காரியம். சக்கரவர்த்தியிடம் நேரில் தெரிவிக்கும்படி இளைய பிராட்டியின் ஆக்ஞை. இதோ இளைய பிராட்டியின் முத்திரை மோதிரம்!...''

''ஆ! முத்திரை மோதிரம் யார் யாரிடமோ வந்து விடுகிறது. இளைய பிராட்டிதான் கொடுத்தாள் என்பது என்ன நிச்சயம்? உன் பெரிய தந்தை இந்தக் கோட்டையை முற்றுகையிட்டிருக்கிறுர். உன்னை எப்படி நம்புவது?''

"ஓர் அபலைப் பெண்ணால் என்ன அபாயம் நேர்ந்துவிடும் என்று பயப்படுகிறீர்கள்?"

"பெண்ணே! பழுவூர் வம்சத்தினர் பயம் என்பது இன்னதென்று அறியமாட்டார்கள்...."

"அப்படியானால் என்னை அரண்மனை வரையில் போக விடுங்கள். தாங்களும் கூட வாருங்கள்......"

"இன்றைக்கெல்லாம் சக்கரவர்த்தியின் மனக் கலக்கம் மிகவும் அதிகமாயிருக்கிறது......"

"அந்தக் கலக்கத்தைத் தீர்ப்பதற்குரிய செய்தியுடன் நான் வந்திருக்கிறேன், ஐயா! விஷயம் இன்னதென்று அறிந்தால் என்னைத் தடுத்துத் தாமதப்படுத்தியதற்காகத் தாங்களே பச்சாத்தாபப்படுவீர்கள்...."

சின்னப் பழுவேட்டரையர் சிறிது வியப்புக் குறி காட்டி, "பெண்ணே! ஒருவேளை சின்ன இளவரசர் — பொன்னியின் செல்வரைப் பற்றிச் செய்தி கொண்டு வந்திருக்கிறாயா?" என்றார்.

"ஆம், தளபதி!"

"ஆகா! சின்ன இளவரசர் சுகமாயிருக்கிறாரா? இப்போது எங்கே வந்து கொண்டிருக்கிறார்? அவருக்கு... சதிகாரர்களால் அவருக்கும்...."

"ஆம்; பாண்டிய நாட்டுச் சதிகாரர்களால் அவருடைய உயிருக்கும் அபாயம் நேர இருந்தது. ஆனால் கடவுள் அருளால் விபத்து ஒன்றும் ஏற்படவில்லை. சௌக்கியமாயிருக்கிறார். இது தங்களுக்குச் சந்தோஷமளிக்கும் அல்லவா?"

"நல்ல கேள்வி! சின்ன இளவரசர் சௌக்கியமாயிருப்பது பற்றிச் சந்தோஷப்படாமல் துக்கப்படுவார்களா? வா! வா! உன்னோடு வீண் பொழுது போக்க விரும்பவில்லை. அரண்மனைக்கு வந்து சக்கரவர்த்தியிடம் நேரில் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிடு!"

இவ்விதம் கூறிச் சின்னப் பழுவேட்டரையர் தம் யானையை மேலே செலுத்தினார். இளவரசரைப் பற்றி அறிந்து கொள்ள அவருக்குப் பெரும் ஆவல் உண்டாயிற்று. அவருடைய மாப்பிள்ளை மதுராந்தகன் தஞ்சைச் சிம்மாசனம் ஏறுவதற்கு அருள்மொழிவர்மன் ஒரு போட்டி என்பதாக அவர் என்றும் கருதியதில்லை. சக்கரவர்த்திக்கு அந்த எண்ணமே இல்லை என்பதை அவர் அறிவார். அருள்மொழி தந்தை சொல்லைத் தட்டக்கூடியவனும் இல்லை. குந்தவை தலையிட்டு ஏதேனும் குளறல் செய்யாமலிருக்க வேண்டுமென்பதுதான் கவலை. அவள் இப்போது ஏதேனும் சூழ்ச்சி தொடங்கியிருக்கிறாளா, என்ன? அருள்மொழியைத் தன் வசத்தில் வைத்துக் கொண்டு ஏதேனும் தந்தைக்குத் தாறுமாறான செய்தி அனுப்பியிருப்பாளா? இளவரசனைப் பற்றி இந்தக் கொடும்பாளூர்ப் பெண் உண்மையாகவே செய்தி கொண்டு வந்திருந்து சக்கரவர்த்தியிடம் கூறினால், அதை அவர் தம்மிடம் சொல்லாமல் இருக்க மாட்டார். அருள்மொழி வர்மரின் உத்தேசம் இன்னதுதான் என்று தெரிந்து கொண்டால், அதற்கேற்பத் தாம் செய்ய வேண்டியது பற்றித் தீர்மானித்துக் கொள்ளலாம் அல்லவா? அச்சமயத்தில் பூதி விக்கிரம கேசரி தஞ்சைக் கோட்டை மீது படை எடுத்து வந்திருக்கும் சதிகாரச் செயலைப் பற்றியும் சக்கரவர்த்தியிடம் தெரிவித்து விடலாம் அல்லவா.....?

இரண்டு யானைகளும் அரண்மனை வாசலில் வந்து நின்றன.

சின்னப் பழுவேட்டரையர் இலகுவாக யானை மீதிருந்து கீழே குதித்தார்.

இன்னொரு யானை மலை அசைவது போல் அசைந்து மண்டியிட்டுப் படுத்தது. இரண்டு பெண்களும் யானைப் பாகனும் கீழே இறங்கினார்கள்.

வாசற் காவலனை அழைத்துச் சின்னப் பழுவேட்டரையர் ஏதோ கூறினார். அவன் அரண்மனையின் முன் வாசலைத் திறந்து விட்டான்.

காலாந்தக கண்டருடைய மனத்தில் அவருடைய தமையனார் சொல்லி அனுப்பியதாக வானதி கூறிய செய்தி உறுத்திக் கொண்டிருந்தது. அதை அவர் அலட்சியம் செய்யப் பார்த்தும் முடியவில்லை. முக்கியமாக, மந்திரவாதி ரவிதாஸனைப் பற்றி அறிந்தது அவருடைய மன அமைதியை மிகக் குலைத்தது. வீர பாண்டியரின் ஆபத்துதவிகளைப் பற்றி அவர் முன்னமே அறிந்திருந்தார். ஆனால் அவர்களுக்குத் தஞ்சாவூர்க் கோட்டைக் குள்ளேயே இடம் கிடைத்திருந்தது என்று அறியவில்லை. பழுவூர் இளைய ராணி மந்திரவாதியை அழைத்துப் பேசுவதெல்லாம் பெரிய பழுவேட்டரையரை மேலும் மேலும் தன்வசப்படுத்துவதற்காகவே என்று அவர் நம்பிக் கொண்டிருந்தார். அண்ணன் தம்பிகளுக்குள்ளே விரோதத்தை வளர்ப்பதும் அவளுடைய நோக்கமாயிருக்கலாம் என்று நினைத்தார். இப்போது இந்தப் பெண் சொல்வது சிறிது பீதிகரமான செய்தியாகத்தான் இருக்கிறது. ஆயினும், எந்த மந்திரவாதி அல்லது சதிகாரன் என்ன செய்துவிட முடியும்? தம்முடைய அநுமதியின்றிச் சக்கரவர்த்தியின் அரண்மனைக்

குள் ஓர் ஈயும் நுழைய முடியாது. சக்கரவர்த்தி வெளியிலே வருவதும் கிடையாது. இருந்தாலும் அரண்மனையைச் சுற்றிலும் இன்னும் கொஞ்சம் பாதுகாப்பைப் பலப்படுத்தி வைப்பது நல்லது. புயல் — வெள்ளம் என்று சொல்லிக் கொண்டும் முதன் மந்திரியைப் பார்ப்பதற்காக என்று சொல்லிக் கொண்டும் அதிகம் பேர் இரண்டு நாட்களாகக் கோட்டைக்குள் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாரும் வெளியில் போய்விட்டார்களா என்று தெரியாது. இன்று பகலில் திடீரென்று கோட்டைக் கதவைச் சாத்தியதும் நல்லதாய்ப் போயிற்று. துர் நோக்கம் கொண்டவர்கள் — சந்தேகாஸ்பதமான மனிதர்கள் யாராவது இந்தக் கோட்டைக்குள் வந்திருக்கிறார்களா என்று நன்றாகப் பரிசோதனை செய்து பார்த்து விடலாம்....

இவ்விதம், யானைமேல் அரண்மனையை நோக்கி வரும்போதே எண்ணமிட்டுக் கொண்டு வந்தார். அரண்மனை வாசலில் ஒரு பக்கத்தில் எப்போதும் ஆயத்தமாயிருந்த தம் ஆட்களைச் சமிக்ஞையால் அழைத்தார். அவர்களிடம் கோட்டையின் உட்பக்கம் முழுவதும் நன்றாய்த் தேடிச் சந்தேகாஸ்பதமாக யார் தென்பட்டாலும் பிடித்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார்.

பிறகு, வேளைக்காரப் படையாரிடம் அன்றிரவு முழுதும் தூங்காமலே அரண்மனையையும் சுற்றுப்புறங்களையும் காவல் புரிய வேண்டுமென்று சொல்ல எண்ணி, அவர்களுடைய தலைவனை அனுப்பும்படி ஆக்ஞாபித்தார்.

இந்நிலையில் யானையின் மேல் வந்த பெண்கள் என்ன ஆனார்கள் என்று திரும்பிப் பார்த்தார். அவர்கள் அப்போது அரண்மனை முன்புறத்து நிலா முற்றத்தைத் தாண்டி முதல் வாசற்படிக்கு அருகிலே போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால்... ஆனால்... இவன் யார்? அவர்களைத் தொடர்ந்து போகும் அந்த மூன்றாவது உருவம்? தலைப்பாகையைப் பார்த்தால் யானைப்பாகன் மாதிரி தோன்றியது! ஆகா! யானைப் பாகன் ஏன் தொடர்ந்து போகிறான்? அரண்மனைக்குள் அவனுக்கு என்ன வேலை? சக்கரவர்த்தியிடந்தான் அவனுக்கு என்ன காரியம்?

மிகப் பயங்கரமான ஓர் எண்ணம் அவர் மனத்தில் மின்னலைப் போல் தோன்றிச் சொல்ல முடியாத வேதனையை உண்டாக்கியது. கோபக் கனலை எழுப்பியது. ஒருவேளை இதில் ஏதேனும் சூழ்ச்சி இருக்குமோ? இவன் தான் சதிகாரனோ? இந்தப் பெண்களை ஏமாற்றிவிட்டு, யானைப் பாகன் போல் வந்திருக்கிறானோ? தாமும் ஏமாந்துவிட்டோமோ? தம் கண் முன்னால் சக்கரவர்த்தியைக் கொல்ல வந்த வீர பாண்டியனின் ஆபத்துதவி அரண்மனைக்குள்ளே போகிறதா? காலாந்தக கண்டனுக்கு அவ்வளவு பெரிய அசட்டுப் பட்டமா? ஒருவேளை இது பூதி விக்கிரம கேசரியின் சூழ்ச்சியில் சேர்ந்ததா? எதுவாயிருந்தாலும் சரி, இதோ மறுகணத்தில் எல்லாம் தெரிந்து போய் விடுகிறது!

நாலே எட்டில் நிலா முற்றத்தைக் காலாந்தக கண்டர் கடந்து சென்று யானைப் பாகன் சமீபம் அடைந்தார். ''அடே! நில் இங்கே!'' என்று ஒரு



இந்துக் குடும்பங்களில் 'நம்ம மாப்பிள்ளை வீடு!' என்று சொல்லி மாமனாரும் மாமியாரும் 'டேரா' அடிப்பதைக் காண்கிறோம். ஆனால் இந்த வழக்கம் சிந்திக் குடும்பங்களில் கிடையாது. சிந்திப் பெண்ணை மணம் முடித்துக் கொடுத்து விட்டால் அவளது பெற்றோர்கள் தம் மாப்பிள்ளையின் வீட்டுக்கு விஜயம் செய்வது அபூர்வம். அப்படி ஒருவேளை பார்க்க அவர்கள் வந்துவிட்டாலும் மாப்பிள்ளை வீட்டில் உணவருந்த மாட்டார்கள். அப்படியே கணவன் வீடு புகுந்த மகள் வீட்டில் உணவு உட்கொண்டாலும் அதற்குரிய பணத்தைச் செலுத்திவிட வேண்டும் என்பது அவர்களிடையே நிலவும் விநோத சம்பிரதாயம்!

(சிந்திப் பெண்மணி ஜரீனா ஜெதூ கூறியது.)

- பி. என். எம்.

கர்ஜனை செய்தார். "நீ ஏன் உள்ளே போகிறாய்? யானைப் பாகனுக்கு அரண்மனைக்குள் என்ன வேலை?" என்று கூறிக் கொண்டே, அவனுடைய ஒரு கரத்தைத் தமது வஜ்ராயுதம் போன்ற கை முஷ்டியினால் பிடித்துக் கொண்டார்.

அவருடைய கோப கர்ஜனைக் குரலைக் கேட்டு விட்டு முன்னால் சென்ற இரு பெண்களும் திரும்பிப் பார்த்தார்கள். அவர்களுடைய முகங்கள் சிறிது பயம், வியப்பு, ஆர்வம் முதலிய உணர்ச்சிகளைப் பிரதிபலித்தன; அதே சமயத்தில் புன்னகை மலர்ந்தது. வானதி "ஐயா! அவர்... அவர்..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்துச் சிறிது தயங்கினாள்.

குரோதத்தின் சிகரத்தை அடைந்திருந்த சின்னப் பழுவேட்டரையர் அவளைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை; அவள் வார்த்தையைப் பொருட்படுத்திக் கேட்கவும் விரும்பவில்லை.

யானைப் பாகனுடைய தடுமாற்றத்திலிருந்து அவருடைய சந்தேகம் மேலும் மேலும் உறுதிப்பட்டது.

முன்னொரு தடவை தம்மை ஏமாற்றிவிட்டுத் தப்பி ஓடிப் போன வாணர் குலத்து வாலிபனே என்ற விபரீத எண்ணம் அந்தக் கணத்தில் தோன்றியது. மறுபடியும் தம்மை ஏமாற்றிவிட்டுப் போகலாம் என்று இவ்வளவு துணிச்சலுடன் வந்திருக்கிறானோ?...

பிடித்த பிடியை இன்னும் சிறிது கெட்டியாக்கிக் கொண்டு சின்னப் பழுவேட்டரையர் "அடா! உண்மையைச் சொல்! நீ யார்? யானைப் பாகன்தானா? அல்லது சதிகாரனா? முன்னொரு தடவை என்னிடமிருந்து தப்பிச் சென்ற ஒற்றனா? இம்முறை தப்ப முடியாது!" என்று சொல்லிக் கொண்டே, பிடித்த பிடியை விடாமல் 'யானைப் பாகன்' முகத்தைத் தம்மை நோக்கித் திருப்பினார்.

அரண்மனையின் முன் மண்டபத்தில் எரிந்த தீபங்களின் வெளிச்சம் இலேசாக அந்த 'யானைப் பாகனின்' கம்பீரமான முகத்தில் விழுந்தது.

"தளபதி! நான் யானைப் பாகன் கூடத்தான். தங்களிடமிருந்து என்றும் தப்பிச் சென்றதில்லை. தங்களிடம் என்னை ஒப்புக் கொடுக்கவே வந்திருக்கிறேன்!" என்றான் யானைப் பாகன்.

காலாந்தக கண்டர் அந்த முகத்தைப் பார்த்தார். அந்தக் குரலைக் கேட்டார். மேல் உலகம் ஏழும் இடிந்து அவர் தலைமேல் ஒருமிக்க விழுந்து விட்டது போலிருந்தது. அவ்விதமாகத் திகைத்துச் சித்திரப் பதுமை போல் நின்று விட்டார். கைப்பிடியை விடுவதற்குக் கூட அவருக்குத் தோன்றவில்லை. கைப்பிடி அதுவாகத் தளர்ந்து இளவரசர் அருள்மொழி வர்மரை விடுதலை செய்தது.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

கோஷம் எழுந்தது!

இளவரசர் அருள்மொழி வர்மரின் அந்த இளம் பொன் முகத்தில் என்ன மாய மந்திர சக்திதான் இருந்ததோ, தெரியாது. இத்தனைக்கும் இளவரசர் அச்சமயம் முகத்தைச் சுளுக்கிக்கொள்ளவும் இல்லை. கோபத்தின் அறிகுறியும் சிறிதுகூடக் காட்டவில்லை. வெண்ணெய் திருடி அகப்பட்டுக் கொண்ட கண்ணனைப் போல் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் பாவனை முகத்தில் தோன்றும்படி நின்றார். சின்னப் பழுவேட்டரையரிடம் குற்றம் கண்டுபிடித்துக் கடிந்துகொள்ளும் அறிகுறியோ, அவரை எதிர்த்துப் போராடும் நோக்கமோ அணுவளவும் அவர் முகத்தில் காணப்படவில்லை.

ஆயினும் அஞ்சா நெஞ்சமும் அளவிலா மனோதிடமும் வாய்ந்தவரான காலாந்தக கண்டரின் கை கால்கள் அந்தக் கணத்தில் வெடவெடத்துவிட்டன. முகத்தில் வியர்வை அரும்பியது. இன்னது செய்கிறோம் என்றுகூட அறியாமல் இரு கைகளையும் கூப்பி வணக்கம் செலுத்தியவாறு, "பொன்னியின் செல்வா! ஈழம் கொண்ட வீரா! சோழ நாட்டின் தவப் புதல்வா! இது என்ன கோலம்? இது என்ன காரியம்? இவ்விதம் தண்டிப்பதற்கு என்ன குற்றம் செய்தேன் நான்?... சற்று முன் நான் செய்த பிழையைப் பொறுத்துக் கருணை புரிய வேண்டும். 'மன்னித்தேன்' என்று அருள் வாக்குத் தர வேண்டும்.. கண்ணிருந்தும் பாராத குருடனாகி விட்டேன்..." என்று நாத் தழுதழுக்கக் குரல் நடுங்கக் கூறினார்.

மேலும் இதே முறையில் பேசப் போனவரை இளவரசர் தடுத்து. "தள

பதி! இது என்ன? தாங்களாவது குற்றம் செய்யவாவது? ஒன்றும் அறியாத இந்தச் சிறுவன் தங்களை மன்னிப்பதாவது?'' என்றார்.

''தங்களைப் பிடித்து நிறுத்திய இந்தக் கையை வெட்டினாலும் போதிய தண்டனை ஆகாது. 'அடா' என்று அழைத்த என் நாவை அறுத்துப் போட்டாலும் போதாது...''

''தங்கள் வார்த்தைகள் என் காதில் நாராசமாக விழுகின்றன. போதும், நிறுத்துங்கள். தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவதற்காகத் தங்கள் கடமையைச் செய்தீர்கள். அதில் குற்றம் என்ன? தவறு என்னுடையது. நான் இந்த வேடத்தில் — யானைப் பாகனாக வருவேன் என்று...''

''நான் எதிர்பார்க்கவே இல்லைதான். இப்படித் தாங்கள் செய்யலாமா? எதற்காக? சோழ நாட்டின் மகாவீரரை இப்படியா நான் வரவேற்றிருக்க வேண்டும்? ஆசார உபசாரங்களுடன் முன் வாசலில் வந்து காத்திருந்து வெற்றி முரசுகள் எட்டுத் திக்கும் அதிரும்படி முழங்க வரவேற்றிருக்க மாட்டேனா?..''

''தாங்கள் அப்படிச் செய்வீர்கள் என்று அறிந்துதான் நான் இந்த வேஷத்தில் வந்தேன். அதற்கெல்லாம் இது சரியான நேரமல்ல. தங்களுக்குத் தெரியாதா? சதிகாரர்களின் தீய முயற்சிகளைப் பற்றிச் சற்று முன் கொடும்பாளூர் இளவரசி கூறினள் அல்லவா? அது உண்மையாக இருக்கலாமென்றே எனக்கும் தோன்றுகிறது...''

''இளவரசே! என்னையும் அந்தப் பாண்டியச் சதிகாரர்களுடன் சேர்த்து விட்டீர்களா?...''

''கடவுளே! என் தந்தை சக்கரவர்த்தியைப் பாதுகாப்பதற்குத் தாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்து மனத்துக்குள் மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறேன். முதலில் என் தந்தையைப் பார்த்து விட்டுப் பிறகு...''

''ஐயா! சக்கரவர்த்தியைத் தாங்கள் பார்க்கக் கூடாதென்று நான் தடுத்து விடுவேன் என்று நினைத்தீர்களா? அத்தகைய பாவி நான் என்று யாரேனும் தங்களுக்குச் சொல்லி யிருந்தால்...''

''ஒரு நாளும் நான் நம்பியிருக்க மாட்டேன், தளபதி!''

''பின் ஏன் இந்த வேஷம்?''

''வேறு முறையில் நான் கோட்டைக்குள் வந்திருக்க முடியுமா, யோசியுங்கள்! கோட்டையைச் சுற்றித் தென்திசைச் சேனைகள் வந்து சூழ்ந்திருக்கின்றன. பெரிய வேளாரும் வந்திருக்கிறார். எதற்காக வந்திருக்கிறார் என்று தங்களுக்குத் தெரிந்திருக்கும்...''

''கோட்டைக் கதவுகளை நான் மூடச் செய்தது நியாயமே அல்லவா? அதில் ஏதேனும் குற்றம் உண்டா?''

''ரொம்ப நியாயம். பெரிய வேளாரின் புத்தி கெட்டுப் போயிருக்கிறது. அவரால் நான் கோட்டைக்குள் வருவது தடைப்படும் என்றுதான் இந்த வேடத்தில் வந்தேன். அவர் மகளையும் அழைத்துக்கொண்டு வந்தேன். நல்ல வேளையாக அவர் என்னைக் கவனிக்கவில்லை. தங்களுடைய கூர்மையான கண்கள் கண்டுபிடித்து விட்டன...''

''என் கண்கள் மூடிப் போயிருந்தன. அதனாலேதான் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளவில்லை. தங்களை யானைப் பாகன் என்று எண்ணிக் கூறிய வார்த்தைகளைத் தாங்கள் கருணை கூர்ந்து மன்னித்து விடுங்கள்...''

''அவ்விதம் சொல்ல வேண்டாம். தாங்கள் வேறு, என் தந்தை வேறு என்றே நான் எண்ணவில்லை. என்னைச் சிறைப்படுத்திக் கையோடு கொண்டு வருவதற்காகத் தாங்கள் ஆட்களை அனுப்பியிருந்தீர்கள்...''

''கடவுளே! இது என்ன வார்த்தை? நானா சிறைப்படுத்த ஆட்களை அனுப்பினேன்? தங்களை உடனே பார்க்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் தந்தை—சக்கரவர்த்தி—அனுப்பினார் ...!''

''அது எனக்குத் தெரியாதா தளபதி! இலங்கையில் நான் இருந்தபோது அவர்கள் வந்தார்கள். 'சக்கரவர்த்தியின் கட்டளை அல்ல; பழுவேட்டரையர்களின் கட்டளை' என்று என் அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள்...''

''எங்கள் விரோதிகள் அப்படிச் சொல்லி யிருப்பார்கள்...''

''நான் அவர்களுக்கு 'என் தந்தையின் கட்டளை எப்படியோ, அப்படியே பழுவேட்டரையர்களின் கட்டளையும் என் சிரமேல் கொள்ளத் தக்கது' என்று கூறினேன். கடலையும் புயலையும் மழையையும் வெள்ளத்தையும் தாண்டி வந்தேன். அரண்மனையின் முன் வாசலைத் தாண்டி உள்ளே போனதும் தங்கள் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணினேன். தங்கள் கட்டளையின்றி என் தந்தையைப் பார்க்கவும் நான் விரும்பவில்லை.''

''இளவரசே! இன்னும் என்னைச் சோதிக்கிறீர்களா? தங்கள் தந்தை

யைத் தாங்கள் சந்திப்பதற்கு நான் என்ன கட்டளை இடுவது? தங்களுடன் வரச் சொன்னால் வருகிறேன். இங்கேயே நிற்கச் சொன்னால் நின்று விடுகிறேன்! இளவரசரின் விருப்பமே என் சிரசின் மேல் சூடும் கட்டளை!'' என்று பணிவுடன் கூறினார் பழுவேட்டரையர்.

''தளபதி! தாங்கள் இங்கேயே நிற்க வேண்டித்தான் நேரும் போலிருக்கிறது. அதிக நேரம் நாம் இங்கு நின்று பேசிக் கொண்டிருந்து விட்டோம். அதோ பாருங்கள்!'' என்றார் இளவரசர்.

சின்னப் பழுவேட்டரையர் திரும்பிப் பார்த்தார். சற்று முன் தூரத்தில் நின்ற அவருடைய ஆட்கள் எல்லாம் நெருங்கி வந்திருப்பதைக் கண்டார். அவர்கள் மட்டுமல்ல; அரண்மனை வாசற் காவலர்களும் வந்துவிட்டார்கள். இன்னும் தூரத்தில் நின்ற வேளைக்காரப் படையினரிலும் சிலர் பிரிந்து வந்து கொண்டிருந்தார்கள்.

அருகில் வந்து விட்டவர்கள் அனைவரும் பொன்னியின் செல்வரைக் கண் கொட்டாத ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சின்னப் பழுவேட்டரையர் திரும்பிப் பார்த்த நேரத்தில் இளவரசரின் திருமுகத்தில் விளக்கு வெளிச்சம் நன்றாக விழுந்து மிகப் பிரகாசமாகத் தெரிந்தது.

வீரர்களில் ஒருவன் ''வாழ்க இளவரசர்!'' என்றான். ''வாழ்க பொன்னியின் செல்வர்!'' என்றான் இன்னொருவன்.

''மகிந்தனைப் புறங் கண்டு ஈழம் கொண்ட வீராதி வீரர் வாழ்க!'' என்றான் மற்றொருவன்.

இந்தக் குரல்களைக் கேட்டவுடன் வேளைக்காரப் படையினர் அனைவரும் அங்கு விரைந்துவரத் தொடங்கினார்கள்.

பற்பல குரல்களிலிருந்து ''வாழ்க பொன்னியின் செல்வர்!'' என்ற வாழ்த்தொலிகள் எழுந்தன.

அரண்மனை வாசலான படியாலும் சின்னப் பழுவேட்டரையர் அங்கிருந்த படியாலும் அந்த ஒலி மிக மெல்லியதாகத்தான் அப்போது எழுந்தது. இளந் தென்றற் காற்று புதிதாகத் தளிர்த்த அரச மரத்தின் மீது அடிக்குங்கால் ஏற்படும் 'சலசலப்பு'ச் சத்தத்தைப் போல்தான் கேட்டது. நேரமாக ஆக, நாள் ஆக ஆக, அந்த மெல்லிய ஒலி எப்படி வளர்ந்து, வளர்ந்து, பெரிதாகி, மகா சமுத்திரத்தின் ஆயிரமாயிரம் அலைகளின் ஆரவாரத்தையும் மிஞ்சிய மகா பெரும் கோஷமாயிற்று என்பதைப் பின்வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

''தளபதி! நாம் இங்கே நின்று பேசியது தவறாகப் போயிற்று. அரண்மனைக்குள்ளே பிரவேசிக்கும்வரையில் நான் என்னைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்பாததன் காரணம் இப்போது தெரிகிறது அல்லவா?'' என்று இளவரசர் கேட்டார்.

''தெரிகிறது, இளவரசே! நான் இவர்களுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு வருகிறேன். தாங்கள் தயவுசெய்து விரைந்து உள்ளே செல்லுங்கள்!'' என்றார் காலாந்தக கண்டர்.

(தொடரும்)

உலகம் சுற்றும் தூதன்



திரு நெ. து. சுந்தரவடிவேலு

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் தென்னகத்தின் கோட்பாடு உலகத்தின் எல்லா நாடுகளுக்குமே உடன்பாடுதான். ஐக்கியநாட்டுப் பேரவை இதன் அடிப்படையில்தான் உருவாகியுள்ளது.

உலகம் என்பது அரசியல் மட்டும் அல்ல; அரசியலுக்கும் அப்பாற்பட்டது. அதை இணைக்க வேறு முறைகளையும் கையாளலாம் என்பதை உணர்ந்து ஐ.நா.நிறுவனமே, அறிவு, விஞ்ஞானம், கலாசாரம் முதலிய துறைகளைப் பேணி வளர்த்து அதன் மூலம் அகில உலகத்துக்கும் ஓர் ஒருமைப்பாட்டை நிலை நாட்ட மற்றுமோர் அமைப்பை நிறுவியது. அந்த யுனெஸ்கோ நிறுவனம் துளிக்கூட அரசியல் கலப்பில்லாத நிறுவனம். அது பல்வேறு நாடுகளின் மேதாவிலாசங்களையும் நெருக்கமாகப் பிணைத்து இணைக்க வேண்டும் என்ற நன்முயற்சியில் 'கூரியர்' என்னும் பன்மொழிப் பத்திரிகையை 1948ம் ஆண்டிலிருந்து நடத்தி வருகிறது.

பிரஞ்சு, ஆங்கிலம் — இவ்விரு மொழிகளிலும் முதலாவதாகத் தொடங்கப் பெற்ற இப்பத்திரிகை இப்பொழுது பன்னிரண்டு மொழிகளில் வெளிவருகிறது. பாரத மொழிகளில் இரண்டு மொழிகளே இவ்வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றன. ஒன்று தமிழ்; மற்றொன்று ஹிந்தி.

விஞ்ஞானம், கலாசாரம், கல்வி போன்ற இன்னோரன்ன துறைகளில், அரசியல் வாடை சிறிதும் இன்றி அந்தந்தத் துறைகளில் வல்லுநர்களைக் கொண்டு ஆக்கபூர்வமான கட்டுரைகள் எழுதச் செய்கிறது கூரியர். சிறப்புக் குழு ஒன்று கட்டுரைகளைப் பரிசீலித்துச் சுருக்கிப் பெருக்கித் தெளிந்து தொண்டாற்றுகிறது. இவ்விதம் செப்பனிடப்பட்டு வெளியாகும் கட்டுரைகள் பல்வேறு மொழிகளில் அந்தந்தத் துறையில் தேர்ந்

புற்றுநோயை எதிர்த்துப் போராட்டம்



கல்வியில் நெருக்கடியான கட்டம் (1)



கூரியர் பத்திரிகையில் வெளிவரும் பல சித்திரங்களும் புகைப்படங்களும் அபூர்வமானவை; கலை அழகு நிரம்பியவை.

★




வாலி சுக்ரீவன் சண்டை..
- கம்போடிய சிற்பம்

தவர்களின் உதவி கொண்டு மொழிபெயர்க்கப்பட்டு மொழி வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு வெளியிடப் பெறுகின்றன. எம்மொழிப் பத்திரிகையாயினும் பார்ப்பதற்கு ஒரேமாதிரி இருக்குமாறு அச்சிட்டு ஒருமைப்பாட்டைக் காணவும் முயற்சி எடுத்துள்ளனர்.

தமிழில் தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் ஆதரவில் கூரியர் வெளி வருகிறது. இதன் நிர்வாக ஆசிரியர், சென்னை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு நெ. து. சுந்தர வடிவேலு.

கூரியரைப் பற்றி விளக்கம் தந்த அவரிடம், "ஒரு 'கூரியாவிடி'யில் கேட்கிறேன். கூரியர்

கல்வியில் நெருக்கடியான கட்டம். (2)



என்று பெயர் வைப்பானேன்?" என்றேன்.

"'கூரியர்' என்னும் சொல்லுக்கு 'மெசஞ்சர்' அதாவது தூதுவன் என்று பொருள். உலகத்தின் ஒருமைப்பாட்டுக்குத் தூதுவனாக விளங்க வேண்டும் என்பதற்காக இப்பெயர் இடப்பெற்றிருக்கிறது. அந்தந்த மொழிகளில் பெயர் மாற்றம் செய்யாமல் ஒருமைப்பாடு காணக் 'கூரியர்' என்னும் பெயரையே வைத்திருக்கிறார்கள்!" என்றார் அவர்.

இப்பத்திரிகைக்குத் துணை ஆசிரியராகப் பெரும் பங்கு கொண்டு பணியாற்றும் மணவை முஸ்தபா அவர்கள் தமிழார்வம் கொண்டவர். கூரியர் என்னும் சொல்லுக்குத் தமிழ்ப் பொருளை கொடுக்க முன் வந்து விட்டார். "நுண்ணிய அறிவு சார்ந்த விஷயங்களைத் தருவதால் 'கூரிய' என்னும் சொல்லுக்கு 'ர்' விகுதி சேர்த்ததாகக் கொள்ளலாமே?" என்றார்.

அவருடைய இந்தக் 'கூரிய' விடைக்கும் கூரியருக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்றாலும் தமிழாகப் பொருத்திப் பார்த்து அவர் மன நிறைவு கண்டதைக் காண நமக்கும் மகிழ்ச்சி தானே?

"கூரியர் தமிழில் எத்தனை ஆண்டுகளாக வருகிறது?"



மணவை முஸ்தபா

"1967ம் ஆண்டு முதல், பாரத அரசாங்கத்தின் கல்வித் துறை ஆலோசகராக நான் இருந்த காலத்தில் ஹிந்தி, தமிழ் இரு மொழிகளிலும் இதனைக் கொண்டு வருவது என்று முடிவாகியது. யுனெஸ்கோவில் டிபுடி டைரக்டர் ஜெனரலாகப் பணியாற்றும் திரு மால்கம் ஆதிசேஷய்யாவின் நல் முயற்சியினால் இம்முயற்சி ஊக்கம் பெற்றுச் செயலாக முகிழ்த்தது. ஹிந்திப் பதிப்பைப் பாரத அரசாங்கத்தின் ஹிந்தித் துறையினர் வெளியிடுவது என்றும் தமிழ்ப் பதிப்பைத் தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் வெளியிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. தென் மொழிகள் புத்தக டிரஸ்டின் தலைவர் தென்னிந்தியப் பல்கலைக் கழகம் ஒன்றின் துணைவேந்தராக இருக்க வேண்டும் என்பதை ஒரு மரபாக்கினோம். அந்த மரபில் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இதன் ஆசிரியராகவும் பணியாற்றினார். இந்தக் கூரியர் விஷயத்தில் எனக்கும் ஆரம்ப காலத்தில் ஒரு பங்கு உண்டு. ஆனதால் விட்ட குறை தொட்ட குறையாக ஆசிரியர் பொறுப்பு என்னை வந்து அடைந்திருக்கிறது! ஆனால் பத்திரிகைக்கு

மனிதனும் வன்முறையும்





வரிவரை உறவு !

● வரி அலுவலகத்துக்குள் வந்து ஒருவர் ஒன்றும் பேசாமல் எல்லோரையும் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தார். ஓர் அதிகாரி அவரை அணுகி, ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார். அவர் சொன்னார்: ''நான் யாருக்காக நாள் முழுதும் உழைக்கிறேனோ அவர்களைச் சும்மாப் பார்த்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்!''

● போலீஸ் ஸ்டேஷனுக்குப் பதற்றத்துடன் ஓடி வந்து ஒருவர் சொன்னார்: ''எனக்குக் கொஞ்ச நாட்களாக ஏகப்பட்ட மிரட்டல் கடிதங்கள் வருகின்றன.''

இன்ஸ்பெக்டர் உறுமினார்: ''யாரிடமிருந்து? சொல்லுங்கள், உள்ளே தள்ளிவிடுகிறேன்.''

''வரி அலுவலகத்திலிருந்து சார்!'' என்றார் வந்தவர்!

● ''வரியைப் புன்னகையுடன் அளித்தால்தான் சிறந்தது.''

''நான் அப்படித்தான் செய்தேன்; ஆனால் பணமாக வேண்டுமென்று சொன்னார்கள்!''

—கே. வி. முரளி

ஓர் உருவம் கொடுப்பது, தமிழாக்கங்களைச் செய்விப்பது, பார்வையிடுவது போன்ற பொறுப்புக்களைத் திரு முஸ்தபா போன்றவர்கள்தாம் மேற்கொண்டிருக்கிறார்கள்!'' என்றார் திரு சுந்தரவடிவேலு.

''மொழிபெயர்க்கும்போது தமிழில் அறிவியல் சொற்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதில்லையே!''

''தட்டுப்பாடு ஏற்படுகையில் தமிழ்சார்ந்த சொல்லாக்கங்களும் செய்து கொள்ளுகிறோம். இந்தக் கூரியர் பத்திரிகை வளம் மிக்க வளரும் தமிழை மேலும் வளப்படுத்துகிறது.''

திரு சுந்தரவடிவேலுவின் இக் கூற்றுக்கு மேற்கோள் காட்டுவது போல் திரு முஸ்தபா கூறினார்: ''டுமர்' என்னும் சொல்லுக்குக் 'கட்டி' என்று சட்டென்று மொழிபெயர்த்து விடுவோம். 'டுமர்' உடலுக்குள் ஏற்படுவது; வெளியே தெரியாதது. கட்டி அப்படியல்ல; உடல் மேலே தெரிவது. தமிழில் 'கழலை' என்று ஒரு சொல் இருக்கிறது. அது 'டுமர்'ருக்கு நேரான பொருள் தருவது. இதே போலத் தமிழில் அலை அதிர்வுஇயல் என்று 'சைமாடிக்ஸ்' என்னும் சொல்லுக்குப் பொருள் தந்திருக்கிறோம்.''

''தமிழ்க் கூரியருக்கு வரவேற்பு எப்படி?''

''அறிவியல் விஷயங்களை இதில் அடங்கியிருப்பதால் ஏறக் குறைய மூவாயிரம் பிரதிகள் விலையாகின்றன. இதைக் குறைவு என்று கூற முடியாது. ஆனாலும் இம் முயற்சி மேலும் வெற்றி காண வேண்டும்.''

''கூரியர் தன்நிறைவோடு நடக்கிறதா?''

''மன நிறைவோடு நடைபெறுகிறது. ஆனால் பண நிறைவோடு நடைபெறவில்லை. நஷ்டத்தை ஈடுகட்டத் தமிழக அரசு, இந்திய அரசாங்கம், யுனெஸ்கோ நிறுவனம் ஆகியவை பங்கு போட்டுக் கொள்ளுகின்றன!''

''இது மாதமொரு பத்திரிகையா?''

''ஆமாம். ஆனால் கூரியரைப் பொறுத்த வரையில் ஆண்டு ஒன்றுக்குப் பன்னிரண்டு மாதங்கள் இல்லை. பதினொரு மாதங்கள்தாம் ஏனென்றால் செப்டம்பர் — அக்டோபர் இரண்டு மாத இதழ்களும் ஒன்றாக இணைந்து வந்து விடுகின்றன!''

''ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழியில் மொழிபெயர்க்கும் பொழுது சொல்லமைப்பு கூடவோ குறையவோ செய்யுமே! அதற்கேற்பப் பக்கங்களைக் கூட்டவோ குறைக்கவோ செய்கிறீர்களா?'' — என் அநுபவம் பேசிற்று.

''இல்லை!''

''அப்படியானால் பக்கங்களை எப்படிச் சரிக்கட்டுகிறீர்கள்?''

நிர்வாக ஆசிரியர் துணையாசிரியரைப் பார்த்தார்; துணை ஆசிரியர் என்னைப் பார்த்தார். நெருடலான கேள்வி கேட்டு நெருக்கடியை உண்டு பண்ணி விட்டோமோ?— என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

''நெருக்கடியான நிலைதான். தமிழில் உள்ள சொற்கட்டு சொற் செட்டுகளைப் பயன்படுத்திக் கருத்துச் சிதைவு இல்லாமல் பார்த்துக்கொள்ளுவோம்.''

''ஹிந்திப் பதிப்பு எப்படி வெளி வருகிறதோ?''

''சரியானபடி வரவில்லை. 'நீங்கள் எப்படிக் கனகச்சிதமாகக் கொண்டு வருகிறீர்கள்?' என்று தமிழ்ப் பதிப்பைப் பார்த்துவிட்டு அவர்கள் வியக்கிறார்கள். எனவே, ஹிந்தித் துறை அலுவலகத்திலிருந்து தேசியப் புத்தக நிறுவனம் இதை வெளியிடும் பொறுப்பை ஏற்றிருக்கிறது. இனி நல்ல முறையில் வரலாம்.''

திரு சுந்தர வடிவேலு இதைத் தொடர்ந்து இன்னுமொன்றும் கூறினார்:

''தமிழ்ப் பத்திரிகையைக் கவனித்துக் கொள்ள திரு முஸ்தபா போன்ற இளைஞர் கிடைத்திருக்கிறார். ஆக்கமும் ஊக்கமும் பெற்று அருஞ் செயலாற்றுகிறார். குறைவான நபர்களைக் கொண்டு நிறைவான பணி இங்கு நடைபெறுகிறது. மற்ற மொழிகளுக்குச் சிப்பந்திகள் அதிகம்.''

முஸ்தபாவுக்கு ஒரே மகிழ்ச்சி. தமது சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை நீட்டுகிறார். யுனெஸ்கோ நிறுவனத்தின் டிபுடி டைரக்டர் ஜெனரல் திரு மால்கம் ஆதிசேஷய்யா தமிழ்க் கூரியர் செய்யும் பொற்பணிக்கு வழங்கியுள்ள நற்சான்றிதழே அது.

'கூரியரின் தமிழ்ப் பதிப்பினை யுனெஸ்கோ பெரு மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறது. குறிப்பாக அதன் வழுவற்ற மொழிபெயர்ப்பையும் ஒவ்வோர் இதழின் தோற்ற அமைப்பில் தனித் தன்மையையும் திறமையையும் கண்டு நாங்கள் உவகை அடைகிறோம்.'

திரு முஸ்தபாவின் மகிழ்ச்சி திரு சுந்தரவடிவேலுவின் முகத்திலும் பளிச்சிடுகிறது. அதைக் கண்ட என்னையும் அது பற்றிக் கொள்ளுகிறது. அகில உலக ரீதியில் தமிழுக்கு இப்படி ஒரு பாராட்டுக் கிடைத்திருக்கிறது என்றால் தமிழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி ஏற்படுவது நியாயம்தானே? —ரா. வீழிநாதன்

பதில் இங்கே; கேள்வி எங்கே?

மேற்படி தலைப்பில் நான்கு பதில்களைக் கொடுத்து அவற்றுக்குரிய கேள்விகளை எழுதி அனுப்புமாறு வாசக அன்பர்களைக் கேட்டிருந்தோம்.

நாங்கள் பிரசுரித்திருந்த பதில்களாவன.

1. இது ஒரு ஜனநாயக நாடு என்பதால்.
2. தெய்வம் நின்று கொல்லும்.
3. சென்னை பஸ் ஸ்டாப் ஒன்றில்.
4. இன்றே, இப்பொழுதே, இங்கேயே.

கிண்டலும் நகைச்சுவையும் மிக்க கேள்விகளை எழுதி அனுப்புவோருக்குப் பரிசுகள் உண்டு என அறிவித்திருந்தோம். அதன்படி பரிசு பெறுவோர் விவரமும் அவர்கள் எழுதி அனுப்பிய கேள்விகளும் பின்வருமாறு.

முதல் பரிசு ரூபாய் 25-00

திரு எஸ். ஜெயராமன் 'ரேகா'

நான்கு பதில்களுக்கும் சிறந்த கேள்விகளை எழுப்பியவர்.

1. இந்தியாவில், இந்திய மக்களால் மக்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் மக்கள் ஆதரவின்றி மீறப்படுவது ஏன்?



2. அரசியல் பிழைத்தோரை அறம் அன்றே கொல்லும். அரசியலில்] உ பிழைப்போரை?



3. திருமணங்கள் [சொர்க்கத்துக்கு அடுத்தபடி எங்கே நிச்சயிக்கப்படுகின்றன?

4. என் கேள்விகளுக்குப் பரிசு வழங்குவது என்று? எங்கே? எப்போது?



இரண்டாம் பரிசு ரூபாய் 15-00

திரு வி. ஜி. வைத்தியநாதன்

மூன்று பதில்களுக்கு நல்ல கேள்விகளைக் கேட்டவர்.

1. ஏன் இந்நாட்டின் ஜனங்கள் நாய் படுகிற பாடு படுகிறார்கள்?

2. அனந்தசயனனை நம்பியவன் எதையும் செய்யலாம், ஏன்?



3. திருமலையில் நின்றிருந்தால் திருமாலையே தரிசித்திருக்கலாம்; இக்குரல் எங்கு எழுந்திருக்கலாம்?

மூன்றும் பரிசு ரூபாய் 5-00

இரு பதில்களுக்குச் சுவையான வினாக்கள் எழுப்பியவர்கள்.

திரு பு. தே. வேங்கடகிருஷ்ணன்:

1. மன்னர்களின் மான்யத்தைப் பற்றி ஓயாமல் பேசும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் தாங்கள் மட்டும் அதற்கு இணையான சலுகைகளை அநுபவிப்பது ஏன்?



3. நிழலின் அருமை வெய்யிலில் தெரியும். தனியார் போக்குவரத்தின் அருமை எங்கே தெரியும்?



திரு எஸ். ஆலய...

.. இந்தியாவில் மறதி காரணமாகப் பத்து ஆண்டுகள் வருமான வரி கட்டாத அமைச்சருக்கு, ஆளும் கட்சியின் தலைமைப் பதவியும் கிடைக்கும் என்பது எதனால்?



3. வறுமையில் வாடினாலும் மக்கள் பொறுமை இழக்கவில்லை என்பது தெரியுமிடம் யாது?

திரு எல். எஸ். லக்ஷ்மணன்:

3. புத்தர் இன்று இருந்திருந்தால் அவருக்கு எங்கு ஞானோதயம் வரும்?

4. அரசாங்க அலுவலகங்களில் பொறிக்கப்பட வேண்டிய பொன்னெழுத்துக்கள் எவை?

ஸ்ரீமதி பத்மா சுந்தரராசன்:

3. ஓடுகிற பஸ்கள் நிற்காமலும், நிற்கிற பஸ்கள் ஓடாமலும் இருப்பதைச் சென்னையில் எங்கே காணலாம்?

4. பெரியார் ஈ. வெ. ரா. அவர்களிடம், "ஐயா! தங்களுக்கு எடைக்கு எடை தங்கம் தரத் தீர்மானித்துள்ளோம். விழாவை என்று, எப்பொழுது, எங்கு வைத்துக் கொள்ளலாம்?" என்று வினவினால்?

பரிவுப் பரிசு ரூபாய் 3-00

ஒரு பதிலுக்கு நல்ல வினா எழுப்பியவர்கள்.

மிஸ். கே. உமா:

4. எழுதிய சினிமாக் கதைக்குச் சம்பந்தம் இருக்கோ இல்லையோ, மக்களைக் கவரக்கூடிய தலைப்பு ஒன்று சொல்ல இயலுமா?

திரு சி. சிவசரவணபவன்:

4. தமிழ் சினிமாக்காரரிடமிருந்து உங்களுக்கு எப்பொழுது விடுதலை வேண்டும் என இந்துக் கடவுளரைக் கேட்டால், அவர்கள் ஒரே குரலில் எழுப்பும் பதில் என்ன?

ஸ்ரீமதி பாலா ராமன்:


4. பேசுவது ஜனநாயகம். உள்ளத்தில் கம்யூனிஸம். செய்கையில் சர்வாதிகாரம். இந்த அரசியல் விந்தையை எங்கு காணலாம்?

பு. அருணா ஆதிமூலம்:

1. பணநாயகத்தால் மனநாயகத்தை விலை பேசி ஜனங்களிடம் ஓட்டு வாங்கி அவர்கள் வாழ்வை வேட்டு வைத்த அரசியல்வாதிகள் திரும்பவும் வோட்டுக்காகக் கை ஏந்துவது எதனால்?



சிங்கக் கழுகு (14)
பீட்டர் ஓடான்னல்
தப்பி விடடானே!
1766
1767




இந்த விலங்கை இப்போ நீக்க முடியாது ஆனால் என் கரங்களை முன்பக்கமாவது கொண்டு வருகிறேன்.
இரண்டு பேர் என்னைத் தேடி வருகிறார்கள். குண்டுக் காயம் அடைந்துள்ள கார்லின அலட்டிக் கொள்ளாமல் இருந்தால் நல்லது.
கார்லினுக்கு உதவ நான் சீக்கிரம் போயாக வேண்டும். இவர்களுடன் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருப்பதற்கில்லை துரிதமாய்க் காரியத்தை முடிக்க வேண்டியதுதான்!
1768
மாடஸ்டி, எங்கே ஒளிந்திருக்கிறாய்? வெளியே வா! நமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்!
நான் இங்கே இருக்கிறேன், அப்போ ரினி! மேலே வா, இங்கே!
1769


பிரபோ! இவளைக் கொல்வது ஆபத்து! இவள் எல்லா விவரமும் எழுதி பாங்கில் பத்திரப்படுத்திவிட்டு வந்திருக்கிறாளே!
அது பொய், மாட்டியோ!
அவள் நம்மிடம் வேண்டுமென்றே வந்து மாட்டிக் கொண்டபோது அவளை நாம் கொல்லாதிருக்க அவள் கையாண்ட தந்திரம் அது. இவளைப் போன்றவர்கள் தனித்து நின்றுதான் போராடுவார்கள். தோல்விக்குப் பயந்து முன்னேற்பாடுகளைச் செய்யவே மாட்டார்கள்
ஏதோ ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்றாயே? இதோ, இங்கே இருக்கிறேன், அல்போரினி!
1770


கடல் துறையில் லூயிஜி, நீர் மட்டத்துக்குமேல் காரினுடைய தலை தெரியக் காத்திருக்கிறான்
ஆளையே காணோமே! நிச்சயம் செத்திருப்பான். குண்டுக் காயத்தால ஏராளமாய் ரத்தம் இழந்து நீந்தச் சக்தியில்லாது மூழ்கிப் போய் இருப்பான்.
கப்பலின் மறுபுறம் கலத்தை ஒட்டியிருந்தபோல் காரினை மெல்ல மேலெழும்பி அதில் படிந்து கிடக்கும் தாரை வழித்தெடுத்துக் காயத்தில் அப்பிக் கொள்கிறான்.
கொஞ்ச நேரத்தில் சற்றுச் சூடடைந்து ஒட்டிக் கொள்ளும்
அரண்மனையில் மாடல்டியின் குரல் கொலைகாரர்களுக்கு அழைப்பு விடுத்து அருகில் நெருங்கச் செய்கிறது.
அல்போரினி! இங்கே, உன் முன்னோர்களின் ஆடம்பரமான பள்ளி அறையில் இருக்கிறேன்.
(தொடரும்)
1771

பட்ட இடத்தில்...பஞ்சினால் துடைத்திட்டால்...



அதுவே டெட்டால் அரவணைப்பு

...இட்டால் இதமளிப்பு



டாக்டர்கள் நம்பி உபயோகிப்பது

வெட்டுப் பட்டால்...பட்ட இடத்தில் டெட்டால்...இட்டால் அதுவே பரிபூரண ஆண்டிஸெப்டிக் பாதுகாப்பு. துப்புரவாக்கும், காயத்தைக் கிருமிகள் அணுகாமல் காக்கும், சட்டென ஆற்றும் டெட்டால். பட்ட காயம எதனையும் கட்டாயம் ஆற்றுவது.. .. டாக்டர்கள் நம்பும் டெட்டால்.

ஃப்ளுவா? ஃப்ளு கிருமிகளினின்று உங்களைக் காப்பது டெட்டால். வேர்க்குருவா? இதமளிப்பது டெட்டால். டெட்டால் உபயோகிக்க வேறு ஏதேனும் புதிய வழி ....? தெரிந்தால் எழுதுங்கள். நடை முறைக்கேற்ற, புதுமையான யோசனையாக இருந்தால் ரூ.10 அனுப்புவோம்! எழுத வேண்டிய முகவரி: G. P. O. பாக்ஸ் 909, கல்கத்தா-1.

புதுமைக் கோலம்பூண்ட டெட்டால்
பரிபூரண ஆண்டிஸெப்டிக் பாதுகாப்பு

லின்டாஸ்-DTL. 1-140 TM

மர்மக் கதை



சுழிக்காற்று

அத்தியாயம் ஐந்து

இறந்த மனிதனைத் திருமணப் பரிசாக அனுப்புவதற்குத் தனது விலாசம் கொலையாளிக்கு எப்படிக் கிடைத்திருக்கும் என்பதைச் சேகர் விளக்கியபோது இன்ஸ்பெக்டரின் வாதம் அடிபட்டுப் போயிற்று. சற்று நேரம் மௌனமாக இருந்த இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் தமது விசாரணையைத் தொடர்ந்தார். அவரது கவனம் இப்போது டாக்ஸி டிரைவரிடமிருந்து நர்ஸ் நிர்மலாவின் பக்கம் திரும்பியது.

காதலனின் மறைவிலே, சகோதரனின் இழப்பிலே அவள் இடிந்துபோய் உட்கார்ந்திருந்தாள். அங்கு நடக்கும் எந்தப் பேச்சும் அவள் கவனத்தைக் கவரவில்லை. பிரமை பிடித்தவளைப் போல உட்கார்ந்திருந்த நிர்மலாவை இன்ஸ்பெக்டரின் கேள்விகள் உசுப்பி நினைவுலகத்துக்குக் கொண்டு வந்தன.

''மிஸ் நிர்மலா உங்கள் சகோதரன் பாலுவை நீங்கள் கடைசியாக எப்போது பார்த்தீர்கள்?''

''இன்று காலை பத்து மணிக்கு. 'சமையல்கூட ஆகிவிட்டது. சாப்பிட்டுவிட்டுப் போ' என்றேன். ஆனால் காலையிலிருந்து அவன் ஏதோ ஒரு மாதிரி இருந்தான். அதாவது எதைப் பற்றியோ தீவிரமாக யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். ஆனால் அவன் முகம் கவலையாக இல்லை. ராமு திடீரென்று மறைந்ததின் மர்மத்தைப் பற்றித்தான் அவன் சிந்தித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். அதைப் பற்றிய ஏதோ ஒரு ரகசியம் — துப்பு அவனுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் அதன் விவரத்தை அவன் என்னிடம் சொல்லவில்லை'' என்றாள் நிர்மலா நிதானமாக.



கௌசிகன்

முல்லைவாசல் பண்ணைக் காரியஸ்த னும், பெருந் தொகையுடன் திடீ ரென்று மாயமாக மறைந்துவிட்டவன் என்று கருதப்படுபவனுமான ராமுவைப் பற்றிச் சேகருக்குத் தெரிவிக்க வேண் டும் என்பதற்காகத்தானே அல்லது ராமுவைத் தேடும் முயற்சியில் தாங்கள் அசிரத்தையாக இருக்கவில்லை என்பதை நிர்மலாவுக்கு உணர்த்தவோ இன்ஸ் பெக்டர், ''அந்தப் பயங்கரப் புயல் அடித்த அன்றிலிருந்து இன்றுவரை— இந்த மூன்று வாரங்களாக நானும் என் னுடைய திறமை முழுவதையும் உப யோகித்து, ராமு எங்கே போனான், எப்படி மறைந்தான் என்பதைப் பற்றி ஏதாவது தகவல் கிடைக்காதா என்று முயன்று பார்த்துவிட்டேன் மிஸ் நிர்மலா. எந்த ஒரு சிறு விஷ யத்தையும் அலட்சியமாக ஒதுக்க வில்லை. அப்படி இருக்க ராமுவைப் பற்றிய ஏதோ புதிய விஷயம் பாலு வுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று நீங்கள் சந்தேகிப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. அது போகட்டும். எங்கே போகிறேன் என்பதை அவன் உங்க ளிடம் சொல்ல வில்லையா?'' என்று கேட்டார் ஏகாம்பரம்.

நிர்மலா தலையை அசைத்தாள், இல்லை என்பதன் அடையாளமாக. பிறகு ''சாமுண்டிக் கோட்டைக்கு வெளியேதான் போயிருக்க வேண்டும்'' என்றாள், எங்கோ வெறு வெளியில் எதையோ பார்த்துக் கொண்டு.

''வெளியே என்றால் பக்கத்துக் கிரா மங்களுக்கா? அவன் நடந்து போயிருக் கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்களா





நீங்கள் எங்கிருந்தாலும் நம்பகமான மோட்டார் உறுப்புகளை டிவிஎஸ்ஸின் 17 ஆபீஸ்கள் 1000க்கு மேற்பட்ட விநியோக ஸ்தலங்கள் மூலமாகப் பெறலாம்

தரமான மோட்டார் உறுப்புகள் நடைமுறைச் செலவைக் குறைக்கின்றன என்பதை டிவிஎஸ் உணருகிறது. அதனால்தான் முதல்தரமான மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கும் பெரிய நிறுவனங்களின் சாமான்களை, தென்னுடெங்கும் நான்கு மாநிலங்களில் எங்கள் 17 ஆபீஸ்கள். 1000க்கு மேற்பட்ட விநியோக ஸ்தலங்கள் மூலம் விநியோகிக்கிறோம். இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மோட்டார் உறுப்புகள் எப்பொழுதும் கைவசம் உள்ளன.


டி.வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்-எர்ணகுளம்

சுந்தரம் மோட்டார்ஸ்
(உரிமையாளர்கள்:
டி.வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை)
மதராஸ்-பங்களூர்-செகந்திராபாத் விசாகபட்டணம்

மதராஸ் ஆட்டோ சர்விஸ்
(உரிமையாளர்கள்:
டி.வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை)
சென்னை-பங்களூர்-விஜயவாடா-கள்ளிக்கோட்டை

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & அக்ஸெஸரீஸ் லிமிடெட், சென்னை

டிவிஎஸ் உங்கள் நம்பிக்கைக்கு உரியது



TVS

TVS-6409

அல்லது சைக்கிள், டாக்ஸி இப்படி எதிலாவது...?''

இன்ஸ்பெக்டரின் வார்த்தை முடியு முன் யாரும் எதிர்பாராத வகையில் காளியப்பன் 'டக்'கென்று பதில் சொன்னான் — ''டாக்ஸியிலேதான் போனாருங்க!''

எல்லாரது கவனமும் காளியின் மீது பதிந்தது. அதே சமயம் இன்ஸ்பெக்டரின் முகம் பிரகாசமடைந்தது. நிமிர்ந்து உட்கார்ந்தார். ''அதாவது...'' அவர் குரலில் அசாதாரணமான உற்சாகம் பொங்கி நின்றது. ''இன்று பகல் பாலுவை நீ உன் டாக்ஸியில் ஏற்றிக் கொண்டு சாமுண்டிக் கோட்டைக்கு வெளியே போனாய்... ம்... இதை நீ ஏன் முதலிலேயே சொல்லவில்லை?''

''நீங்கள் கேட்கவில்லே; நானும் சொல்லலீங்க!'' என்றான் காளி எவ்வித பதற்றமுமின்றி.

''ஓஹோ! சரி, இப்போது கேட்கிறேன். பாலுவை உன் டாக்ஸியில் எங்கே அழைத்துப் போனாய்?'' இன்ஸ்பெக்டரின் பார்வையிலும் பேச்சிலும் கண்டிப்புக் கலந்திருந்தது.

''முல்லைவாசலுக்குப் போகணும்னு சொன்னாரு. அங்கேதான் கொண்டு விட்டேன்'' என்றான் காளி. தன் கிராமத்தின் பெயரைச் சொன்னதும் மஞ்சுளா பரபரப்புடனும் வியப்புடனும் காளியப்பனைப் பார்த்தாள்.

''முல்லைவாசலுக்கு, தான் போக விரும்பிய காரணத்தைப் பாலு உன்னிடம் தெரிவித்தானா?''

''அதெப்படிங்க? டாக்ஸியிலே வரவங்கள்ளாம் தாங்க போக வேண்டிய இடத்தைத்தான் சொல்லுவாங்க. போகும் காரியத்தையுமா எங்க கிட்டச் சொல்லிக்கிட்டிருப்பாங்க?'' என்றான் காளி சிரித்துக் கொண்டே.

காளியப்பனின் சிரிப்பு இன்ஸ்பெக்டரின் உற்சாகத்தைக் கண்ட வைப்பதாக இருந்தது. கோபத்துடன், ''அதிகப் பிரசங்கி! ராமுவின் மறைவைப் பற்றித் தனக்கு ஏதோ ஒரு புதிய தகவல் தெரிந்திருப்பதாகப் பாலு உன்னிடம் பேசிக்கொண்டு வரவில்லை? உண்மையை ஒளிக்காமல் சொல்லு!'' என்று அதட்டிக் கேட்டார். குற்றவாளிகளிடமிருந்து உண்மையை வரவழைக்கப் போலீஸார் கையாளும் பல முறைகளில் இதுவும் ஒன்று. தங்கள் ஊகத்தை உண்மை போல அதட்டி, உருட்டி, மிரட்டிக் கேட்பார்கள். பல சந்தர்ப்பங்களில் இந்த முறை பலனளிப்பதும் உண்டு.



''பொய்க்கால் குதிரை ஆடிச் சம்பாதிச்ச பணத்துக்கு ஜாக்பாட் ஆடித் தோற்றுவிட்டு, 'இல்லே'ன்னு பொய் வேறே சொல்றியே....?''

காளியப்பன் ஒரு விநாடி தயங்கி விட்டு, ''நீங்க சொன்னது போல ஏதோ பேசிக்கிட்டுத்தான் வந்தாரு'' என்றான்.

மறுபடியும் இன்ஸ்பெக்டரிடமிருந்து வெற்றியின் எக்காளம் கிளம்பியது. நாற்காலியிலிருந்து எழுந்து காளியப்பனின் அருகில் வந்து நின்று கொண்டார். தோல் சுற்றிய பிரம்பைக் கைகளால் வளைத்து விஷமம் செய்த படி, ''எனக்குத் தெரியும் காளியப்பா! எதையும் என்னிடம் ஒளிக்க நினைக்க வேண்டாம். அது உனக்குத்தான் கஷ்டம்....!...ம்...தான் முல்லை வாசலில் செய்யப் போகும் காரியத்தைப் பற்றியும் அவன் உன்னிடம் தெரிவித்தானல்லவா?'' என்றார். இந்தத் தடவை அவர் குறி தவறி விட்டது. காளியப்பன் இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையைப் பலமாக ஆட்டினான். ஏகாம்பரம் எமகாதகப் பேர்வழியாயிற்றே. தன் தோல்வியை வெற்றியாக்கக் கேள்வியை வேறு விதமாகத் திருப்பினார்: ''...அதாவது பாலுவிடம் அவன் முல்லைவாசலில் என்ன செய்யப் போகிறான் என்பதைப் பற்றி நீ கேட்கவில்லை என்கிறாய். அப்படித்தானே?'' ரொம்பவும் சாதுரியமாக அவனை மடக்கிவிட்டதாக மனப்பால் குடித்துத் தமக்குள் மகிழ்ந்து போனார் இன்ஸ்பெக்டர்.

''டாக்ஸியிலே வரவங்க, தாங்கள் போகிற இடத்திலே என்ன செய்யப் போறாங்க என்பதைப் பற்றிக் கேட்க நமக்கு ஏதுங்க உரிமை? தவிர எனக்கு ஏன் அந்த அக்கறை?'' என்றான் காளி.

''ஓ! உனக்கு அக்கறை இல்லையா?'' ஏமாற்றத்தை வெற்றியோடு விழுங்கிக் கொண்டே மேலே கேள்விகளை வீச லானார். ''சரிதான், பானு முல்லைவாசலில் எங்கு இறங்கிக்கொண்டான்?''

''ஜமீந்தார் வீட்டுக்கிட்டே....''

''ஜமீந்தார் வீட்டுக் கிட்டே என்றால் பங்களாவிலேயா?''

''இல்லை. அரமனைக் காம்பவுண்டுக்கு வெளியிலேயே இறங்கிக்கிட்டாரு.''

''முல்லை வாசலுக்கு முக்கிய வேலை யாகப் போன பானு ஜமீந்தார் பங்களா வுக்குப் போக வேண்டிய நோக்கத் துடன் வந்த பானு — காம்பவுண்டுக்கு வெளியிலேயே இறங்கிக் கொள்ளு வானேன்? காம்பவுண்டிலிருந்து உள்ளே அரண்மனை, அதாவது பங்களாவுக்கு ஒரு மைல் போயாகணுமே அப்பா?''

''நான்கூட அவரை இதையேதா னுங்க கேட்டேன். 'பங்களாவுக்குப் போக இன்னும் ரொம்ப தூரம் நடக் கணுமே'ன்னு கேட்டேன்.''

''ம்...சரி, வெளியிலேயே இறங்கிக் கொண்ட பானு எங்கே போனான்? ஜமீந் தார் பங்களாவுக்குச் செல்லும் ரஸ்தா வில் நடந்து சென்றானா?''

''இல்லை. மெயின் ரோடிலே மெள்ள நடந்து போனாருங்க...!''

''அப்போ, ஜமீந்தார் பங்களாவுக் குச் செல்லும் நோக்கமில்லையா அவ னுக்கு?''

''அப்படித்தான் நான் நினைச்சேன்.— ஏன்னா...''

இடைமறித்தார் இன்ஸ்பெக்டர். ''உன் அனுமானம் ஏதும் இங்கு தேவை யில்லை. நடந்ததை மட்டும் சொல்லு.. ம்.... அதாவது பானு பங்களாவைத் தாண்டி நடந்து போனானக்கும்?''

காளியப்பன் தலையை ஆட்டி ஆமோ தித்தான்.

''ஆக... பானுவை நீ கடைசியாகப் பார்த்தது அதுதான் என்கிறாய், இல்லையா?''

ஆமாம் என்பதற்கு அடையாள மாகக் காளியப்பன் மறுபடியும் தலை யைப் பலமாக ஆட்டினான்.

''அதன் பிறகு என்ன செய்தாய்?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''திரும்பி டவுனுக்கு வந்தேன்'' என் றான் காளியப்பன்.

விசாரணையின் நடுவில் வந்து ஆனால் அதில் பங்கு கொள்ளாமல் மௌனமாக நடப்பதைக் கவனித்தபடி உட்கார்ந் திருந்த போலீஸ் இலாகாவின் துப்பறி பவரான துரைசாமி முதன் முதலாக வாய் திறந்தார்.

''மிஸ்டர் ஏகாம்பரம், காளியப்பன் முல்லைவாசலிலிருந்து திரும்பி வந்ததை நான் பார்த்தேன்'' என்றார்.

''அப்போ என்ன மணி இருக்கும்?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''பகல் இரண்டு மணி இருக்கும்'' என்றார் துரைசாமி.

உடனே மஞ்சுளா சட்டென்று துரை சாமியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே ஒரு கேள்வி கேட்டாள். ''அப்போது காளியப்பனின் டாக்ஸி யின் பின்னால் அந்த டிரங்க் பெட்டி வைத்துக் கட்டப்பட்டிருந்ததை நீங்கள் கவனித்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.''

''டிரங்கா? அதெல்லாம் ஒன்றும் கிடையாது'' என்று பதில் சொன்ன துரைசாமி சட்டென்று தம் குரலைத் தணித்துக் கொண்டார். தம் வாக்கு மூலம் போலீஸ் கேசுக்குப் பாதகமாகி விடுமோ என்ற ஐயம் அப்போதுதான் அவருக்கு ஏற்பட்டது. அதாவது தாம் போலீஸ் இலாகாவின் ஊழியர் என்ற நினைவு ஏற்பட்டதும், அவசரப்பட்டுத் தாம் இந்தச் செய்தியை வெளியிட்ட தற்கு மன்னிப்புக் கேட்கும் குரலில் ஏகாம்பரத்திடம் துரைசாமி சொன்னார்: ''இவ்வளவு நிச்சயமாக இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் காளியப்ப வின் டாக்ஸி ஸ்டாண்டு என் வீட்டுக்கு எதிரில்தான் இருக்கிறது. அதுதான் உங்களுக்குத் தெரியுமே. என் அறை ஜன்னலிலிருந்து பார்த்தால் அவன் கார் தெரியும். இன்று பகல் இரண்டு மணியி லிருந்து மாலை இருட்டும் வரையில் கூட அவன் வண்டியை ஷெட்டில் பார்த் தேன்.''

தாம் கையாண்டு வழக்கை வெற்றி முகத்துக்குத் திருப்பும் சமயத்தில் இந்தத் துரைசாமி வந்து புகுந்து குட்டை குழப் புவதை விரும்பாத ஏகாம்பரம், ''மிஸ் டர் துரைசாமி! உங்கள் செய்தி இந்த வழக்கில் அப்படியொன்றும் பிரமாத மான புரட்சியை உண்டாக்கிவிடப் போவதில்லை'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுக் காளியப்பனைப் பார்த்து ''காளியப்பா! பானுவை உயிருடன் கடைசியாகப் பார்த்தவன் நீதான். அவ

லைச் சாமுண்டிக் கோட்டையிலிருந்து முல்லைவாசலுக்கு அழைத்துச் சென்றவன் நீதான். மாயமாக மறைந்த ராமுவைப் பற்றிய ஏதோ ஒரு ரகசியத்தை அறிந்துகொண்டதாகவும் அது விஷயமாகவே முல்லைவாசல் வந்திருப்பதாகவும் பாலு உன்னிடம் சொல்லியிருக்கிறான். அவன் செய்த பெரிய தவறு இதுதான். ராமுவின் மறைவைப் பற்றிக் கிடைத்த சிறு விஷயத்திலிருந்து அநுமானத்தின்மீது ஆராயப் போனவனுக்கு ராமுவினுடைய மறைவின் ரகசியம் தெரிந்துவிட்டது. அதுவே அவன் உயிருக்கும் உலையாக வந்தது. பாலு அறிந்து கொண்ட ரகசியம் வெளிப்படாதிருக்க — அந்த ரகசியம் அவன் உள்ளத்திலேயே மடிந்து போக — பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறான். கொலை செய்யப்பட்டுப் பல மணிநேரம் கழித்துப் பாலுவின் இறந்த உடலை ஒரு பெட்டிக்குள் வைத்துப் பார்ஸல் செய்து ரயில்வே நிலையத்துக்குப் புக் செய்ய உன்னுல் உன் டாக்ஸியில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சந்தர்ப்பங்களும் சூழ்நிலையும் உன்னையே குற்றவாளி யாக்குகின்றன. ஆகவே, காளியப்பா, பாலுவைக் கொன்ற குற்றத்துக்காக உன்னை நான் கைது செய்கிறேன்'' என்று விலங்குடன் காளியப்பனை அணுகினுர் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம்.

''மிஸ்டர் ஏகாம்பரம்! நீங்கள் காளியப்பனைக் கைது செய்வது கொஞ்சம் கூட நன்ருக இல்லை'' என்று தவிப்போடு கத்தினுள் மஞ்சுளா, அவர் கையில் ஊசலாடும் விலங்கைப் பார்த்தபடியே.

இன்ஸ்பெக்டர் மஞ்சுளாவின் பக்கம் திரும்பி, ''பாலுவைக் கொலை செய்த குற்றத்தோடு மட்டுமில்லாமல் ராமுவின் மறைவுக்கும்கூடக் காளியப்பனே காரணம் என்று நான் கருதுகிறேன்'' என்ருர் அழுத்தம் திருத்தமாக.



மஞ்சுளா முகம் சிவக்க, ''இருக்கவே இருக்காது. இன்ஸ்பெக்டர். காளியப்பன் அப்படிப்பட்டவன் அல்ல'' என்று கூறித் தன் காதலன் சேகரைப் பார்த்தாள். 'இன்னும் இப்படி மௌனம் சாதிப்பது நன்ருகவா இருக்கிறது?' என்று கெஞ்சுவது போலிருந்தது அவள் பார்வை. காதலியின் பேசும் விழிகளைச் சந்திக்க விரும்பாதவனைப் போல் சேகர் வேறு எங்கோ பார்ப்பதாகப் பாவனை செய்யலானுன். இன்ஸ்பெக்டரின் ஆர்வத்தை, இந்த வழக்கில் தாம் வெற்றி பெறவேண்டும் என்ற ஆசையைத் தான் கெடுப்பானேன் என்ற நல்ல எண்ணமும் கூட அவனது மௌனத்துக்குக் காரணமாக இருக்க வேண்டும்.

இந்த இக்கட்டான சமயத்தில் தந்திச் சேவகன் ஒரு தந்தியுடன் உள்ளே நுழைந்தான். ''நர்ஸ் நிர்மலா அம்மாவுக்கு ஒரு தந்தி வந்திருக்கு சார்!'' என்ருன் இன்ஸ்பெக்டரைப் பார்த்து. பிறகு தந்தியை நிர்மலாவிடம் கொடுத்துக் கையொப்பம் வாங்கிக் கொண்டான். ''இன்னும் முன்னுலேயே இது உங்களுக்குக் கிடைச்சிருக்கணும். உங்க வீட்டிலே போய்த் தேடி அலைஞ்சிட்டு இங்கே விசாரிச்சுக்கிட்டு வந்ததாலே 'டிலே' ஆயிடுச்சு'' என்று சொல்லி விட்டுப் போனுன் தந்திச் சேவகன்.

தந்தியைப் படித்த நிர்மலாவின் முகம் வெளுத்தது. இமைக்காமல் பிரமைபிடித்தவள் போல் தந்திக் காகிதத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மட்டும்தானு? அங்கு இருந்த அத்தனை பேர்களுடைய விழிகளுமே அவள் மீது - இல்லை - அந்தத் தந்தியின்மீது மொய்த்துக் கொண்டிருந்தன. அவள் விரல்கள் அந்தக் காகிதத்தை இறுக்கிப் பிடித்திருந்ததினுல் அது கசங்கிக் கிழியும் நிலையிலிருந்தது. மஞ்சுளாவுக்கு அந்த விடுவிக்கப்படாத மர்மத்தோடு கூடிய மௌன நிலை தாங்க முடியாததாக

இருந்தது. தன் தோழியின் தோளுக்குப் பின்னாலிருந்து எட்டிப் பார்த்துத் தந்தி வாசகத்தைப் படித்தாள். மஞ்சுளாவின் பார்வையிலும் குழப்பம் கலப்பதைக் கண்ட சேகர், நிர்மலாவின் நடுங்கும் கையிலிருந்து மெள்ள அந்தத் தந்தியை வாங்கிப் படித்தான்.

''உன்னைச் சந்தித்து விடைபெற்றுக் கொண்டு போக அவகாசம் இல்லாததினால் நேரே போய் விட்டேன். மன்னிக்கவும். விசேஷமாகச் சொல்ல ஏதுமில்லை. போய்க் கடிதம் போடுகிறேன்—பாலு.''

படித்த தந்தியை இன்ஸ்பெக்டரின் பார்வைக்கு அவர் முன்னால் மேஜை மீது வைத்தான் சேகர். அதைப் படித்து ஏகாம்பரம் புருவத்தை நெரித்தார். ''இதெப்படி? ஒன்றும் விளங்கவில்லையே?'' என்றார். உண்மைதான். அவருக்கு விளங்காத விளங்கிக் கொள்ள முடியாததாகத்தானிருந்தது அந்தத் தந்தியின் வாசகம்.

இனிமேலும் தான் கைகொடுக்காமல் போனால் நிலைமை சீர்ப்படாது என்பதை உணர்ந்து கொண்ட சேகர், தனக்கே உரித்தான புன்முறுவலுடன், ''எது விளங்கவில்லை இன்ஸ்பெக்டர்? எல்லாம்தான் ரொம்பத் துல்லியமாக விளங்குகிறதே! பாலுவின் உடலைக் கண்டு பிடிப்பதில் கால தாமதம் ஏற்பட வேண்டும் என்பதற்காக இந்த வினோதப் பார்ஸல் பயன் படுத்தப் பட்டிருக்கிறது. பாலு தன் திட்டப் படி ஆறு பத்து வண்டியைப் பிடித்துக் கல்பாறைக்குப் போய்விட்டதாக நிர்மலா நம்ப வேண்டும் என்பதற்காக இந்தத் தந்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. இறந்த உடல் கண்டு பிடிக்கப்படும்வரை பாலுவைப் பற்றிய ரகசியம் வெளியாகக் கூடாது என்பதற்காகவும் இந்தத் தந்தி. இதைக் கொடுத்தது பாலு இல்லை. இதைக் கொடுத்த நபருக்குப் பாலு இறந்து விட்டான் என்பது நன்றாகத் தெரியும். தத்துவ ரீதியாகப் பார்த்தால் இந்தத் தந்தியைப் பாலுவைக் கொலை செய்தவனோ அல்லது கொலைகாரனுக்குக் கூட்டாளியோதான் கொடுத்திருக்க வேண்டும். இந்தக் கொலையைச் செய்ததாக ஒரே ஒரு நபரை மட்டும் நீங்கள் சந்தேகிப்பதிலிருந்து கூட்டாளி ஒருவன் இருப்பான் — இருக்கலாம் — என்ற விஷயம் அடிபட்டுப் போகிறது. அப்படியானால் கொலை செய்தவனே இந்தத் தந்தியைக் கொடுத்திருக்க வேண்டும். உங்கள் துப்பறியும் இலாகா அதிகாரியான துரைசாமி அவர்கள் சற்று முன்பு சொன்ன விஷயத்தை இப்போது உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தத் தந்தி கொடுக்கப்பட்ட நேரத்தில் காளியப்பன் சாமுண்டிக்கோட்டையில்; அதாவது அவன் கார் ஷெட்டிலேயே இருந்திருக்கிறான் ... ஆகவே இவற்றிலிருந்து இத்தனை நேரம் நீங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கலாமே! இதற்குப் பிறகும்கூட நீங்கள் காளியப்பன் குற்றவாளி என்ற முடிவுக்கு வரமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்'' என்றான் சேகர்.

ஒரு நிமிஷம் அந்தப் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு வேண்டத் தகாத அமைதி நிலவியது. அடுத்த விநாடி இன்ஸ்பெக்டர் தொங்கிய முகத்துடன் கையிலிருந்த விலங்கை மேஜையின் மீது போட்டுவிட்டுத் தம் நாற்காலியில் போய்ப் பொத்தென்று உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்தார். 'இந்தத் துரைசாமி இப்படிக் குறுக்கே வந்து குட்டையைக் குழப்புவாரா?' என்று ஆத்திரமாக வந்தது அவருக்கு.

மஞ்சுளாவின் முகத்தில் மகிழ்ச்சி கலந்தது. சேகரைப் பெருமையுடன் காதல் பொங்கப் பார்த்தாள். ''இன்ஸ்பெக்டர் ஸார்! காளியப்பன் நிரபராதி என்றாகி விட்டதல்லவா? இனி அவன் எங்களைத் தன் டாக்ஸியில் முல்லைவாசலுக்குக் கொண்டுபோய்விட வரலாமில்லையா? ஆட்சேபணை ஏதுமில்லையே?'' என்றாள் பெருமிதத்துடன்.

இன்ஸ்பெக்டர் சேகரையும் மஞ்சுளாவையும் ஒரு விநாடி உற்றுப் பார்த்தார். பிறகு, ''நீங்கள் காளியப்பனை அழைத்துப் போகலாம். ஆனால் அவன் நிரபராதி என்று நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. இப்போது இல்லாவிட்டாலும் பின்னால் அவன் கைகளில் இந்த விலங்கை மாட்டத்தான் போகிறேன்'' என்றார், தோல் சுற்றிய கொண்டைப் பிரம்பினால் மேஜை மீது நிராதரவாகக் கிடந்த விலங்கின் மீது ஓங்கி ஓர் அடி கொடுத்துக் கொண்டே.

சேகர் எழுந்திருந்தான். கம்பீரமாகத் தன் 'வாக்கிங் ஸ்டிக்'கை ஊன்றி அமைதியாக வீதிக்குச் செல்லப் படிகளில் இறங்கினான். மஞ்சுளாவும், கோபாலும் காளியும் அவனைப் பின் தொடர்ந்து வீதிக்கு வந்தார்கள். அவர்கள் நால்வரையும் விழிகளை இமைக்காமல் பார்த்தபடி சிலையாக அமர்ந்திருந்தார் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம்.


(தொடரும்)



புது வருடத் தீர்மானங்கள்...
கே.எஸ்.முரளி
மந்திரி: லண்டன், பாரிஸ், நியூயார்க் நகரங்களுக்கெல்லாம் நான் இனிமேல் அரசு வழியாகப் போக மாட்டேன். (டெஹ்ரான், ரோம், டோக்கியோ இல்லையா என்ன?)
டாக்ஸிக்காரர்: ஊருக்குப் புதியவரா யிருந்தால் ஊரைச் சுற்றி அலைக்கழித்துக் கொண்டிருக்க மாட்டேன். (போகும் வழியிலேயே ஏர்போர்ட், சென்ட்ரல், பீச், அடையாறு ஆலமரம் இத்யாதியை அவருக்குக் காட்டும் நல்ல நோக்கத்துடன்தான் செய்யப்படுகின்றன.)
எழுத்தாளர்: இனிமேல் ஒரு கதையும் திரும்பி வராதபடி அனுப்புவேன். (அதாவது தபால் தலையே இணைக்க மாட்டேன்.)
திருடன்: இவ் வருடம் ஒன்றிலிருந்து பத்துவரை எண்ணக் கற்றுக் கொள்வேன். (ஜெயிலில் பொழுதே போகவில்லையே.)
கல்லூரி மாணவர்: காரணமில்லாமல் 'ஸ்டிரைக்' செய்ய மாட்டோம். (காரணமில்லையென்று வேண்டுமானால் 'ஸ்ட்ரைக்' செய்வோம்.)
டைரக்டர்: படம் எடுத்த பிறகு கதையை எழுத மாட்டேன். (படம்தான் முடிந்து விட்டதே கதையை எதற்கு எழுதணும்?)
பாகவதர்: சாதகம் செய்யும்போது ஜன்னல்களையும் சாத்திவிட்டே செய்வேன். (பக்கத்து வீட்டுக்குப் புதிதாகக் குடி வந்திருப்பவர் துப்பாக்கி வாங்கி யிருக்கிறார்!)
பிரின்ஸிபால்: இனி நிறைய மார்க் வாங்கியிருக்கும் கல்லூரியில் இடம் கொடுப்பேன். (பணமாக வேறு இருந்தால்.)
திரைப் பாடலாசிரியர்: இந்த வருடத்திலிருந்து ஒரு பாடலிலும் ஆபாச வார்த்தைகளைப் புகுத்தமாட்டேன். (என் மகனே அதைப் பாடுகிறானே!)

வாங்கக் கூடியவற்றுள் தலைசிறந்தது இதோ 4 காரணங்கள்





1

வடிவம்:

ரேவிஃபேன் அதிநவீன பாணியில் அமைக்கப்பட்டது. நீலம், பச்சை, பேழ் தந்தம் இந்த 4 வண்ணங்களில் கிடைக்கிறது.

2

இயக்கம்:

ரேவிஃபேன் அதிக அளவில் குளிர்ச்சியை அளிக்கிறது. ஓசையின்றித் திறம்பட இயங்குகிறது. பக்கத்துக்குப் பக்கம் சுழலுகிறது.

3

அமைப்பு:


ரேவிஃபேன் கச்சிதமாக அமைக்கப்பட்டது. எடுத்துச் செல்வதும் எளிது. குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படாமலிருக்க பாதுகாப்பு வலை பொருத்தப்பட்டுள்ளது. இயக்கத்தைக் கட்டுப் படுத்த புஷ்-பட்டன் அமைப்புகள்

4

விற்பனைக்குப் பிறகு ஸர்வீஸ்:

ரேவிஃபேன் முற்றிலும் சுதேசமானது. ரேவியின் அனுபவத்தின் அடிப படையில் தயாரிக்கப் பட்டது. ரேவிஃபேனைப் பழுது பார்க்க இந்தியா முழுவதிலும் 150 கேந்திரங்கள் உள்ளன.




RALLIFAN
2
ஆண்டுகள்
உத்திரவாதம்

உண்மைக் காயம்

ஜீவா.



ஐப்பசி மாதத்தில் அடைமழை நின்றிருந்த ஒரு நாள் காலை.

"சார்! சார்!"

"யாரு அது!"

"ஐயா இருக்காங்களா?"

"இருக்கார். வாங்க. இப்படி உள்ளே உட்காருங்க. வரச் சொல்றேன்."

"சார்!" என்ற முதல் குரலே பூஜை அறையிலிருந்த என் கவனத்தைக் கலைத்து விட்டது. அடுத்து நடந்த உரையாடல்களெல்லாம் தெளிவாக என் செவியில் விழுந்தன. ஆகவே என் மூத்த மகன் உள்ளே வந்து என்னை யாரோ ஒருவர் தேடி வந்திருப்பதாகச் சொல்வதற்குள் நான் விரைந்து பூஜையை முடித்துக் கொண்டு வெளியே வந்தேன்.

"சிற்றுண்டி சாப்பிட்டு விட்டுப் போங்களேன். வந்தவர் கொஞ்சநேரம் இருக்கிறார்..." என் மனைவி எதிர் வந்து சொன்னாள்.

"வந்திருப்பவர் யார்?- என்ன விஷயம் எனக் கேட்டு விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டுப் போனேன்.

வந்தவர் நாற்காலி யொன்றில் அமர்ந்து வட்ட மேஜை மீதிருந்த காலைப் பத்திரிகை யொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வந்திருப்பவரை நான் முன் பின் பார்த்த தில்லை. அவருக்கு நாற்பது வயதுக்குள்தான் இருக்கும். ஆனால் தலையில் வழுக்கை விழுந்திருந்தது. நல்ல மாம்பழ நிறம். சற்றுப் பருமனான உடம்பு. தொந்தி வயிறு. நடுத்தர உயரம். வெள்ளை வேட்டி. மஞ்சள் பட்டுச் சட்டை. மெல்லிய சரிகை இழை போட்ட உத்தரீயம்; எல்லாம் சேர்ந்து அவரை ஒரு கண்ணியமான கனவான் என்பதை எனக்குத் தெரிவித்தன.

காலடி ஓசை கேட்டு நிமிர்ந்த அவர் என்னைக் கண்டதுமே எழுந்து நின்று, "நமஸ்காரம் சார்" எனக் கூறியவாறு கைகூப்பினார். நான் பதிலுக்கு வணக்கம் செலுத்தி, "உட்காருங்கள்" என்றவாறே அவருக்கு எதிரில் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டே, "காக்க வைத்து விட்டதற்கு..." என்று வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினேன்.

"காலைநேரத்தில் வந்துதொந்தரவு கொடுப்பதற்கு நீங்கதான் மன்னிக்கனும்..."

"பரவாயில்லே..."

"இங்கு வாடகைக்கு 'போர்ஷன்' இருப்பதாகக் கேள்விப் பட்டேன். பார்க்கலாமென வந்தேன்."

"அப்படியா?" எனக் கேட்டவாறே அவர் முகத்தை ஆராயலானேன்.

என் துணைவியின் யோசனைப்படி எங்கள் வீட்டின் ஒரு பகுதியைச் சிறிது காலமாகக் குடிக் கூலிக்கு விட்டு வந்தேன். ஆனாலும் வாடகை கிடைக்கிறதென்று அவசரப்பட்டுக் கண்டவர்களைக் குடி வைப்பதில்லை.

இவரை முதலில் பார்த்ததுமே எனக்குப் பிடித்து விட்டது. கள்ளம் கபடில்லாமல் கலகலப்பாகப் பேசும் இவருடைய இயற்கையும் அடக்கமும் என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டன.

"நீங்கள் யோசனை செய்ய வேண்டாம். நாங்கள் நாலே பேர்தான். நான், என் மனைவி; எங்களுக்கு ஒரு பெண், ஒரு பையன். இவ்வளவுதான்..." என்றார் அவர்.

"குடும்ப நபர் எத்தனை பேர் என்று நான் யோசிப்பதில்லை. கூடுமானவரை சந்தடியில்லாமல் பார்த்துக் கொண்டால் சரிதான். நான் எப்போதும் அமைதியை விரும்புபவன்."

"படிப்பவர்கள், எழுதுபவர்களுக்கு அமைதி அவசியம் என்று எனக்குத் தெரியும். எனக்கும் அதிகச் சத்தம் பிடிக்காது. பெரிய அந்தஸ்தில் இருந்தாலும் ஆடம்பரம் சிறிதுமில்லாமல் சகஜமாகச் சகலருடனும் பழகும் உங்களுடைய வீட்டில் நான் குடியிருக்கப் பிரியப்படுகிறேன்" என்று சொன்ன அவர், "நான் போர்ஷனைப் பார்க்கலாமா?" எனக் கேட்டவாறே எழுந்திருக்கலானார்.

நானும் எழுந்திருந்தவாறே "வாருங்கள்" என அழைத்துப் போய்க் காட்டினேன் காலிப் பகுதியை. இடத்தைச் சுற்றிப் பார்த்ததும் அவருக்குப் பிடித்து விட்டது என்பது அவருடைய முக மலர்ச்சியிலிருந்தே தெரிந்தது.

"நான் இப்போது குடியிருந்து வரும் இடம் விசாலமானதுதான். ஆனால் இவ்வளவு அமைப்பாக இல்லே. தனி வீட்டில் வசிப்பது போல இருக்கும். அடுக்களை முதலிய எல்லாமே கச்சிதமா யிருக்கு. வாடகை எவ்வளவு என்று சொல்லுங்கள். அட்வான்ஸ் எத்தனை மாதம் தரணும்?" என்று கேட்டார்.

நான் புன்னகை செய்தவாறே, "இதற்கு முன் இருந்தவங்க எழுபத்தைந்து ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தாங்க. நான் அட்வான்ஸ் வாங்கும் வழக்கம் இல்லே. வாடகையை முன்னதாக முதல் தேதி கொடுத்துக்



கொண்டுவந்தால் போதும். காலி செய்வதாக இருந்தால்மட்டும் ஒரு மாதத்துக்கு முன்பே தெரிவிக்கவேண்டும்'' என்றேன்.

அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. வாடகை நூறு, நூற்றைம்பது இருக்கும் என்றும் குறைந்ததுமூன்று மாதங்களாயினும் அட்வான்ஸ் கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் எண்ணியிருப்பார் போலும். ''இந்தக் காலத்தில் உங்களைப்போல் இருப்பவர்கள் அபூர்வம் சார்! என் அதிருஷ்டம்தான் உங்க வீட்டில் குடிவரும் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது!'' என்று கூறி மகிழ்ந்தார்.

ஸ்ரீநிவாசன் ஒரு நல்லநாள் பார்த்துத் தம் குடும்பத்துடன் என் வீட்டில் குடி வந்தார். தம்பதிகள் ஆசாரமாயிருந்ததுடன், பிள்ளைகளையும் ஆசாரத்துடன் இருக்கப் பழக்கி வைத்திருந்தனர். கமலம்மா இருக்கும் இடமே தெரியாது. சத்தமிட்டுப் பேசி நாங்கள் கேட்டதில்லை.

பிள்ளைகளைக் கண்டிக்கும் சமயத்தில் கூட உரத்துப் பேசியதில்லை. அவள் குள்ளமாகவும் ஒல்லியாகவும் இருந்தாலும் பொதுவாகப் பெண்களுக்குரிய லட்சணத்துடனிருந்தாள். உருவத்தில் வேறுபட்டிருந்தாலும் தம்பதியர் உள்ளத்தால் ஒன்றுபட்டிருந்தனர். ஒரு விசித்திரம் என்னவென்றால், இவர்களுடைய பிள்ளைகளில் மகள் மைதிலி தந்தையைப் போலவும் மகன் சாரங்கன் தாயைப் போலவும் உருவத்திலும் தோற்றப் பொலிவிலும் இருந்ததுதான். பருவ வயதடைந்திருந்த மைதிலி நல்ல அழகு. ஆனால் ஆண்டவன் திருஷ்டி பரிகாரம் செய்வது போல அவளுக்குப் பேசும் சக்தியைத் தராது விட்டுவிட்டான். ஆம்; அந்த அழகிய பெண் ஓர் ஊமை. என்ன கொடுமை!

கமலம்மா எப்போதும் வீட்டு வேலையிலேயே மூழ்கியிருப்பாள். சமையல் வேலை முடிந்ததும் கணவனுக்கும் மகனுக்கும் செய்ய வேண்டியவைகளைக் கவனித்து அனுப்பி விட்டால்கூட அவள் வெளியே வர மாட்டாள்; துணிகளைத் தைப்பது, நூல் நூற்பது, பை

பின்னுவது, கிழிந்த ஆடைகளைத் தைப்பது முதலியவைகளைச் செய்து கொண்டிருப்பாள். தன் மகளை எப்போதும் தன்னுடன் வைத்துக் கொண்டு எல்லா வேலைகளிலும் பயிற்சி அளித்து வந்தாள். மைதிலிக்கு எதையும் சீக்கிரம் கிரகித்துக் கொள்ளக் கூடிய கூர்மையான அறிவும், சுறுசுறுப்பும் இருந்தன.

அந்த அம்மாளுடைய இந்தத் தனித்த போக்கைச் சொல்லிச் சொல்லி என் மனைவி வியப்படைவாள். தன் பெண்ணை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைப்பதற்காகவே கமலம்மாள் தானும் முடங்கி யிருந்து வருவதாக எனக்குத் தோன்றியது.

ஸ்ரீநிவாஸன் மட்டும் என்னுடன் காலை மாலைகளில் நான் ஓய்வாக இருக்கிறேனா என்று பார்த்துவிட்டு உரையாட வருவார். என் மகனுடனும் அன்பாகப் பேசுவார்.

ஒரு நாள் முன்னிரவு. நான் மாடியில் எழுதிக் கொண்டிருந்தேன். திடீரென்று கீழ்ப் பகுதியிலிருந்து எழுந்த 'கீ' என்ற விசித்திரமான ஒலி என் சிந்தனையைக் கலைத்துத் திடுக்கிட வைத்தது. என்ன அது என்று அறிய நான் பதைத்து எழுந்தேன். அச்சமயம் மேலே வந்த என் மனைவி என்னைக் கையமர்த்தி உட்கார வைத்தாள்.

''நீங்க ஏன் எழுந்திருக்கிறீங்க? அந்த ஊமைப் பெண்ணுக்கு உதை விழுகிறது. அதுதான் அவள் அப்படிக் கத்துகிறாள்...''

''ஊமைப் பெண்ணுக்கு உதை விழுகிறதா? அவளை யார் அப்படி அடிக்கிறது?''

''யார் அப்படி அடிப்பாங்க? பெற்றவங்க தான். அவள் அப்பா இருக்கிறாரே!...'' என்று இழுத்தாள் என் மனைவி.

''ஸ்ரீநிவாஸனா அந்தப் பெண்ணைப் போட்டு அப்படி அடிக்கிறார்?...''

என் மனைவி குறும்பாக, ''உங்க சிநேகிதர் தான். அவருக்கு அந்தப் பெண்ணைப் பார்த்தால் ஆகிறதில்லே. காரணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கண் மண் தெரியாமல் அடித்து விடுகிறார். வைகிற வசவோ வாய் விட்டுச் சொல்ல முடியாது. இவங்களுக்கு நடுவே கமலம்மா கிடந்து படுகிற பாடு கண்ணராவியாக இருக்கு'' என்றாள்.

''ஸ்ரீநிவாஸன் ஏன் இப்படி...?'' என்று கேட்டு நிறுத்தி நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். 'நல்லவரான அவர் ஏன் தம் பெண்ணிடம் மட்டும் இப்படி இரக்க மில்லாமல் கொடுமையாக நடக்கிறார்?'

''இது அடிக்கடி நடக்கும் அமர்க்களம் தான். பரப்பிரம்மம் போலுள்ள உங்களுக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது? இன்றைக்குத்தான் இது உங்கள் காதில் விழுந்திருக்கு. அதனால் ஆச்சரியப்படுறீங்க'' என்று பேசிக் கொண்டே வந்த என் மனைவி பேச்சை நிறுத்தினாள். உற்றுக் கவனித்து ''இன்று நிலைமை மீறிட்டாப் போலிருக்கு. கமலம்மாகூடச் சத்தம் போட்டுக் கணவனுடன் வாதாடுறாங்களே!...'' என்று சொல்லிக்கொண்டே ஜன்னலோரமாகச் சென்று ஒட்டுக் கேட்கலானாள். நானும் அவளைப் பின்தொடர்ந்தேன். கமலம்மா கணவனைக் கெஞ்சுவது என் காதுகளில் விழுந்தது.

''ஐயோ! நிறுத்துங்களேன். வாயில்லாப் பெண்ணைப் போட்டு ஏன் இப்படி வதைக்கிறீங்க? இயற்கை சதி செய்து விட்டதற்கு அவள் என்ன செய்வாள்?''

''நீ பெற்ற அழகான பெண்ணுக்காகப் பரிந்து பேச வந்துட்டயோ? போ தூர!''

கமலம்மா சமாளித்துக் கொண்டு ''மைதிலியின் அழகுக்கு என்ன குறைச்சல்? ஆண்டவன் இப்படி அநியாயம் செய்திராவிட்டால் இந்நேரம் ஸ்ரீரங்கம் மிராசுதார் வீட்டு மாட்டுப் பெண்ணாகி யிருப்பாளே!'' என்று ஆற்றாமையோடு சொன்னாள்.

''ஊம். நீ ஊமைக் கனாக் கண்டு கொண்டு இரு...'' என்று உறுமினார்.

''ஏன் இப்படி அநாகரிகமாகக் காட்டுக் கூச்சல் போடுறீங்க? வீட்டுக்காரர் காதில் விழுந்தால் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்? இதை நீங்கள் யோசிக்கவில்லையே?'' என்று கமலம்மாள் மெல்லச் சொன்னது எங்களுக்குக் கேட்டது. 'வீட்டுக்காரர் காதில் விழுந்தால்' என்ற சொல் உடனே ஸ்ரீநிவாசனைத் தம் நிலைக்கு வரச் செய்தது போலும்!

அதற்குப் பின் அவர்களிடையே பேச்சு மூச்சே இல்லை.

ஆனால் இச்சம்பவம் இத்துடன் நிற்கவில்லை. அடிக்கடி நடக்கலாயிற்று. ஸ்ரீநிவாஸன் மகளை அடித்துத் துன்புறுத்துவது அன்றாட நிகழ்ச்சியாயிற்று. தன் பெண்ணின் ஊமைத் தன்மையைப் பார்க்கப் பார்க்க அவருக்கு எரிச்சல் ஏற்படுகிறதோ என்னவோ?

ஸ்ரீநிவாஸன் எங்கள் வீட்டுக்குக் குடி வந்து இரண்டு ஆண்டுகளாகி விட்டன. அவர் சில நாட்களாக உற்சாகமாகக் காணப்பட்டார். அவர் இப்போதெல்லாம் மைதிலியை அடிப்பதில்லை. அதற்கான காரணம் நாளடைவில் எங்களுக்குத் தெரிந்தது. கமலம்மா கர்ப்பமுற்றிருக்கிறாள் என்ற தகவலை என் மனைவி மூலம் கேள்விப்பட்டு நான் வியப்படையவில்லை. நல்லபடியாக இன்னொரு குழந்தை வாய்க்கலாம் என்று அவர் மகிழ்ச்சி கொள்வது இயற்கைதானே! இதே சமயத்தில் சொல்லி வைத்தாற்போல் என் மனைவியும் தாய்மை அடையலானாள். இரண்டு பெண்களும் ஒரு பையனும் இருப்பது போதும் என்று திருப்தி யடைந்திருந்த எங்களுக்கு நான்காவது ஒன்று ஏற்பட்டது மகிழ்ச்சியைத் தரவில்லை.

காலம் எதற்காகவும் யாருக்காகவும் காத்திராமல் ஓடிக் கொண்டிருந்தது. கமலம்மா தான் முதலில் ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள். பெண் என்றதுமே ஸ்ரீநிவாசனுக்கு உற்சாகம் குறைந்து விட்டது. ஆனாலும், குழந்தை பெரிய பெண்ணை விட மிக அழகாக இருந்ததால், இனிப்பு வழங்கி மகிழ்ச்சிக்கொண்டாடினார். இரண்டு மாதங்கள் கழித்து என் மனைவி ஆண் குழந்தை ஒன்றுக்குத் தாயானாள். நான் இதை இயற்கையாக வரவேற்றேனே யொழிய, கொண்டாட்டம் ஒன்றும் நடத்தவில்லை.

குழந்தைகள் போட்டி போட்டுக் கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தன. ஸ்ரீநிவாஸனின் குழந்தை கொழு கொழுவென இருந்தது. அந்த அளவுக்கு என் பிள்ளை இல்லை யென்

பதைச் சொல்ல வேண்டும். இரு குழந்தைகளும் கவிழ்ந்தன, தவழ்ந்தன. பாலுக்காக அன்னையரைத் தாவின. கன்னங்களில் குழி விழச் சிரித்தன. கை கால்களை ஆட்டி ஆர்ப்பாட்டம் செய்தன. ஆனால் ஸ்ரீநிவாஸனுடைய குழந்தை அழுவதிலும் கெக்கலி கொட்டிச் சிரிப்பதிலும் விவரித்துச் சொல்ல முடியாத வித்தியாசம் ஏதோ இருந்ததாக நாங்கள் உணரலானோம்.

இந்நிலையில் சில நாட்களாக ஸ்ரீநிவாஸன் என் பார்வையிலேயே படவில்லை. அவர் எப்போது ஆபீசுக்குப் போகிறார், வருகிறார் என்பதே தெரியாமலிருந்தது. ஒரு நாளைக்கொரு தடவையாவது என்னைப் பார்த்து ஏதாவது கேட்டு விட்டும் பேசிவிட்டும் போவதையே வழக்கமாகக் கொண்டிருப்பவர் திடீரென்று என்னைக் கண்டு பேசுவதை நிறுத்திக் கொண்டார் என்று அறிந்ததும் எனக்கு என்னவோ போலிருந்தது.

இப்படியே ஓரிரு மாதங்கள் ஓடின. ஒரு நாள் இரவு உணவுண்டுவிட்டு நான் மனைவி மக்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தேன். அச்சமயம் என் மனைவி பேச்சோடு பேச்சாகச் சொன்ன தகவல் ஒன்று என்னைத் திடுக்கிட வைத்தது; மிகவும் வருத்தம் கொள்ளவும் செய்தது.

''இந்த அநியாயத்தை என்னென்பதுங்க. கமலம்மாவின் கைக்குழந்தைக்கும் பேச்சு வராது என்று தோணுதுங்க.''

என் மனைவி இரக்க உணர்வுடன் சொல்வதைக்கூடக் கவனியாமல், ''என்ன உளறுகிறாய்? யார் உனக்கு அப்படிச் சொன்னது?'' என்று சீறினேன் நான்.

''ஏன் அப்படி ஆத்திரப்படறீங்க? விஷயத்தை ஆற அமரக் கேளுங்க. நமக்கும் குழந்தைகள் இருக்குதில்லையா? வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று வாய்க்கு வந்தபடி சொல்லி விடுவேனா?''

''அப்படியானால்....!''

நான் திகைப்புடன் கேட்டேன்.

என் இளைய பெண் தொடர்ந்தாள்: ''நானும் கவனித்திருக்கிறேன் அப்பா! நாங்க நீர் மொள்ளப் போகும் போது மைதிலியின் அப்பா குழந்தையண்டை உட்கார்ந்து கொண்டு, 'அம்மா! அப்பா!' என்றெல்லாம் பேச்சுச் சொல்லிக் கொடுப்பார். வாயைக் குவித்துக் காட்டி ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லுவார். 'உஷா உஷா!' என்று கூப்பிட்டுக் கொண்டும், குழந்தையின் காதருகே போய் விரல்களால் சிட்டிகை போட்டு அழைத்துக் கொண்டும் இருப்பார். ஆனால் குழந்தை தன் போக்கில் கைகால்களை ஆட்டிக் கொண்டிருக்குமே தவிர, அப்படி இப்படித் திரும்பிக் கூடப் பார்க்காது. அது கண்டு அவர் அலுத்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன், அப்பா!''

''கமலம்மா கூடப் பகல் நேரங்களில், குழந்தையைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் விட்டு அழுதுகொண்டு உட்கார்ந்திருப்பாங்க. யாராவது வருவதைப் பார்த்தால் அவசரம் அவசரமாகக் கண்களை முந்தானையால் துடைத்துக் கொண்டு சாதாரணமாக இருப்பதுபோல் பாவனை செய்வாங்க'' என்ற மனைவியைத் தொடர்ந்து மூத்த மகளும் வருத்தத்



''ஹையா! நான் கண்டு பிடிக்கட்டேன், நீ எந்த சினிமாவுக்குக் கிளம்பு கிறாய் என்று!''

துடன் ''யாரோ சொல்லி டாக்டர்களிடம் கூடக் குழந்தையைக் கொண்டு போய்க் காட்டி விட்டு வந்தார்களாம். டாக்டர்கள் என்ன சொன்னாங்கன்னு தெரியவில்லை'' என்று சொன்னாள்.

''என் தங்கச்சிகூட அக்காவைப் போலப் பேசாதாண்டா! ஏண்டா அப்படி?'' என்று சாரங்கன்கூட என்னைக் கேட்டான் அப்பா!'' என்று என் பெரிய பிள்ளையும் சொன்னான்.

'ஐயோ! என்ன பரிதாபம்! நல்லவர்களுக்கு இப்படியொரு கொடுமையைச் செய்யலாமா ஆண்டவனே!' என்று எனக்குள்ளாக அரற்றினேன். அந்தக் குழந்தையைப் பேச வைக்கும் முயற்சியில் பரிதாபத்துக்குரிய அந்தத் தம்பதிகள் சிறிது காலமாகத் தங்களுக்குள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிந்தது. அவர்கள் நிலை ஊமைக் காயம் பட்டு வருந்துபவரின் பரிதாப நிலை போல் இருந்தது. ஸ்ரீநிவாஸன் என் கண்ணில் படாமல் ஒதுங்கிப் போய்க் கொண்டிருப்பதன் காரணத்தை இப்போதுதான் என்னால் உணர முடிந்தது. அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் என்னைப் பார்க்கவே வெட்கப்பட்டுக் கொண்டிருப்பவரை எப்படி அழைத்துப் பேசுவது என்று எனக்குத் தயக்கமாக இருந்தது.

திடீரென்று ஒரு நாள் மாலை ஸ்ரீநிவாஸன், ''கணேஷ்! அப்பா இருக்கிறாரா?'' என்று என் குமாரனைக் கேட்டுக் கொண்டே வந்தார்.

மாலையில் வந்த செய்திப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த நான் அவர் குரல் கேட்டு, மாடியை விட்டு இறங்கியவாறு, ''வாருங்கள், ஸ்ரீநிவாஸன்!'' என்று கூறி முன் அறைக்கு அழைத்துப் போனேன். ஸ்ரீநிவாசன் அடக்க ஒடுக்கத்துடன், நாற்காலியொன்றில் அமர்ந்தவாறே ''ஆபீஸ் சமயம். ஆபீஸிலேயே நேரமாகி விடுகிறது. காலையிலும் சீக்கிரமாகப் போகவேண்டியிருக்கு'' என்று தலையைக் குனிந்து கொண்டே சொன்னார்.

அடுத்து என்ன பேசுவது என்று எங்கள் இருவருக்குமே தோன்றாது போல் சில விநாடிகள் எங்களிடையே மௌனம் நிலவியது. முன் பின் பழக்கம் இல்லாதவர்கள் முதல் முதல் சந்திக்கும்போது இருப்பது போன்ற நிலையில் நாங்கள் இருந்தோம். பின் அவர் தயக்கத்துடன் "உங்களைப் பார்த்துப் பேச இரண்டு மூன்று நாட்களாகவே முயன்று கொண்டிருந்தேன். இன்றுதான் சாத்தியப் பட்டது. இவ்வளவு சீக்கிரம் உங்களைப் பிரிந்துபோக நேருமென்று நான் எண்ண வில்லை. ரொம்ப வருத்தமாக இருக்கு. உங்களைப் போன்ற பெரியவங்க சிநேகம் ஏற்படு வதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பிராப்தம் பாருங்கள்..." என்றார்.

" நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ? ஸ்ரீநிவாசன் ?"

"வேறு ஒன்றுமில்லை. எப்படியும் சொல்லித்தானே ஆக வேண்டும். எங்கள் கம்பெனி மயிலாப்பூரில் ஒரு கிளையைத் தொடங்கியிருக் கிறது. அதற்கு என்னை மானேஜராகப் போட்டிருக்கிறார்கள்....."

"மிக்க மகிழ்ச்சி. உங்களுக்கு என் நல் வாழ்த்துக்கள், ஸ்ரீநிவாசன். உங்களுக்கு மேன் மேலும் இதுபோன்ற உத்தியோக உயர் வும் சம்பள உயர்வும் ஏற்பட வேண்டும் என்று உளமார விரும்புகிறேன். இவ்வளவு நல்ல செய்தியைப் போய் இவ்வளவு தயக்கத் துடன் சொல்கிறீர்களே ?"

" உங்கள் வாழ்த்துக்கு நன்றி" என்ற ஸ்ரீநிவாசன், "ஒருபுறம் உத்தியோக உயர் வைக் கொடுத்துவிட்டு இன்னொரு பக்கம் நல்லவர்கள் நட்பைக் கத்திரித்து விடு கிறானே ஆண்டவன்.... என்று எண்ணும் போதுதான்..." என்று இழுத்தார். சிறிது நிறுத்தி "இனி என் அலுவலகம் மயிலாப்பூர் ஆகிவிட்டதால், நான் இங்கிருந்து ரயில், பஸ் என்று பிடித்துத் தினம் போவது சிரமமா யிருக்கும் எனத் தோன்றுகிறது. இதுவரை அம்பத்தூரில் மின்சார ரயில் ஏறினால் கோட்டையில் அஞ்சு நிமிஷம் நடந்தால் ஆபீஸ் போய்விடுவேன். மயிலாப்பூருக்கோ அப்படி முடியாது: அதனாலேயே... ஆபீஸ் பக்கத்தி லேயே குடியிருப்பு பார்த்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன். வீட்டிலும் அதுதான் சௌகரியம் என்று சொல்றாங்க. இந்த மாதக் கடைசிக்குள் எங்க போர்ஷனைக் காலி செய்து விடுகிறோம். முன்னதாகவே சொல்ல முடியவில்லை. மன்னியுங்கள்" என்று நிறுத்தி நிறுத்திச் சொன்னார். அவர் சொல்கிற தகவல்படி பார்த்தால் ஒரு வாரத்தில் எங்கள் வீட்டைக் காலி செய்து விட்டுப் போகத் தீர் மானித்திருக்கிறார் எனத் தெரிந்தது.

"அதற்கென்ன! அப்படியே செய்யுங்க. உங்க சௌகரியம்தானே முக்கியம்" என் றேன் நான்.

"உங்க வீட்டை விட, போகும் இடம் வசதியாயிருக்கும் என்று சொல்ல முடியாது. போக்குவரத்துத் தொல்லைக்குத்தான் பார்க் கிறேன். அத்துடன் உங்கள் சிநேகம்...."

அவர் நீட்டி முழக்கும் பேச்சை நான் துண் டித்து, "இங்கிருந்து போய்விட்டால் என்ன? நாம் சந்தித்துக் கொள்ள முடியாதா ? உண்மையான சிநேகமாயிருந்தால் உறவு நீடிக்கும்" என்று கடைசி வார்த்தையை அவர் மனத்தில் படும்படி அழுத்தம் கொடுத் துச் சொன்னேன்.

ஸ்ரீநிவாசன் முகத்தில் அசடு வழிந்தது. "சரி! சரி ! அதற்கில்லை. பேச்சுக்குச் சொன் னேன். நான் வரட்டுங்களா?" என்று எழுந்தவாறே, "இந்தத் தகவலை சொல்வதற் காக உங்களுக்குச் சிரமம் கொடுத்துவிட் டேன். நீங்கள் ஏதோ எழுதிக் கொண்டிருந் தாற்போலிருக்கு" என்று சொல்லிக் கொண்டே, விட்டால் போதும் என்பது போல் விரைந்து வெளியேறினார். சந்தர்ப்பம் வந்தால் எப்பேர்ப்பட்டவர்களும் எப்படி மாறிவிடுகிறார்கள்; எவ்விதமெல்லாம் நடித் துப் பேசுகிறார்கள்? — என்று எண்ணியவாறே வழக்கமாகத் தெரிவிக்கும் வணக்கத்தைக் கூடச் சொல்லாமல் வேகமாகப் போகும் அவரை இரக்கத்தோடு பார்த்துக் கொண்டே என் இருப்பிடம் சென்றேன்.

ஸ்ரீநிவாசன் எவ்வளவு ஆர்வத்தோடு என் வீட்டுக்குக் குடிவந்தாரோ அவ்வளவு அவசர மாகக் காலி செய்து விட்டுப் போனார். தங்கள் இரண்டாவது மகளும் மூத்த பெண் ணைப் போலவே ஊமைதான் எனத் திட்ட வட்டமாகத் தெரிவதற்குமுன் போய்விட முடிவு செய்தனர் என்பது அவர்களுடைய அவசர நடவடிக்கையிலிருந்து தெரிந்தது. அதுவும் அவர்களுடைய குழந்தைக்குப்பின் பிறந்த என் பிள்ளை சீக்கிரமாகப் பேசத் தொடங்கிவிட்டது அவர்களுக்கு ஆற்றாமை யையும் அவமானத்தையும் உண்டுபண்ணி யிருக்க வேண்டும். அதனால்தான் அவர்கள் எங்கள் வீட்டை விட்டுப் போய்விட முடிவு செய்தனர் என்று ஊகிக்கலானேன்.


ஸ்ரீநிவாசன் என்னிடம் தகவல் சொன்ன நாலைந்து நாட்களுக்குள்ளாகவே (மாத முடி வைக்கூட எதிர்பார்த்திராமல்) அவர்கள் என் வீட்டைக் காலி செய்துவிட்டு அக்கம்பக்கத்தி லுள்ளவர்கள் யாருக்கும் தெரியாமல் இர வோடு இரவாகப் போய்விட்டார்கள்.

'பாவம்! ஸ்ரீநிவாசன்!' என்று என் மனம் பச்சாத்தாபப்பட்டது.





ஒவ்வொருவரின் மேனிக்கும் பாதுகாப்பு தேவை



வியர்வை துர்நாற்றத்திலிருந்தும், அதனால் நுண்ணிய கிருமிகளிடமிருந்தும் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்படும் சங்கடத்திலிருந்தும் பாதுகாப் பளிக்கிறது.
ஜி-11 (ஹெக்ஸாக்ளோரோஃபீன்) கலந்த **சிந்தால் டாய்லெட் பவுடர்** இந்தப் பாதுகாப்பைத் தருகிறது. அதோடு... அன்றலர்ந்த மலரின் நறுமணத்தையும் தருகிறது.

சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே போக்கிப் பாதுகாப்பளிக்கும் டாய்லெட் பவுடர்.

Interpub/GP/5 Tam

அட்டைப் படக் கதை

வயலெட்

விஜயா பாலகிருஷ்ணன்

வயலெட்!

வேலைக்கு வந்திருக்கும் பெண்ணின் பெயர் அதுவாம்.

"வயலெட்டா?" என்றேன் வியப்புடன்.


"ஆம், வயலெட்டேதான்!" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள் விஜயா. என் கற்பனை வயலெட் வர்ணத்தைத் தொடர்ந்து ஓடிற்று. பிறகு மற்ற வர்ணங்களுக்குத் தாவிற்று. அத்தனை வர்ணங்களும் ஒன்றுசேர்ந்து ஒளிர்விடும் வானவில் நங்கை என் மனக் கண் முன்னால் தோன்றினாள்; களிநடனம் பயின்றாள்.

"என்ன யோசனை?"

'வேறென்ன? வயலெட் எப்படி யிருப்பாள் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

"தெரியுமே! அதனால்தான் நான் வாளிப்பான உடற்கட்டு உடைய வேலைக்காரிகளை யெல்லாம் வேண்டாம் என்று தள்ளி விட்டேன். நாளைக்கு நான் எப்படியும் ஊருக்குப் போக வேண்டி யிருக்கும். எல்லாம் நல்லபடியாக முடித்து திரும்பு வதற்கு நாள் பிடிக்கும். எதற்கும் நான் ஜாக்கிரதையாக இருக்கப் போகிறேன். வயலெட் உங்கள் கண்ணில் அடிக்கடி பட்டால்தானே வம்பு விளையும்? நான் இப்பொழுதே அவ ளிடம் சொல்லிவிடப் போகிறேன். ஐயா பொல்லாத கோபக் காரர்; அனாவசியமாகப் பேச்சுக் கீச்சு வைத்துக் கொள் ளாதே என்று!"

அதனால் எவ்வளவோ நாட்களுக்குப் பிறகுதான் வயலெட் டைக் காணும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. நான் கற்பனை செய்திருந்த காரிகைக்கும் இவளுக்கும் இவ்வளவு தூரமா என்று வியந்தேன். உயரம் அதிகமில்லை. குட்டை என்று சொல்வதற்குமில்லை. கவுன் அணிந்து கொண்டிருந்தாள். இது அவளுடைய வயதைக் கொஞ் சம் குறைத்துக் காட்டிற்றுதான்! ஆனால் பருவத்தின் கோலாகலத் தைத் திரையிட்டு மறைக்க முடி யுமா? அதுவும் கவுன் போன்ற ஆடையினால்? காலில் ஷூ. அதற்குமேல் 'ஸ்டாக்கிங்ஸ்' வேறு. முழங்கால் சதையின் வாளிப்பைத்தான் ஸ்டாக்கிங்ஸ் இருக்கப் போய் இளம்



இரத்தம் தெறித்துக் கொண்டு நின்றது. முகத்திலே பச்சிளங் குழந்தையின் அறியாமை ஒரு பக்கம்; அசட்டுக் களை இன்னொரு புறம்.

வயலெட் எங்கள் வீட்டுக்கு வேலைக்கு வந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் இருக்கும். அவளுடைய கருகருப்பும் சிரித்த முகமும் எங்களுக்கு நன்கு பரிச்சயமாகி விட்டன. அதிகாலையிலேயே 'ஸ்வெட்டர்' அணிந்தபடி, குமுட்டி அடுப்பை மூட்டிக் கொண்டிருப்பாள். குளிர் ஊசியாகக் குத்தும் அந்தக் குளிர் காலத்தில் அதிகாலை வேளையில் சோம்பலின்றி எப்படித் தான் அவள் துயிலெழுந்தாளோ? 'வாஷ் பேஸி'னுக்கு அருகில் 'ஷேவ்' செய்துகொள்வதற்காக நான் போய் நிற்பதற்கு முன் காப்பித் தம்ளருடன் அவள் தோன்றி விடுவாள். கம்பளிச் சட்டைகளை இஸ்திரி போடுவதில் அவளுக்கு இணை அவள்தான்! மத்தியானம் 'ஸ்வெட்டர்' பின்னிக் கொண்டிருப்பாள். விஜயாவுக்கு அவள் வந்ததிலிருந்து எப்பொழுதும் ஓய்வுதான். சதா ஒரு துப்பறியும் நாவலுடன் அவள் காட்சி தந்தாள்!

ஒரு நாள் வயலெட் குளித்துக் கொண்டிருக்கையில் எதிர்பாராத விதமாக நான் குளியலறைப் பக்கம் போக நேர்ந்தது. திரும்பி வருகையில் கவனித்து விட்டாள் விஜயா. அர்த்த புஷ்டியுடன் என்னைப் பார்த்துச் சிரித்தாள். நானும் சிரித்தேன்.

''எதற்கு இந்தத் திருட்டுத்தனம்?''

''என்ன சொல்கிறாய் நீ?''

''நீங்கள் எதற்காகக் குளியலறைப் பக்கம் போனீர்கள்?''

''எனக்கு அவள் அங்கிருப்பது தெரியாது.''

''போகட்டும். அவளைக் கண்டவுடன் உங்கள் மனத்தில் என்ன தோன்றியது?''

''காணவில்லை; கதவு மூடியிருந்தது. கண்டிருந்தால் எந்த ஆண்களுக்கும் தோன்றும் எண்ணங்கள்தான் தோன்றியிருக்கும். நான் புலன்களை அடக்கி யோகம் பயிலும் சந்நியாசியா என்ன?''

அப்புறம் வயலெட் என் பார்வையில் அதிகம் விழுவதில்லை. விஜயாவின் கட்டுப்பாடு அதிகமாக இருந்தது.

ஒரு நாள் இரவு முனையிலிருந்து ரூர்க்கிக்கு நான் திரும்புகையில் இருட்டிவிட்டது. வீட்டுக்குள் காலெடுத்து வைக்கும்போதே 'டெட்டால்' நெடி மூக்கைத் துளைத்தது. உள்ளே 'வாஷ் பேஸி'னுக்கருகில் ஒரு வயதான லேடி டாக்டர் கை கழுவிக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் ''ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை; கனமான பொருள் எதையோ தூக்கியிருக்கிறாள். 'இது'போன்ற சந்தர்ப்பத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இஞ்செக்ஷன் தந்திருக்கிறேன். கட்டிலின் ஒருபுறத்துக் கால்களுக்கடியில் நான் சில செங்கற்களை வைத்து உயர்த்தியிருக்கிறேன்; அவை அப்படியே இருக்கட்டும். இன்னும் சில தினங்களுக்குப் படுக்கையை விட்டு அவள் அசையவே கூடாது.... உங்களுக்குக் கவலை எதுவும் வேண்டாம். இதோ இந்தப் பெண் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வாள். மிக புத்திசாலி'' என்று வயலெட்டைப் புகழ்ந்து விட்டுச் சென்றாள்.

அன்று இரவு விஜயாவும் வயலெட்டுக்குக் கவி பாடினாள். அவள் இல்லையென்றால் மிகவும் சிரமப்பட்டிருப்பாளாம். விழுந்தடித்துக் கொண்டு போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வந்ததையும், தொடர்ந்து செய்த சேவைகளையும் புகழ்ந்து கொண்டே இருந்தாள். நான் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

வயலெட் உண்மையிலேயே கெட்டிக்காரிதான். டிராயிங் ரூமை அழகுபடுத்துவது அவளுக்குக் கைவந்த கலை. விருந்தினர்களை அவள் உபசரிக்கும் அழகே அழகு. விஜயாவுக்கு மிகப் பொறுமையுடன் சேவையிலும் அவள் சளைத்தாளில்லை. ஒரு கணம் வெந்நீருடன் ஓடிக் கொண்டிருப்பாள். அடுத்த நிமிஷம் 'பெட்ஷீட்'களை மாற்றி விரித்துக் கொண்டிருப்பாள். ஜன்னல் திரைகளைச் சரியான சமயத்தில் மாற்றுவதிலிருந்து சமைப்பது வரையில் அவள் ஓயாமல் உழைத்தாள். பொதுஜனத் தொடர்பு வேலையிலிருந்த என் வீட்டுக்கு எங்கிருந்தெல்லாமோ விருந்தாளிகள் வருவார்கள். உலகத்தின் எந்த மூலையிலிருந்து யார் வந்தாலும் வயலெட்டை அவர்கள் வாயாரப் புகழ்ந்து விட்டுத்தான் போனார்கள்!

நாளைக்கு விஜயா ஊருக்குப் போகிறாள். இனிமேல் பிரசவம் முடிந்துதான் திரும்புவாள். வயலெட்டுக்கு மூன்று மாதச் சம்பளத்தை முன் பணமாகத் தந்து விடும்படி கூறினேன். அவள் திரும்பி வந்த பிறகு மீண்டும் வேலைக்கு வரட்டும் என்று குறிப்பிட்டேன். ஆனால் விஜயா சம்மதிக்கவில்லை.

''எத்தனை நாளைக்கு ஹோட்டலிலும் கிளப்பிலும் சாப்பிடுவீர்கள்? உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. அந்தப் பெண்ணுக்குத்தான் நம் சமையல் பழகி விட்டதே! என்னைவிட நன்றாகச் சாம்பார் செய்கிறாள். உங்களுக்குப் பிடித்த ஊத்தப்பம் செய்வதில் அவள் கெட்டிக்காரி. வீட்டையும் ஒழுங்காக வைத்திருப்பாள். நான் வந்த பிறகு சுத்தம் செய்யும் வேலை இராது....'' என்று பேசிக்கொண்டே போனாள்.

ரயில் போன பின் வயலெட்டுடன் வீட்டுக்குத் திரும்புவது எனக்கு என்னமோ போல் இருந்தது. போதாததற்குப் பிளாட்பாரத்தில் சந்தித்த என் ஆபீஸ் நண்பன் கோயல், ''இந்தக் குட்டியை எங்கே பிடித்தாய்?'' என்று கேட்டுக் கேலி செய்து வைத்தான்.

இந்தியா — பாகிஸ்தான் யுத்தம் வந்தாலும் வந்தது, எங்கும் இருட்டடிப்பு. எதிரி விமானங்கள் வானத்தில் தென்பட்டவுடனெல்லாம் 'சைரனின்' அலறல் எழும். 'பாரசூட்'டிலிருந்து எதிரி ஒற்றர்கள் எங்கெல்லாமோ குதித்ததாக வதந்தி. வயலெட் அவள்பாட்டுக்குத் தன் வேலைகளைக் கவனித்து வந்தாள். காரியாலயத்தில் ஜவான்களின் நலனுக்காக நாங்கள் என்னென்னமோ செய்தோம். பணத்தைத் தாராளமாக அள்ளித் தந்ததுடன், பழைய பத்திரிகைகள், புது ஆடைகள் முதலியன அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்தோம். இருந்திருந்தாற்போல் என்னை ஒரு நாள் ஆச்சரியத்தில் ஆழ்த்தினாள் வயலெட். ஒரு சிறிய மூட்டையை என்னிடம் தந்து ஜவான்களுக்கு அனுப்பும்படி கூறினாள்.

உங்கள் குழந்தை பள்ளி செல்கின்றதா? வெற்றிகரமான வாழ்வைத் தெம்புடன் தொடங்க ஃபெர்ராடால் கொடுங்கள்

உங்கள் செல்வன் பிள்ளைப் பிராயத்தில், படிப்பிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்க அதிக சக்தி மற்றும் அதிக ஆற்றல் பெற்றிருக்கவேண்டும்.


அந்த அனைத்தையும் அளிப்பது ஃபெர்ராடால் ஒன்றுதான். இதனால், சரியான விகிதத்தில் இரும்புச் சத்து, விடமின்கள் மற்றும் தாதுச் சத்துக்கள் உங்கள் செல்வனுக்குக் கிடைக்கின்றன.

ஃபெர்ராடாலில் உள்ள சத்துக்கள் உங்கள் செல்வனின் உடல் உறுப்புகள் ஆக்கம் பெற்று ஆரோக்கியமுடன் வளர மிகமிக அவசியமானவை.

உங்கள் குழந்தைக்குக் காலையிலும், இரவிலும், நேரடியாக பாட்டிலிலிருந்தோ அல்லது பாலுடன் கலந்தோ, ஃபெர்ராடால் கொடுங்கள்.

நினைவிருக்கட்டும், குடும்பம் முழுமைக்கும் குறையாத ஆரோக்கியம் தருவது ஃபெர்ராடால்.





ஃபெர்ராடால்®

சுவையில் சிறந்தது— குடும்பம் முழுமைக்கும் குறையாத ஆரோக்கியத்திற்கு

பார்க்-டேவிஸ் தயாரிப்பு


® ரெஜிஸ்டர்டு ட்ரேட்மார்க்,
ரெஜிஸ்டர்டு யூஸர்: பார்க்-டேவிஸ்(இந்தியா)
லிமிடெட், பம்பாய்-72 ஏ-எஸ்.

JAISONS – 418

உட்புறங்களுக்கும், வெளிப்புறங்களுக்கும் ஈடிணையற்ற அழகிற்கும், நிரந்தரத்தன்மைக்கும்...

ஸில்விக்ரீட்

ஏஸிஸி வெள்ளை சிமெண்ட்



ஸில்விக்ரீட் ஏஸிஸி வெள்ளை சிமெண்டை கண்கவர் பாணிகளிலும், வண்ணங்களிலும் அமைத்துக் கொள்ளலாம்; அதைக் கொண்டு டெகோரேடிவ் பேனல்களையும், டைல் அல்லது டெர்ராஸோ தரைகளையும், ஜாலிகளையும், கொடிவிடுகளையும் சுலபமாக அமைத்துக் கொள்ளலாம்.

அதன் போர்ட்லாந்து சிமெண்டின் உறுதியும், நீடித்து நிற்கும் தன்மையும் உடையதாக இருப்பதனால், அது நிரந்தரமானதாக விளங்குகிறது.

ஸில்விக்ரீட் எவ்வளவு வேண்டுமானாலும், அருகிலுள்ள சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட் கிளையிலோ, அவர்களுடைய விநியோகஸ்தர்களிடமோ கிடைக்கிறது.

ஸ்ஜெலெம் மற்றும் கன்க்ரீட்டின் தயாரிப்பில் மூலப் பொருளாக இருப்பது ஸில்விக்ரீட்.

ஏஸிஸி தரத்தில் உயர்ந்த தயாரிப்புகளுக்கு நீங்கள் பெறும் உத்தரவாதம்

தி அஸோஸியேட்டட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்.

(தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்)

'' இதெல்லாம் என்ன?''

'' ஸாப்! என் சம்பளத்தில் சேர்த்து வைத்த பணத்தில் நூல் வாங்கி நம் சிப்பாய்களுக்காக 'ஸ்வெட்டர்' பின்னியிருக்கிறேன். நாட்டுக்காகப் போராடுகிறவர்கள் குளிரால் அவதிப்படக் கூடாது. குளிர் பொல்லாதது'' என்றாள். நேற்று வரையில் உலக விவகாரம் எதுவுமே தெரியாது என்று எண்ணியிருந்த பெண்ணா இவ்வளவு உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறாள்? எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. அவளுடைய தேசாபிமானத்தைப் புகழ்வதா, இல்லை மனிதாபிமானத்தை எண்ணி மலைப்பதா என்று விளங்கவில்லை.

சமீபத்தில் விஜயாவிடமிருந்து வந்த கடிதங்களின் போக்கில் நான் சில மாறுதல்களைக் கண்டேன். ஊருக்குப் போன புதிதில் வயலெட்டைப் பற்றி ஆயிரம் கேள்விகள் கேட்டு, அவளை அனுப்பிவிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டவள், இருந்திருந்தாற்போல் நேர்மாறான கருத்துக்களை வெளியிடத் தொடங்கினாள். எனக்குச் சௌகரிய மானால் நான் ஹோட்டலிலிருந்தே சாப்பாடு தருவித்துக் கொள்ள வேண்டுமாம். இதைப் படித்த என் மனம் குழம்பியது. அவளுக்கு என்னிடம் நம்பிக்கை தளர்ந்து வருகிறது என்பது விளங்கியது. இதற்குக் காரணம் என்னவென்று தீவிரமாக ஆராய்வதில் என் பொழுதை நான் வீணாக்கவில்லை. பக்கத்து வீடுகளில் வசிக்கும் அவளுடைய தோழிகளில் யாராவது விஷமத்தனமாக ஏதாவது எழுதியிருக்கலாமல்லவா? எங்கே தன் புருஷனை அந்தப் பொல்லாத லங்கிணி மயக்கி மடியில் கட்டிக் கொண்டு விடுவாளோ என்ற அச்சம் அவள் உள்ளத்தில் பூதாகாரமாக விசுவரூபம் எடுத்திருந்தது!

ஊரிலிருந்து திரும்பி வந்த மறுநாளே வயலெட்டுடன் சண்டை போடத் தொடங்கினாள் விஜயா. எடுத்ததற்கெல்லாம் அவள் மீது எரிந்து விழுந்தாள். அந்தப் பெண்ணுக்குச் சாதகமாக நான் ஏதாவது பேசிவிட்டாலோ, ''சரிதான், அவளுக்கு வக்கீலா நீங்கள்? அதான் ஊரே சிரிக்கிறதே! என் மானம் போகிறது!'' என்ற தோரணையில் என்னைச் சாடினாள். இப்பொழுதெல்லாம் வயலெட் அடிக்கடி விசித்துக் கொண்டே இருந்தாள். ஆனால் 'குழந்தையுடன் எஜமானி சிரமப்படக் கூடாதே' என்று மாடாய் உழைத்து வந்தாள். விஜயாவின் உள் மனத்தில் பதுங்கியிருந்த எண்ணங்களை அவள் புரிந்து கொண்டாளோ, இல்லையோ, தெரியவில்லை. வீட்டு வேலைகளைக் கடமை உணர்ச்சியுடன் செய்து வந்தாள்.

பம்பாய் டில்லி என்று எங்கெல்லாமோ சுற்றுப் பயணம் போய்விட்டு ஊருக்குத் திரும்பின எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. வயலெட் வீட்டிலில்லை. விஜயா அவளை வெளியேற்றி யிருந்தாள்.

''நான் வருகிற வரையில் காத்திருப்பது தானே? அவசரப்பட்டு ஏன் அனுப்பினாய்?''

'' எனக்கு வேலைக்காரி தேவையில்லை. அனுப்பினேன்.''

'' இரண்டு மாதச் சம்பளமாவது தந்தாயா? நம்மை நம்பி வாழ்ந்து வந்த அந்தப் பெண்ணிடம் காசு எதுவுமிராது தெரியுமா? சேர்த்து வைத்திருந்த பணத்தையெல்லாம் செலவழித்து அவள் சிப்பாய்களுக்கு 'ஸ்வெட்டர்' தைத்து விட்டாள். அவளுக்கு ஏதாவது பணம் தந்து நீ அனுப்பியிருக்க வேண்டும்.''

''போனவளா? தீவிர தொழிற்சங்கத் தலைவர்கள்கூட இப்படிப் பேச மாட்டார்கள்.''

''போதும், உன் பிதற்றல்! உள்ளே போ!''

மாதங்கள் உருண்டோடின. மீண்டும் குளிர் காலம் வந்தது. சென்ற வருஷத்தைவிடக் குளிர் அதிகம். எங்கும் கம்பளிச் சட்டைகளும், தொப்பிகளும் தென்பட்டன. இருட்டி விட்டால் ஆட்களை அடையாளம் கண்டு கொள்வது பிரயாசை.

சுவாமி சிவானந்தரின் ஆசிரமத்திலிருந்து ஆபீஸ் ஜீப்பில் வந்து கொண்டிருந்தேன். என்னுடன் பிரயாணம் செய்த அமெரிக்கர் நமது கலாசாரத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். 'அத்வைத'த்தில் ஆராய்ச்சி செய்து அநேகம் நூல்களை வெளியிட்டவர். வடமொழியை

ரஞ்சித்தின் தீர்க்கதரிசனம்!



இங்கிலாந்து கோஷ்டியோடு ஆடச் செல்லவிருந்த ராஜ்கோட் இளைஞர் அமர்சிங்கின் பந்து வீச்சைக் கிரிக்கெட் மன்னர் ரஞ்சித் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். ''அமர்சிங்கின் பந்து வீச்சைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று ரஞ்சித் சிங்கிடம் வினவினார்கள். ரஞ்சித் உடனே, ''அமர்சிங் நன்கு பந்து வீசுகிறார். அவர் நல்ல பௌலராக முடியும்'' என்று பதில் சொன்னார்.

சில நாட்கள் கழித்து ரஞ்சித் மீண்டும் அமர்சிங்கின் பந்து வீச்சைப் பார்வையிட்டபோது, அமர்சிங் ஒரு விக்கெட்கூட எடுக்கவில்லை. ஆனால் ஏன்பது ரன்களைக் கொடுத்தார் எதிரி ஆட்டக்காரர்களுக்கு. அப்போது யாரும் கேட்காமலே ரஞ்சித், ''இதோ ஒரு பெரிய பௌலர் தயாராகிக் கொண்டிருக்கிறார்!'' என்று சொன்னார். என்ன ரஞ்சித் இப்படிச் சொல்கிறாரே என்று ஆச்சரியமாயிருந்தது பலருக்கு. ஆனால் கிரிக்கெட் மன்னர் ரஞ்சித்தின் தீர்க்கதரிசன வார்த்தைகள் அந்த வருஷமே நிரூபணமாயிற்று. அமர்சிங் இங்கிலாந்தில் முதல்தரப் பந்தயங்களில் 1062 ஓவர்கள் பந்து வீசி 111 விக்கெட்டுகளைப் பிரமாதமாக எடுத்து 'இங்கிலீஷ் சீஸனில் நூறு விக்கெட்டுகளுக்கு மேல் எடுத்த முதல் இந்தியர்' என்ற புகழைப் பெற்றார். அநுபவக் கிரிக்கெட்காரர்கள் ஒருசில மாட்சுகளில் சோடை போகலாம். ஆனால் அவர்களது திறமையைத் தட்டிக் கொடுத்து ஆதரவு கொடுத்துக் கொண்டிருந்தாலல்லவோ முன்னேற முடியும்? - குண்டுமணி

நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றவர். பேச்சு வாக்கில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

'வயலெட், இண்டிகோ, ப்ளு என்று நாம் தனித்தனியாகப் பேசுகிறோம். அவை அனைத்தும் ஒன்று சேர்ந்தால் ஒளிருவது வெள்ளை நிறம்தான்! 'நான்', 'நீ' என்ற பேத வித்தியாசமே அர்த்தமற்றது. பெரியதொரு ஜுவாலையிலிருந்து தெறித்த பொறிகளுக்கு ஏது தனித் தன்மை? அப்படி ஒரு தனித் தன்மை இருப்பதாக எண்ணுவதுதான் பேதைமை.... மாயை.....''

அவர் இப்படிக் குறிப்பிடப் போய் என் எண்ணங்கள் எங்கோ ஓடின. வயலெட் என்ற பெண்ணைப் போய்த் தொட்டன. கண் காணாத இடத்தில் நாட்டுக்காகப் போராடும் சிப்பாய்களுக்கு அவள் 'ஸ்வெட்டர்' பின்னி அனுப்பியதன் அடிப்படைத் தத்துவம் என்ன? அவர்களும் தானும் ஒன்று என்ற எண்ணம் தானே? தன்னை ஊசியாகக் குத்தும் குளிர் அவர்களையும் வதைக்கும் என்ற அனுதாப உணர்ச்சிதானே? எல்லாம் பிரம்ம சொரூபம் என்று அழகாக எடுத்துச் சொல்லுமளவு அவளுக்கு ஏட்டுப் படிப்பில்லை. ஆனால் பண்பு பெற்ற அவள் உள்ளம் அனுபவத்தில் உணர்ந்திருந்தது..... அவள் என்ன ஆனாள் என்று அறிந்து கொள்ள என் மனம் துடித்தது.

அன்று இரவு உணவருந்தும் போது வயலெட்டைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன்.

''என்ன ஆனாளோ.... எங்கு கஷ்டப்படுகிறாளோ?''

'' ஏன், இந்தப் பாசாங்கு? உங்களுக்கா தெரியாது, அவள் எங்கிருக்கிறாள் என்று? சுற்றுப் பிரயாணம் போகிறேன் என்ற சாக்கில் அவளைச் சந்தித்து விட்டுத்தானே வருகிறீர்கள்?''

''என்ன உளறுகிறாய் நீ?''

'' எனக்கு எல்லாம் தெரியும். அந்தப் பெண்ணை உங்களால் அவ்வளவு எளிதில் மறக்க முடியாது. சொக்குப் பொடி போட்டல்லவா மயக்கியிருக்கிறாள்? ஆனால் எங்கே இரகசியமாகக் குடி வைத்திருக்கிறீர்கள் என்பதுதான் புரியவில்லை. புது தில்லியா.....? தேராதூனா.... முசோரியா.... இல்லை, புனிதமான ஹரித்துவாரா?''

''வாயை மூடு! யார் காதிலாவது விழுந்தால் சிரிப்பார்கள்!'' என்று கூறி விட்டு அதே வேகத்தில் புது தில்லி 'கரோல் பாகி'ல் உள்ள 'பாட்டி மெஸ்'ஸுக்குச் சாப்பிடப் போய்விட்டேன். பாட்டியின் சமையலறைக்குப் பக்கத்திலிருந்த அறையில் பத்துப் பேருக்கு மேல் குழுமியிருந்தார்கள். அன்று பத்திரிகையில் வெளியான செய்திகளை விவாதித்துக் கொண்டிருந்தார்கள். சமையல் தயாராவது வரையில் அசை போட ஏதாவது வேண்டுமல்லவா?

''இன்று குளிரில் நாலு பேர் செத்தார்களாம்! நேற்று கான்பூரில் ஏழு பேர் பலி. சர்க்கார் ஏன் வாளாவிருக்கிறார்கள்? குளிரில் மக்கள் சாகாமல் காப்பாற்றுவது அவர்கள் பொறுப்பில்லையா? குடியிருக்க இடமில்லாதவர்களுக்கு 'ஷெல்டர்'கள் கட்டித் தந்தால் என்னவாம்?''

'' என்னைக் கேட்டால் தில்லியில் கண்காட்சிப் பொருள்களாகத் திகழும் பெரும் கட்டடங்களை — இரவில் ஏழைகளுக்குத் திறந்துவிட வேண்டும். எத்தனை பிச்சைக்காரர்கள் குளிருக்காக 'யூரினல்'களில் முடங்குகிறார்கள், தெரியுமா?''

'' சமாதிகளில் உயிருள்ள மனிதர்களுக்கு ஏது இடம்? தவிர, இவர்களை உள்ளே விட்டால் கட்டடங்களை ஒரே நாளில் அசுத்தப்படுத்தி விடுவார்களே! நாளைக்கு அயல்நாட்டிலிருந்து வரும் யாத்திரிகர்களுக்கு எதைக் காண்பிப்பது?''

''பசியா, ரசனையா? பழைய பிரச்னை தான்! ஆனால் குளிரில் மக்கள் மடிவது கொடுமையிலும் கொடுமை!''

''போதும், குளிரைப் பற்றி விவாதித்தது. சாப்பிட வாருங்கள்'' என்று பாட்டி அழைக்கவும் பேச்சு அத்துடன் நின்றது.

ஆனால் எண்ணங்கள் எல்லாம் குளிரில் மடியும் மக்களுக்கே மீண்டும் மீண்டும் தாவின. எங்கோ யுத்தகளத்தில் போராடும் முகம் தெரியாத ஜவான்கள் குளிரில் நடுங்கக் கூடாது என்று எண்ணி, தான் சேர்த்து வைத்த பணத்தையெல்லாம் 'ஸ்வெட்டராக'ப் பின்னின வயலெட்டைப் போய்த் தொட்டன. அவள் என்ன ஆனாள்?

ஜீப் முசபர் நகரை நெருங்கிக் கொண்டிருந்தது. குளிர் தாங்க முடியவில்லை. 'மப்ளரை' எடுத்துக் காதைச் சுற்றி அணிந்து கொண்டேன். இருந்தும் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. கம்பளிச் சட்டைகளுக்குள் ஊடுருவிப் பாய்ந்தது குளிர். சூடான தேநீர் அருந்த விரும்பினேன்.

திடீரென்று ஜீப்பை நிறுத்தினான் டிரைவர். சாலையில் ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. விபத்தோ என்று எண்ணினேன். ''குளிரில் செத்து விட்டதாம்'' என்றான் டிரைவர். மிருகமா மனிதனா என்று அவன் விளக்கம் தரவில்லை. நான் இறங்கிச் சென்றேன்.

'' பிச்சைக்காரி என்றாலும் தங்கமான மனசு. இவள் இங்கு வந்து மூன்று நாட்கள் தாம் இருக்கும். கிடைப்பதையெல்லாம் பிறருக்குத் தந்துவிடும் குணம். நேற்றுத்தான் நான் அவளுக்கு ஒரு பழைய கம்பளி தந்தேன். அதை அனுதாப மேலீட்டால் அவள் யாருக்குத் தந்தாளோ?'' என்றான் மக்கடைக்காரன்.

ரூர்க்கியை அடைகிற வரையில் வயலெட் குளிரில் அலங்கோலமாகச் செத்துக் கிடந்த காட்சி என் மனத்தை விட்டு அகலவில்லை. அவளுக்கு இந்தக் கதி நேர யார் பொறுப்பாளி? அவளுடைய மனிதாபிமானத்துக்குக் கிடைத்த பரிசா இது? நாகரிக மக்களிடம் அரிதாகி வரும் பரந்த மனப்பான்மையை அவள் வளர்க்கப் போனதன் பலனா?

வீட்டுக்கு வந்தவன் விஜயாவிடம் எதுவும் பேசவில்லை.

'' ஏன் இவ்வளவு நாழியாச்சு?''

''..........................''

'' வழியில் வயலெட்டைப் பார்க்கப் போயிருந்தீர்களோ?''

'ஆம்' என்று சொல்ல நினைத்தவன் ஏனோ மௌனமாக மாடிக்குச் சென்றேன்.



ரூர்கேலா ஸ்டீல் ப்ளாண்ட் சீப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K.R. கோபாலன் அவர்கள் குமாரத்தி சௌ. ஜெயந்தி, B.Sc., க்கும், சென்னை, இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் ஆராய்ச்சி வல்லுனராக உள்ள டாக்டர் S.V. கண்ணன், M.Sc., Ph.D.க்கும் சென்னையில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடை பெற்றது.

வாழ்க மணமக்கள்!

ஒரு கணம் தன் பிரதிபிம்பத்தைக் கண்டு லலிதாவே ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

பின்னிவிட்ட கருள் கேசம்.... அரை முதுகு வரைதான் தொங்கிற்று என்றாலும் கருமை மாறாமல், அடர்த்தியாய், ''புஸ்ஸென்று'' படமெடுத்து விரிந்திருந்தது. கருநீலத்தில் சற்று — சற்றே — குட்டைக் கை ரவிக்கை.... நீலமும் பச்சையும் கறுப்பும் வெள்ளை மீது இணைந்து இணைந்து 'மாடர்ன் ஆர்ட்' வடிவத்தில் கண்ணைக் கவர்ந்த நைலான் ஜார்ஜெட் புடவை அவள் உடலைக் கவ்வியபடி, அவள் அழகைக் கோடிட்டுக் காட்டிற்று.

அவளுக்கா நாற்பது வயது? நம்பத்தான் முடியுமா ?

கருள் கேசத்தில் இன்னும் ஒன்றுகூட நரைக்கவில்லை. ஆண்டவன் அளித்த இந்தப் பரிசுக்கு நன்றி செலுத்துவதாகவே எண்ணிக் கொண்டுதான் அவள் கூந்தலை இன்னும் பின்னித் தொங்க விட்டுக் கொள்கிறாள். கொண்டையாய் அமைத்துக் கொண்டால் வயதில் ஏழெட்டுக் கூடிவிட்டாற் போல் தெரிகிறதே? முப்பது வயதே மதிக்கத்தக்க இந்தத் தோற்றம் அப்போது இருக்குமா ? இந்தத் தோற்றம் தரும் பெருமைதான் இருக்குமா?

குட்டைக் கை ரவிக்கை, பூப்போட்ட 'மாடர்ன்'' சேலைகள் — இவை அவள் விரும்பி அணிபவை. பட்டுப் புடவையை அவள் வயதை அதிகப்படுத்தும் விரும்பத் தகாத உடையாய்க் கருதி ஒதுக்கி வந்தாள்.

ஜெயராமனுக்கு, மனைவியின் இளமைத் தோற்றம் மாறாத உவகை தரும் விஷயம்.... குப்பென்று நரைத்துவிட்ட அவர் தலை மயிர் வெள்ளி மகுடம் வைத்தாற்போலிருக்க, அதனருகே கருமை மாறாத அவள் கருள் கேசத்தின் தரிசனம் பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்யும். ''என்ன? உங்கள் மனைவியா?'' என்று யாராவது ஆச்சரியம் பொங்கக் கேட்டால் அவர், ''ஆமாம்... நம்ப முடியவில்லை, இல்லையா?'' என்பார்.

கல்லூரியில் படிக்கும் தன் இரு மக்களோடு சினிமாவுக்கோ, கடைகளுக்கோ அடிக்கடி லலிதா போவதுண்டு. பத்தொன்பது வயது மகன் கண்ணன் ஒரு பக்கத்திலும், பதினேழு வயது மகள் ரமா மறு பக்கத்திலுமாக நடந்து வர, நடுவில் பெருமையே உருவாய் நடப்பாள் லலிதா.... ரமாவின் புடவையும் ஏறக்குறைய ஒரே டிஸைன்தான், அதே நைலான் ஜார்ஜெட்தான்! ரமாவின் ரவிக்கையின் கை இன்னும் கொஞ்சம் குட்டையாய் இருக்கும். தாயைப் போலல்லாமல் இன்னும் கொஞ்சம் ஒல்லியான உடல்வாகு.... மற்றபடி அதே மாதிரி பின்னலிட்ட கருள் கேசம், அதே மாதிரி கைப்பை, காலணிகள். பார்ப்பவர்கள் ரமாவிடம், ''உன் சகோதரியா?'' என்னும்போது லலிதா, ''இல்லை... நான் அவள் தாயார் !'' என்று இன்பம் பொங்கச் சொல்வாள்.

ஆம்...லலிதா பெருமைப்படும் மற்றொரு விஷயம் அவள் மக்கள்தாம். அவள் தாய்மை தூய மலரைப் போன்ற நறுமணம் கமழும் அழகு வடிவம். கண்ணன், ரமா... ''இந்த மாதிரி இரண்டு குழந்தைகள் உலகிலேயே உண்டா ?'' என்று அவள் பூரித்த நாட்கள் எத்தனையோ?

தன்னிடமிருந்து சற்றே பிரிந்துவிட்ட தன் உயிரின் வேறு உடல்களாகவே தன் மக்களை நினைத்திருந்தாள் லலிதா... அவர்கள் பாங்காகச் செய்த ஒவ்வொரு செயலிலும் அவள் இன்பத்தின் சிகரத்தையே அடைந்தாள். கண்ணன் ஒரு முறை தன் கல்லூரி பெற்றோர் தினத்தில் அன்று மேடையேறிச் சொற்பொழிவாற்றப் போகிறான் என்று கேட்ட போது, அன்று காலைப் பொழுது புலர்ந்து அவள் கண் விழித்த கணத்திலிருந்து கண்ணனின் சொற்பொழிவைச் செவியுற்று, ''ஆஹா ! என்னமாய்ப் பேசினான்!'' என்று உளம் மகிழ்ந்து, ''யாரால் இப்படிப் பேச முடியும்?'' என்று திரும்பத் திரும்ப நினைத்து மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தாள்... அதே போல், ரமா தன் கல்லூரி நாடகமொன்றில் நடனமாடப் போவதை அறிந்தபோது, அன்று முழுதுமே வேறு எதைப் பற்றியும் நினைக்க இயலாமல், உள்ளமும் உயிரும் இனிக்க, ''என் குழந்தை மாதிரி யார் ஆட முடியும்?'' என்று தனக்குத் தானே சொல்லிச் சொல்லிப் பூரித்தாள் அவள்.

இளமை அவள்



அத்தகைய அற்புதம்தான் அவள் தாய்மை. அப்படியொரு புனிதம். ''லலிதாதானே! அவளுக்குச் சதா தன் குழந்தைகளைப் பற்றித் தான் பேச்சு.... என்னமோ வேறே யாருமே குழந்தைகளை வளர்த்துக் கல்லூரிக்கு அனுப் பாத மாதிரி....'' என்று அவள் தோழிகள் கேலிசெய்வது உண்டு...


''லலிதா தன் வாழ்க்கையை ரொம்ப 'எளிமை'யாக்கிக் கொண்டு விட்டாள். ஒன்று, தான் எவ்வளவு சின்னவளாய்த் தெரிகிறோம்கிற எண்ணம். இன்னொன்று தன் குழந்தைகளைப் பத்திப் பெருமை.... வேறே கவலையே கிடையாது!'' என்றும் சிலர் அவளைப் பற்றி விமரிசனம் செய்வதும் உண்டு.

அப்படித் தன் வாழ்க்கையை எளிமையாக் கிக் கொண்டதனாலேயே அவள் மிகவும் சந் தோஷமாக இருந்தாள்....

ஆனால்....

முதலிலிருந்தே லலிதா அதைக் கவனிக்கத் தவறவில்லை. கண்ணனிடம் ஒரு மாறுதல்.... தாயோடு வெளியே செல்ல அவனிடம் ஒரு தயக்கம்...''கண்ணு! நீயும் நானும்

எதிரி! ருக்மிணி பார்த்தசாரதி.



அந்தக் கடைக்கு...'' என்று அவன் ஆரம்பிக்குமுன் இடைமறித்து அவன், ''நான் வரலே...ஒரு நண்பனைப் பார்க்கணும்'' என்று வெளியே கிளம்பிவிடும் அவசரம்...

ஒரு முறை.... கல்லூரியில் அவன் பரிசு வாங்கியிருந்தான். ஆனால் இந்த விஷயத்தைப் பற்றித் தாயிடம் சொல்லவில்லை. மாலையில் கையில் ஸாடின் ரிப்பன் கட்டப்பட்ட புதுப் புத்தகத்தோடு அவன் வீடு வந்தபோது தான் அவனுக்குப் பரிசு கிடைத்த விஷயமே அவளுக்குத் தெரிந்தது. அடடா! முன்பே தெரிந்திருந்தால் அவன் மேடை ஏறிப் பரிசு பெறும் காட்சியைக் கண் குளிரத் தரிசித்திருப்பாளே?

''என்கிட்டே ஏண்டா முந்தியே சொல்லல்லே?'' என்று குரலெல்லாம் குறையோடு கேட்டாள் லலிதா.

''சொன்னால் நீ அங்கு வந்திருப்பியே!''

அவள் ஒரு கணம் குழம்பிப் போனாள். 'வந்திருப்பியே!' என்றால்? அவள் வருவதை அவன் விரும்பவில்லையா?

''நான் வந்திருந்தால் உனக்குப் பிடிச்சிருக்காதா?''

சட்டென்று அவன் முகமெல்லாம் அசடு வழிந்தது.

அதேபோல ரமாவின் விஷயத்திலும்...

அன்று....

ஞாயிற்றுக்கிழமை... காலையில் தினப் பத்திரிகையைப் பார்த்தவாறே காப்பி குடித்துக் கொண்டிருந்த ரமா, ''அடடா! அருமையான படம்! மார்னிங் ஷோ! போகலாமா, அம்மா?'' என்று உற்சாகமயமாய்க் கேட்டாள்..... அந்த உற்சாகம் உடனே லலிதாவின் தாய் மனத்தையும் தொற்றிக் கொண்டது. ''ஓ! போகலாம்!'' என்றவள், அவசரமாகச் சமைத்துவிட்டு, நொடிப்பொழுதில் நைலான் புடவையும், பின்னலிட்ட கூந்தலுமாய்த் தன்னை அலங்கரித்துக்கொண்டு தயாரானாள்.

ரமா வாய்விட்டுப் பதில் சொல்லவில்லை. கண்கள் தாயைப் பார்த்த விதத்தில் இத்தனை நாட்களில் இல்லாத ஏதோ உணர்ச்சி — கோபமா? பொறுமையின்மையா? வெறுப்பின் சாயைகூடத்தானா?

''நேரமாச்சு! கிளம்பும்மா!'' என்று சரசரவென்று தெருவில் இறங்கி நடந்த மகளைப் பரிதாபமாய்ப் பார்த்தவாறே அவளைப் பின்தொடர்ந்தாள் லலிதா.

ரமாவினுடையது பெண் மனம். இது கூடவா சரியாகப் புரியவில்லை, அந்தத் தாயாருக்கு?

அன்று மாலை லலிதாவால் வீட்டில் தங்க முடியவில்லை. இத்தனை நாட்கள் தான் நிறைவென்று நினைத்திருந்த ஒன்று நிஜத்தில் — வெறுமைதான் என்ற உணர்வைத் தாங்கவே முடியவில்லை.... ''வீட்டைப் பார்த்துக்கோ, கண்ணு! இதோ, கொஞ்சம் வெளியிலே போயிட்டு வரேன்!'' என்று குரல் கொடுத்துவிட்டுக் கோயிலை நோக்கி நடந்து சென்றாள். நெஞ்செல்லாம் வலித்தது....

அவள் வீடு திரும்பியபோது இருட்டிவிட்டது..... ஹாலில் பேச்சுக் குரல்கள் கேட்டன — அவள் தன் உயிரினும் உயர்வாகப் போற்றிய அவள் மக்கள்தாம் —

''எனக்கு நம்ப அம்மா மேலே ஒரே கோவம், ரமா......''

''ஏன், கண்ணு?''

''நான் போன வாரம் என் நண்பன் வீட்டுக்குப் போனேன். அவனுடைய அம்மா டிபன் கொடுத்தாள். எப்படி ஜம்னு இருந்தாள் தெரியுமா? தலையிலே அழகா நரை மயிர்..... பார்த்தவுடனேயே அவனுடைய அம்மான்னு தெரிஞ்சது.... நம்ப அம்மாவைப் பார்த்து யாருமே என்கிட்டே, ''உன் அம்மாவா?''ன்னு கேட்டதில்லே. ''என் அம்மா''ன்னு சொன்னால் ''சரடு விடாதேடா''ன்னு பெரிசாச் சிரிக்கிறான். எனக்கு எப்படி இருக்கு, தெரியுமா? ஒரே... உம்..''

''அவமானமா இருக்கு, இல்லேடா கண்ணு?''

''ஆமாம், ரமா.....!''

''எனக்கும்தான்!''

ஒரு கண மௌனம்.... லலிதா மரமாய், கண்கள் பனிக்க, இருளோடு இருளாய் நின்றாள்.

ரமாவின் குரல் அழுகையோடு கலந்து ஒலித்தது. ''நேற்று நான் விமலா வீட்டுக்குப் போயிருந்தேன். அடுத்த வாரம் பிக்னிக் போறோமே, அதைப் பத்திப் பேச... பிக்னிக்குக்குப் புளியஞ் சாதம் வேணும்னு எல்லாரும் ஆசைப்படவே நான், ''எங்கம்மாவைக் கலந்து தரச் சொல்லட்டுமா?''ன்னு கேட்டேன். உடனே விமலாவின் அம்மா என்ன சொன்னாள் தெரியுமா? 'உங்கம்மாவுக்குப் பூப்பூவாப் புடவை கட்டி, தலையைப் பின்னித் தொங்கவிட்டு, நாளுக்கு நாள் சின்னவளா ஆகவேணும்னு தெரியும்.... புளியஞ் சாதம் பிசையத் தெரியுமோ?' அப்படீன்னு குத்தலாய்க் கேட்டாள்.....!'' ரமாவின் குரல் உடைந்து விம்மல்களாய்த் தெறித்தது.

வெளியே, இருளோடு இருளாய் நின்றிருந்த லலிதாவின் கன்னங்களிலும் கண்ணீர் வழிந்தோடியது. கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் ஹாலைக் கடந்து உள்ளே சென்ற போது, கண்ணனோ ரமாவோ பேசவில்லை. அந்த இரு இதயங்களும் கதறி அழுவதை மட்டும் அவள் நன்கு உணர்ந்து கொண்டாள்...

உள்ளே சென்று தன் அலமாரியைத் திறந்தாள் லலிதா.... வண்ண வண்ண மலர்கள் அச்சிட்ட கண்கவர் சேலைகள்.... எல்லாவற்றையும் எடுத்து, ரமாவின் அலமாரியில் வைத்துப் பூட்டினாள். ரமாவின் டிரஸிங் டேபிள் மீது கோபத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் எறியப்பட்டிருந்த கொண்டை ஊசிகளைப் பொறுக்கி எடுத்து, தன் உடைமைகளோடு வைத்துக் கொண்டாள்.

இப்போது அவள் கண்களில் கண்ணீர் இல்லை. நெஞ்சில் அந்த வலியும், கனமும்கூட இல்லை.

தன் மக்கள் — தன் இளமைத் தோற்றம் — இரண்டுமே அவள் பெருமைக்குப் பாத்திரமான விஷயங்கள்.....அந்த இரண்டுக்குமிடையே பலத்த போட்டி.

ஆனால், அவ்விரண்டையும் தராசில் இட்டுப் பார்க்கத்தான் வேண்டுமோ? எந்தத் தட்டு கீழே சாயும் என்று அந்தத் தாயாருக்குத் தெரியாதா?


இடுக்கண்
களைந்திடும் நட்பு போல்
வலியைப்
போக்கிடும்
'ஆஸ்ப்ரோ'
'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன்
அதிவேகமாக வலியை வெளியே
G.45.TM




புகழ்பெற்ற உயிர்நூல் வல்லுநர் ஒருவர் ஒரு குரங்குக்குப் பந்தாடக் கற்பிக்க வெகுநேரம் முயன்றும் பலனளிக்காததால் அந்தக் குரங்கைப் பந்தடிக்கும் மட்டையோடு ஓர் அறையில் வைத்துப் பூட்டிவிட்டார். சிறிது நேரத்துக்குப் பிறகு குரங்கு என்ன செய்கிறது என்று பார்க்க அவர் குரங்கு இருந்த அறைக் கதவின் சாவித் துவாரம் வழியே உள்ளே பார்த்தார். குரங்கும் அத் துவாரத்தின் வழியே அவரையே பார்த்துக் கொண்டிருந்தது! - ருசி

விலை காட்டும் தராசு!

எடை காட்டும்போதே எடை போடப்படும் பொருளின் விலையையும் காட்டும் தராசு ஒன்றை டாக்டர் வில்ஹெல்ம் கண்டுபிடித்துள்ளனர். கடைக்காரர் இந்தத் தராசில் பொருளைப் போட்டு எடை இட்டதும், தராசில் உள்ள ஒரு விளக்கு அப் பொருளின் விலையைக் காட்டுகிறது. -தகவல்: சம்பத்குமார்

ஆதாரம்: செவிஸ் நாடு





சமீப காலமாக நாவல்களில், சிறு கதைகளில் நிறைய ஆங்கிலச் சொற்கள் தமிழில் கையாளப் படுவதால் அதிக மவுசு அடைந்துள்ள தமிழ் எழுத்து - ஃ - கன்னிகா



93 கமாக்கள்; ஒரு ஃபுல்ஸ்டாப்!

உலகத்திலேயே மிக நீளமான வாக்கியத்தைத் தம் நாவலில் பயன்படுத்தியிருக்கும் நாவல் ஆசிரியர் யார் தெரியுமா? விக்டர் ஹ்யூகோ! இவர் தம்முடைய "ஏழை படும்பாடு" என்ற பிரபல நாவலில் எவரும் பயன்படுத்தாத அளவுக்குப் பெரிய வாக்கியத்தைப் பயன்படுத்தியுள்ளார்.


இந்த நீண்ட வாக்கியத்தில் விக்டர் ஹ்யூகோ 823 வார்த்தைகளையும், 93 கமாக்களையும், 50 செமிகோலன்களையும் போட்டிருக்கிறார்!

தகவல்: வி. எஸ். ராஜகோபால் ஆதாரம்: "டிட்பிட்ஸ்"

வேடிக்கைக் கணக்கு

1	2	3	4	5	6
12	11	10	9	8	7
13	14	15	16	17	18
24	23	22	21	20	19
25	26	27	28	29	30
36	35	34	33	32	31
111	111	111	111	111	111

"ஸையன்ஸ் டைஜஸ்ட்" "பாலி"



கம்யூனிஸ்ட் ஜெயிலில் மூன்று கைதிகளிடையே நிகழ்ந்த பேச்சு:

"நான் டியூட்டிக்குச் சற்று நேரம் கழித்துப் போனேன். அதற்காகச் சிறையில் தள்ளி விட்டார்கள்."

"நான் சற்று நேரம் முந்திப் போனேன். என்னை உளவாளி என்று தீர்மானித்துச் சிறைப்படுத்தி விட்டார்கள்."

"நான் சரியான நேரத்துக்குப் போனேன். என்னிடம் அமெரிக்கக் கடிகாரம் இருக்க வேண்டும் என்று குற்றம் சாட்டி இங்கே அனுப்பிவிட்டார்கள்!" ரா. வி.

பெண்மணிகள் தலையில் தொப்பியைப் போல அணிந்து கொள்ளக்கூடிய சிறிய குடைகள் இப்பொழுது லண்டனில் பழக்கத்துக்கு வந்துள்ளன. இவை அளிக்கும் வசதி: ஞாபகமறதியால் குடையை எங்கேயாவது விட்டுவிடாமல் இருப்பது!

தொப்பியையே மறந்து போய் விட்டு விட்டால் தான் உண்டு.

தகவல்: கன்னிகா ஆதாரம்: பேஜண்ட்





வட்ட மேஜை

சமீபத்தில் ஒரு நாள் மாலை கடற்கரை செல்லும் நோக்கத்துடன் வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தேன். அவ்வழியே, வயதான மூன்று பெரியவர்களும் வந்து கொண்டிருந்தனர். திடீரென்று பத்துப் பதினைந்து நபர்கள் அந்தப் பெரியவர்களை வழிமறித்துக் கொண்டு அவர்களுடைய ஜாதியைப் பற்றியும், குலத்தைப் பற்றியும் இழித்தும் பழித்தும் பேசினர். ஆனால் அப்பெரியவர்களோ பொறுமையுடன் ஒதுங்கிச் சென்றனர். அப்படியிருந்தும், அவர்கள் விஷமத்தனத்தைக் கைவிடவில்லை.

நடந்து முடிந்த தேர்தலின் பிரதிபலிப்புத்தான் மேற்கூறிய இழிசெயல். பிராமணர்கள் தங்கள் கட்சிக்கு வோட்டளிக்காததால்தான் மயிலாப்பூரையும் மாம்பலத்தையும் இழக்க நேர்ந்தது என்று தி. மு. க. தலைவர்கள் பேசி வருவது மறைமுகமாக வன்முறையைத் தூண்டுவதற்குத்தானே ஒப்பாகும்? நான் விரும்பும் எந்தக் கட்சிக்கும் வோட்டளிக்க ஒரு குடிமகனுக்கு உரிமை உண்டு. மிரட்டி வோட்டு வாங்க முற்படுவது எந்த நாகரிக நாட்டிலும், எந்த நாகரிக மனிதனும் ஏற்றுக் கொள்ளாத செயல்.

சென்னை — 5
31—3—71 சாலையோன்

'**மு**கமது பின் துக்ளக்' தமிழ்ப் படம் இப்பொழுது இல்லியிலும், தமிழகத்தில் மூப்பத்திரண்டு இடங்களிலும் ஓடிக் கொண்டிருக்கிறது. சென்னை நகரில் மட்டும் ஓட்ட முடியாத மோசமான நிலைமை உருவாகியிருக்கிறது. படத்தின் வசூல் சென்னையில் குறைய வில்லை. ஆயினும் படத்துக்குச் சென்னை தியேட்டர்களில் இடம் கிடைக்க வில்லை. படத்தை ஓட்ட முடிய வில்லை என்ற நெருக்கடி படத்துக்கு ஏற்பட்டிருக்கிறது. 'முகமது பின் துக்ளக்' படத்துக்கு இன்று வந்துள்ள துன்பம் பிற படங்களுக்கு நாளையோ அதன் பின்னரோ வரலாம் அல்லவா?

சென்னை - 28
25—3—71 பிரஸ்டீஜ் புரடக்‌ஷன்ஸ்

(இக்கடிதத்துடன் பிரஸ்டீஜ் புரொடக்‌ஷன்ஸார் விரிவான முறையில் பல தியேட்டர்களில் வசூல் விவரம் மேற்படி படத்துக்கு எழுதி அனுப்பி இருக்கிறார்கள். இடவசதி இன்மையால் அவை இங்கு தரப்படவில்லை. மொத்தம் 13 நாட்களில் ஆறு கொட்டகைகளில் -- சில ஒரு காட்சி மட்டும் -- வசூல் 1,30,595 - 56 என்பது குறிப்பிடத் தக்கது.)

★ **இக்குறிப்பிட்ட கடிதம் ரூ. 15 - பரிசு பெறுகிறது**

நான் திருவல்லிக்கேணி ராமகான சபாவில் உறுப்பினன். 28—3—71 அன்று என்.கே.டி. கலாமண்டபத்தில் ராமகான சபாவின் ஆதரவில் சோவின் 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' நாடகம் நடைபெறுவதாக இருந்தது. டிக்கெட்டுகளும் அடித்து உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டுவிட்டது. ஆயினும், முற்றிலும் எதிர்பாராவண்ணமாக நாடகம் ரத்து செய்யப்பட்டு விட்டது.... காரணம்?

முதல்வர் மு. க. அவர்களின் குமாரர் ஸ்டாலின் நடிக்கும் 'முரசே முழங்கு' நாடகம் என். கே. டி. கலாமண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. ஏற்கனவே ஒப்பந்தமாகி யிருக்கும் நிகழ்ச்சியை ரத்து செய்து பதவியைப் பயன்படுத்தி வேறு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பொறுப்பில் அமர்ந்து வழிகாட்டிகளாக விளங்கவேண்டியவர்களே இப்படி வழி தவறி நடந்தால் நாடு என்னாகும்?

சென்னை — 5
30—3—71 துலாமவன்

★ **செ**ன்னை கடற்கரைச் சாலை சிலைகளுக்குப் பெயர் போனது என்பது தெரிந்த விஷயம். அங்கே பல ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட சில சிலைகளும், சமீபத்தில் எழுப்பப்பட்ட பல சிலைகளும் உள்ளன.

அச்சிலைகளுக்குக் கீழே பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் பல வருடங்களுக்குமுன் சிலைகள் எழுப்பப்பட்டதன் நோக்கமும், தற்காலத்தில் சிலைகள் நிறுவப்படும் நோக்கமும் விளங்கும்! உதாரணத்துக்கு ஒன்று:

மாநிலக் கல்லூரி முன் உள்ள சிலை:

மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி, திராவிட வித்யாபூஷணம், மகாவித்துவான் உத்தமதானபுரம் வே. சாமிநாதய்யர், டி. லிட். (19—2—1855 — 28—4—1942) இராசதானிக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர். (1903 — 1919)

சமீபத்தில் திறக்கப்பட்ட சிலை:

கற்புக்கரசி கண்ணகி

திறப்பு விழாத் தலைவர்:

பொதுப்பணி அமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி

திறப்பாளர்:

சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம்
''உலகத் தமிழ் மாநாடு, சென்னை''
2 — 1 — 68

சிலை வழங்கியோர்: தமிழக மாணவரும் ஆசிரியரும்.

பழைய சிலைகளின் கீழே எவருடைய உருவத்தின் நினைவாக அச்சிலை திகழுகிறதோ, அவரைப் பற்றிய விளக்கமும் மற்றும் அது நிறுவப்பட்டதன் நோக்கமும் மட்டும்தான் காணப்படுகின்றன. ஆனால் சமீபத்திய சிலைகளின் அடியில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களோ...! என்னே காலத்தின் கோலம்!

சென்னை-28
22-3-71 ஆர். வேங்கடராமன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

Standardise on

PERKINS 6.354V
VEHICLE DIESEL ENGINE

the most reliable and inexpensive power unit

Why is one engine preferred? For clear exhaust, fast travelling with maximum load, smoothness, manoeuvrability and ease of operation.

Perkins is the ideally suited truck diesel engine because it ensures these regular features with other plus features. For example:—

Direct injection combustion system with distributor type fuel injection pump. Automatic advance and retard of the injection system and hydraulic governing ensure exceptionally low fuel consumption under all operating conditions.

Timing drive through helical gears.

Low weight per unit power and compactness mean extra payload.


All components that require routine service are easily accessible.

12 volt electrical equipment ensures positive and instant starting under normal conditions.

AND SIMPSONS ENSURE GENUINE REPLACEMENT PARTS ARE ALWAYS AVAILABLE READILY

Simpson & Co. Ltd.

202/203, Mount Road,
Madras-2.
Branches at: Ootacamund, Bangalore, Tiruchirapalli, Secunderabad.



S. 362